www.gnanam.info
www.gnanam.lk

மார்ச் 2022

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

262

விலை :
ரூபா 100/=



அமுதவிழா நாயகர்

'மக்கள் கலைமணி'

## இரா. அ. இராமன்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

# கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை

**416 732 1608**

என்னும் WHATSAPP இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

www.uthayannews.ca

UTHAYAN உதயன்

திக்கிக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

## இலங்கைச் சிறப்பிதழில்

பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.




தபால் முகவரி:-

Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com

ஞானம்
ஒளி:22
சுடர்:10
262

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்



## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்பு களின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந் தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகிய வற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**
*குணாளினி தயாநந்தன் (சாரங்கா)* **05**
*கனகசபாபதி செல்வநேசன்* **19**
*சிந்துஜா தவராசா* **28**
*மகாலிங்கம் மொழிவரதன்* **32**
*தம்பிலுவில் ஜெகா* **35**
*செல்லத்துரை சுதர்சன்* **36**
*மன்பிரட் ஜேர்க்ஸன் / மாவனல்லை எம்.எம். மன்சூர் (மொழிபெயர்ப்புக் கவிதை)* **47**

⊙ **சிறுகதைகள்**
*அன்டனூர் சுரா* **07**
*அலைமகன்* **20**
*குரு அரவிந்தன்* **29**
*நீ.பி. அருளானந்தம்* **37**

⊙ **கட்டுரைகள்**
*தி.ஞானசேகரன்* **03**
*கீத்தா பரமானந்தன்* **12**
*பேராசிரியர் செ. யோகராசா* **14**
*பேராசிரியர் சபா ஜெயராசா* **26**
*செங்கதிரோன்* **33**
*தி.ஞானசேகரன்* **48**

⊙ **நேர்காணல்**
*ஸ்ரீநாத் ராமலிங்கம் / ஞானம் பாலச்சந்திரன்* **42**

⊙ **பத்தி**
*பேராசிரியர் துரை மனோகரன்* **52**

⊙ **சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**
*கலாபூஷணம் கே. பொன்னுத்துரை* **54**

⊙ **வாசகர் பேசுகிறார்** **56**

# ஆசிரியர் பக்கம்

## மக்களை வாட்டி வதைக்கும்
## நலிவடைந்து செல்லும் நாட்டின் பொருளாதாரம்

தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறுகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. அத்துடன் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றைப் பெறுவதற்கு மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமையும் ஏற்பட்டு வருகிறது.

உணவுப் பொருட்கள், பால்மா, சமையல் எரிவாயு போன்ற பொருட்களுக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக அறியமுடிகிறது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக பணவீக்கம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பல குடும்பங்கள் அன்றாட உணவுத் தேவையைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பணவீக்கம், நுகர்வோரின் கொள்வனவுச் சக்தியைப் பெரிதும் பாதித்துள்ளது. நுகர்வோர் வழமையாக வாங்கும் அதே அளவு பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அதிகளவு பணத்தைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் வறிய மக்கள் அன்றாடம் பாவனைக்கு தேவையான பொருட்களை வாங்க முடியாமல் அவதிப்படுகின்றனர். பெரும்பாலான மக்களின் உணவான அரிசி மற்றும் பருப்பு வகைகளின் விலைகள் தொடர்ந்து உயர்ந்த வண்ணம் இருக்கின்றன. காய்கறிகள் பழங்கள் போன்ற சத்துள்ள பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்வடைந்து செல்கின்றன. இவற்றை வறிய மக்கள் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் போஷாக்கின்மை பாரிய நெருக்கடியை உருவாகக்கூடும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்து இருக்கும் நிலையில் வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் உணவுகளைக் குறைத்து உண்பதுடன் ஒப்பீட்டளவில் மலிவானதும் சத்துக் குறைந்த உணவுகளுக்கும் மாறியுள்ளதாகவும் அறியப்படுகிறது. இது அவர்களின் உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலை ஆகியவற்றில் எதிர்மறையான விளைவைக் கொண்டிருப்பதாகவும் ஐ.நா.வின் முகவர் அமைப்புகளின் ஒன்றான உணவு விவசாய அமையம் சுட்டிக்காட்டி இருக்கிறது.

விலைவாசி தொடர்ந்து உயர்வடைந்து செல்வது பொதுமக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பொருட்கள் சேவைகளுக்கான கட்டணங்கள் தொடர்ந்து உயர்ந்து மக்களை சிரமத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக்கி வருவது மிகவும் கவலையளிக்கும் விடயம்.

ஆனால் விலை உயர்வு போன்ற பாரிய பிரச்சனை குறித்து அரசாங்கம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

நாட்டுமக்களின் நலன் கருதி அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களை குறைந்த வருமானத்தில் வாங்கக் கூடியதாக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு உடனடியான தீர்வு காணப்படாவிடின் நாட்டில் வறுமை கோரத் தாண்டவம் ஆடுவதைத் தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்படும் என்பதை அரசாங்கம் இனியாவது சிந்தித்துச் செயற்படவேண்டும்.

❍❍❍



அட்டைப்பட அதிதி

# அமுதவிழா நாயகர்
## 'மக்கள் கலைமணி'
# இரா. அ. இராமன்

– தி.ஞானசேகரன்

எண்பதுகளின் முற்பகுதியில் எனக்கு அறிமுகமானவர் கண்டி இரா. அ. இராமன். கண்டியில் நடைபெற்ற ஓர் இலக்கிய விழாவில் நான் கலந்து கொண்டபோது அவர் என் அருகில் வந்து அமர்ந்து "உங்களது குருதிமலை நாவலை வாசித்தேன்...." என்று ஆரம்பித்து அந்நாவல் பற்றி விமர்சிக்கத் தொடங்கினார். அக்காலகட்டத்திலேதான் வீரகேசரிப்பிரசுரமாக குருமிமலை நாவல் வெளிவந்திருந்தது

மிகவும் எளிமையான தோற்றம், மெலிந்த உருவம், குழம்பிய தலைமுடி, தடித்த மூக்குக் கண்ணாடி, நெஞ்சிலே ஒரு கையால் அணைத்த படி ஒரு ∴பைல், சற்றுப் பழுப்பு நிறமான நூல் வேட்டி, அதற்கு ஏற்ற மேல்சட்டை சதா சிரித்த முகம். பேச்சிலே நெஞ்சைத் தொடும் இறுக்கம்.... இப்படித்தான் முதலில் கண்டி இரா. அ. இராமனின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. அதன் பின்னர் அவ்வப்போது கூட்டங்களில் சந்திக்கும்போதெல்லாம் இலக்கியம் பற்றியே ஏதாவது பேசிக் கொண்டிருப்பார் இராமன். 1989இல் நான் கண்டி வாசியாகிய பின்னர் அவருடனான நட்பு இறுக்கம் பெற்றது. அடிக்கடி எனது இல்லத்திற்கு வந்து என்னுடன் பலதும் பத்தும் பேசுவார். சிறிது சிறிதாக அவர் முன்னெடுக்கும் இலக்கியச் செயற் பாடுகளிலும் என்னை ஈடுபடச் செய்வார்.

கண்டியில் உள்ள மஹியாவ என்னும் இடத்தில்12-3-1942ல் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இராமன். குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக ஏழாம் வகுப்புவரைதான் இராமனால் கல்வி கற்க முடிந்தது. ஆனாலும் தனது 13 ஆவது வயதிலிருந்து வாசிப்புப் பழக்கத்தை அவர் விருத்தி செய்யத் தொடங்கினார். கண்டி நகரின் பொது நூலகம் அவரது அறிவுப் பசிக்குத் தீனிபோடத் தொடங்கியது.

1960இல் தனது பதினெட்டாவது வயதில் தன் சமூகத்தின் இளம் சந்ததியினரை ஒன்று திரட்டி 'மறுமலர்ச்சி' என்ற பெயரில் மன்றம் ஒன்றை நிறுவி அதன் தலைவராகப் பணியேற்று சமூக சீர்திருத்தச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினார் ஊருக்குள் இளைஞர்களை ஒன்று திரட்டி நாடகம், விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவற்றை நடத்தி இளைஞர்களை எப்போதும் ஒருங்கு சேர உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதில் முன்னின்று உழைத்தார்.

1969இல் "அம்மா" என்ற ஒரு சஞ்சிகையை ஆரம்பித்தார் மார்க்சிம் கார்க்கியின் தாய் என்ற நாவலை வாசித்தமையால் அவரது மனதில் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாகவே, தான் ஆரம்பித்த சஞ்சிகைக்கு 'அம்மா' எனப் பெய ரிட்டார். அச்சஞ்சிகையில் தான் எழுதியதோடு தன்னைச் சூழ்ந்திருந்த மக்களையும் எழுத வைத்தார். 'அம்மா' அடக்கி ஒடுக்கப் பட்டவர்களின் பிரச்சனைகளை வெளிக் கொணரும் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருந்தது.

1970ல் பிரபல எழுத்தாளர் எஸ். அகஸ்தி யரின் தொடர்பு இராமனுக்கு ஏற்பட்டது. இதன் பேறாக புதிய சிந்தனையால் இவர் ஆட்கொள்ளப்பட்டார். முற்போக்கு இலக்கியத்தில் இவருக்கு ஈடுபாடு ஏற்படத் தொடங்கியது. மார்க்ஸியம், லெனினிஸம், மாவோவின் சிந்தனைகள் தொடர்பான நூல் களை வாசித்ததன் காரணமாக முற்போக்கான சிந்தனைகள் இவரிடம் ஏற்படத் தொடங்கின.

இராமன் பொழுதுபோக்காக மார்க்சியம் பேசுபவரல்ல. ஆத்மார்த்தமாகவே மார்க்சியக் கோட்பாடுகளைத் தனது வாழ்க்கை நெறியாகக் கொண்டவர். இராமனுக்கும் இந்திராணிக்கும் திருமணமாகி முதற்குழந்தை பிறந்தபோது அப்பெண் குழந்தைக்கு அவர் இட்ட பெயர் என்ன தெரியுமா?- “ஏஞ்சலா டேவிஸ்'' கறுப்பின மக்களுக்காகப் போராடிய தலைவியின் பெயர், இரண்டாவதாகப் பிறந்த மகன் பெயர் லெனின்.

மஹியாவுடன் இணைந்த பகுதிதான் பூரணவத்தை கிராமம். இங்கு வாழும் மக்களை இணைத்துக் கொண்டு சமூக இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுவந்த இராமன், தான் வாழும் பிரதேசத்து மக்களின் பிரச்சனைகளை வெளியுலகுக்குக் வெளிக்காட்டவும் அங்கு வாழும் புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் ‘பூரணி' என்ற பெயரில் தனது கிராமத்தின் பெயரைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தார். இச்சஞ்சிகையும் பொருளாதார நெருக்கடி காரணமாகச் சில மாதங்களில் நின்று போனது.

1986இல் மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் என்ற அமைப்பை இராமன் உருவாக்கினார். அந்த அமைப்பின் மூலம் கண்டியை மையமாகக் கொண்டு இலக்கியம், அறிவியல், சமூகச் செயற்பாடுகள் எனத் தனது பணிகளை விரிவு படுத்தினார்.

பேராசிரியர் கைலாசபதியின் இலக்கியப் பணிகளை மதித்து அவர் நினைவாக கைலாசபதி ஆய்வுமையம், என்ற நிறுவனத்தை அமைத்து அதன் இணைச் செயலாளராகவும் இராமன் பணியாற்றியுள்ளார்.

நூல் வெளியீடுகளின் மூலம் மலையக இலக்கியத்திற்குப் பெரும்பணி ஆற்றிய அமரர் துரை விஸ்வநாதன் அவர்களின் நினைவாக “துரைவி இலக்கியச் சிந்தனை வட்டம்'' என்ற அமைப்பின் மூலம் இலக்கியக் கலந்துரையாடல்களையும் அவ்வப்போது ஏற்படுத்தி வந்தார் இராமன்.

இலக்கிய விழாக்களை நடத்துவதில் தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டவர் இராமன். எதையும் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்துமுடிப்பதில் தனித்திறமை வாய்ந்தவர்.

“இராமன் என்பவர் ஒரு தனியான இராமன் அல்ல. ஒட்டுமொத்தமான இந்த மலையக சமூக வரலாற்றின் ஒரு பிரிக்கமுடியாத மறக்கமுடியாத அங்கம்'' எனக் குறிப்பிட்டுள்ளார் மலையகத்தின் மூத்த எழுத்தாளரான சாகித்தியரத்தினா தெளிவத்தை ஜோசப்.

இராமன் தனது மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் மூலம் வெளியீடு செய்த மற்றுமொரு இதழ் “கண்டி இலக்கியச் செய்தி மடல்'' இதன் பன்னிரண்டாவது இதழ் அமரர் துரை விஸ்வநாதன் நினைவு மலராக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் மூலம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பல நூல்களைப் பிரசுரித்து வெளியீட்டு விழாவையும் நடத்திக் கொடுத்து எழுத்தாளர் களைப் பலவழிகளிலும் கௌரவிக்கும் பணிகளிலும் இராமன் ஈடுபட்டு வந்துள்ளார். ரூபராணி ஜோசப், இக்பால் அலி, செழியன் பேரின்பநாயகம், மடவளை அன்சார் எம். ஷியாம், நூராணியா ஹசன், ந. பார்த்தீபன், பெ. புண்ணியமூர்த்தி என்போரது பதினைந்துக்கு மேற்பட்ட நூல்கள் இவரால் வெளிக் கொணரப்பட்டன. இவற்றுள் ரூபராணி ஜோசப்பின் “ஏணியும் தோணியும் தேசிய சாகித்திய விருதினையும் “இல்லை இல்லை'' என்ற நாடக நூல் வடகிழக்கு மாகாண சாஹித்தியப் பரிசினையும் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த அமைச்சரும் கவிஞருமான அஷ்ரப் அவர்களது நான் எனும் நீ கவிதை நூல் அறிமுக விழாவை கண்டியில் நடாத்தி முஸ்லிம் தமிழ் சமூகத்திற்குத் தான் ஒரு பாலம் எனவும் நிரூபித்தார் இராமன். அதுபோலத் தனது மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராகக் கவிஞர் இக்பால் அலியைத் தெரிவுசெய்து முஸ்லிம் தமிழ் ஒற்றுமைக்கு இலக்கணமாகவும் அவர் திகழ்கிறார்.

வெளியீட்டு விழாக்களில் அழைப்பிதழ் களைத் தயாரிக்கும் போது ‘குறிஞ்சித் தேனீ' என்று தலைப்பிட்டு எழுத்தாளர்கள் பற்றி, அவரது ஆக்கங்கள் பற்றி, அறிஞர்கள் சொன்ன விடயங்கள் பற்றி, அவ்வெழுத்தாளருக்குக் கிடைத்த பட்டங்கள் பற்றி பரிசுகள் பற்றியெல்லாம் தேடியெடுத்து அழைப்பிதழில் சேர்த்து அதனை ஒரு நூலைப் போன்று வைத்துப் பாதுகாக்கும் அளவிற்கு அற்புதமாக அழைப்பிதழ்களைத் தயாரிப்பார் இராமன். இப்படியான ஒரு பணியினை எனது சிறுகதைத் தொகுதியான “அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்'' நூலின்

வெளியீட்டுவிழா அழைப்பிதழைத் தயாரிக்கும் போதுதான் முதலில் ஆரம்பித்தார் என்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

கலைஞர்களை எழுத்தாளர்களை இனங் கண்டு கௌரவிப்பதிலும் இராமன் வல்லவர் "மலையக மாணிக்கங்கள்'' என்ற மகுடத்தில் மலையகத்துடன் தொடர்புள்ள கலைஞர்கள் எழுத்தாளர்களை பத்திரிகைகளில் அறிமுகம் செய்த இராமன், இலைமறைகாயாக இருந்த பலரை தனது கட்டுரைகள் மூலம் வெளிச்சத் துக்குக் கொண்டுவந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

கண்டியில் இடம்பெறும் சகல கலை இலக்கிய, சமூக, ஆன்மீக முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர் தொழிலதிபர், சமூக ஜோதி லக்கிலேன்ட எஸ். முத்தையா அவர்கள். அவரது பவள விழா 08-06-2016 அன்று முருகா மலை ஸ்ரீமுருகன் ஆலய வளாகத்தில் இடம் பெற்றபோது அந்த விழாவினை முன்னின்று நடத்தியவர்களில் இராமனும் ஒருவர். அன்றைய தினம் வெளியிடப்பட்ட 'பவளவிழா நாயகன் லக்கிலென்ட எஸ். முத்தையா பவள மலரி'ன் தொகுப்பாசியராகவும் விளங்கியவர் திரு. இராமன் அவர்கள்.

தினக்குரல் பத்திரிகையின் கண்டிக்கிளை யின் முகாமையாளராக பதினாறு ஆண்டுகளாகப் பணியாற்றியவர் இராமன். அக்காலகட்டத்தில் கண்டிக்கு வரும் கலை இலக்கியவாதிகள் பலரும் விஜயம் செய்யும் இடமாக அவரது பணிமனை விளங்கியது என்பதை யாவரும் அறிவர்.

மலையகத்தின் மூத்த கவிஞர் குறிஞ்சித் தென்னவனின் மறைவைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினருக்கு உதவும் முகமாக தினகரன் பத்திரிகையோடு இணைந்து ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா பொதுமக்களிடம் திரட்டி, குறிஞ்சித் தென்னவனின் நினைவு விழாவும் நடாத்தி அப்பணத்தை குறிஞ்சித் தென்னவனின் குடும்பத்தினருக்குக் கையளிக்க வகை செய்தமையும் இராமனது பணிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"ஓர் எறும்பின் ஒழுங்கமைப்பும் தேனீயின் சுறுசுறுப்பும் அவரிடம் காணப்படுகின்றன. வில்லேந்திய இராமனை எல்லோரும் இராமாயணத்தில் பார்த்திருப்பார்கள். ஆனால் காலில் சில்லுப் பூட்டியதைப் போன்று ஓடியோடி உழைக்கின்ற இராமனைக் கண்டியிற் காணலாம்" என இராமனின் கடின உழைப்பைக் கண்டு வியக்கிறார் கலாநிதி துரை மனோகரன்.

இராமனது அளப்பரிய பணிகளை மதித்த பேராதனைப் பல்கலைக் கழகத்தினர் 1996இல் அவருக்குப் பாராட்டு விழா நடாத்தி ''மக்கள் கலைமணி'' என்ற பட்டம் வழங்கிக் கௌர வித்தனர். கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் இராமனுக்கு ரூபா 49,000/- பெறுமதியான பொற்கிழி வழங்கப் பட்டது. அதே மேடையில் இலக்கியக் காவலர் திரு. எஸ். முத்தையா ஜே. பி. அவர்கள் இராம னுக்குத் தங்க மோதிரமும் அணிந்து அவரைக் கௌரவித்தார்.

இராமனின் பணிகளைப் பாராட்டு முகமாக பல அமைப்புகள் அவரைக் கௌரவித்துள்ளன. இலங்கைத் தென்கிழக்கு ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் 16.07.1999ல் கல்முனையில் நடை பெற்ற பாராட்டு விழாவில் கௌரவிக்கப் பட்டவர்களில் இராமன் மட்டுமே தமிழர் என்பது குறிப்பிடத் தக்கது. மற்றவர்கள் நால்வரும் முஸ்லிம்கள். 1999ல் நடைபெற்ற மத்திய மாகாண முஸ்லிம் சாகித்திய விழாவில் இராமனுக்குக் "கலைச்சுடர்'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு விருதும் சான்றிதழும் பொற்கிழியும் வழங்கப்பட்டன. 1996ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மேயர் செழியன் பேரின்பநாயகம் அவர்களால் மட்டக் களப்பு மாநகர சபையில் இராமன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கண்டியில் இராமனுக்கு "இரத்தினதீப" விருது வழங்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு ஊவா மாகாணச் சாகித்திய விழாவிலும் இராமன் கலை இலக்கிய சமூகப் பணிகளுக்காக பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக கண்டி மாநகரில் இலக்கியச் செயற்பாடுகளுக்கும் இலக்கிய முன்னெடுப்புகளுக்கும் இலக்கிய விழிப்புணர்வுக்கும் ஆதார சுருதியாக விளங்குபவர் இராமன்.

அமுதவிழா ஆண்டில் அடியெடுத் வைத்திருக்கும் இராமனது பணிகளைப் பாராட்டி மென்மேலும் அவரது பணிசிறக்க வாழ்த்தி மகிழ்கிறது ஞானம்.

❍❍❍

**மகளிர் தினக் கவிதை**

# குதியுயர் காலணிகளை அணிந்த பெண்ணொருத்தி

குதி உயர்ந்த காலணிகளை
அணிந்த பெண்ணொருத்தி
பின்மாலைப் பொழுதொன்றில்,
காலணிகளைக் கழற்றித்
தன்வீட்டு வாசலில் பதிகிறாள்.
ஆடை மாற்றிய பின்,
காலையில் கழற்றி விட்டிருந்த
அதிவேகச் சக்கரங்களை
அணிந்து கொள்கிறாள்.
அவசர இரவுணவு
இடியப்பச் சிக்கல்
மரபுணவிலிருந்து மாற முடியாத
வயோதிபப் பெற்றோரின் தேவை.
பள்ளியில் இருந்தும்
அலுவலகத்திலிருந்தும் வருபவர்களை
“களைச்சுப் போச்சுதுகள்”
முதியகுரல்கள் வரவேற்கின்றன.
அவர்கள் ஓய்வுறுகிறார்கள்.
அவளோ
ஐந்தாவது தடவையாக
சூடாக்கிய தேநீரை
நடந்தபடியே குடிக்கிறாள்.
தொடர் கடமைகளும் கூடவே
அவளுடன் நடக்கின்றன.
பள்ளிக்கடிதங்கள், வீட்டுப்பாடஉதவி
உடை கழுவுதல், மினுக்குதல், மடித்தல்
இரவு உணவு, சமையலறைச்சுத்தம் என
ஒரு வேலை முடிய
மறுவேலை முளைக்கும்
ஒரு வினோத விளையாட்டு.
ஆடித்தான் ஆகவேண்டும்.
அந்தி மாலையாகி,
மாலை இரவாகி,
இரவு நடுநிசியைத் தழுவத் துடிக்கையில்,
அருகில் படுப்பவன்
அருந்தப் பானமாகிறாள்.
களைத்துக் கவியும்
விழியிமைகள் மீது
உருகும் மெழுகுவர்த்தியாய் உதிர்கின்றன,
நாளைய நாளின் கடமைகள்.
அவை ஒன்றின் மீதொன்று விழுந்து
கட்டிடமாகிக் கனக்கின்றன.
மாலை அணியப்பட்ட
பலியாடுகளாக அவளது நாட்கள்.
ஒன்று வெட்டப்பட
மற்றையது முன் நகர்கிறது.
இருள் சூழ் உலகு.
மறுநாள் மலர
கட்டிலடியில் காத்திருக்கும்
சக்கரங்களைக் கொளுவி
காலைக்கெனப் பட்டியலிடப்பட்ட
கடமைகளை முடிக்கிறாள்.
அவசர முகஒப்பனை.
“கொன்சீலருக்கு”ஒரு முத்தம்.
வாய்த்தர்க்கம்
தவிர்க்கவே முடியாத பொழுதுகளில்,
வேகமாய்ப் பதியும்
கைவிரல் அடையாளங்களை
கெட்டித்தனமாய் மறைத்துவிடும்
வித்தை அறிந்த தோழி.
இதழ்க்கடையில் வழியும் கழிவிரக்கத்தை
உதட்டுப்பூச்சில் மறைக்கிறாள்.
வேலைக்கு கிளம்பி விட்டாள்.
முன்வாசலில் சரிந்து கிடக்கின்றன
அவளது குதியுயர் காலணிகள்.
எதேச்சையாக,
அவன் கழற்றி வீசிய சப்பாத்துக்கள்
அவற்றைச் சரித்திருக்க வேண்டும்.
மெல்ல நிமிர்த்தி மேலுயர்கிறாள்.
வீட்டின் வெளிப்புறமாகி,
அறைந்து சாத்துகிறாள் கதவை.
ஏதோ ஒரு நிம்மதி.
மௌனமாக நடக்கிறாள்.
உள்ளே சுழல்காற்று இரையும்
ஒரு பெரும்பிரளயம்
சூல் கொண்டிருப்பினும் கூட......

**குணாளினி தயாநந்தன்**
(சாரங்கா)



# உயிர்வாசம்



அண்டனூர் சுரா

இப்படியாக மூச்சுத்திணறல் வருவது இதுவே முதல் முறை. வெளிச்சுவாசத்தை விடவும் உட்சுவாசம் நெஞ்சுக்குப் பாராமாக இருந்தது. உதரவிதானம் சுருங்கிவிரிவதாக இல்லை. வயிறு ஊதி, உள்வாங்கவில்லை. நாசி வழியே உள்வாங்கும் எடையற்ற காற்று நாசித் துவாரத்திற்குள் நுழைகையில் எடை கூடி நிறையும் கூடுவதாக இருந்தது.

இரண்டு நாட்களாக வறட்டு இருமல். நெஞ்சுக் கூட்டை சுத்தியல்கொண்டு தட்டுவதைப் போல நெஞ்சதிர்வு. இருமி, இருமி தொண்டைக்குழி வறண்டிருந்தது. தொண்டைக்குள் மீன் முள் சிக்கிக்கொண்டதைப்போல கரகரப்புடன் கூடிய அரிப்பு. எச்சிலூற்றில்லை. சுடுதண்ணீரில் உப்பு கலந்து தொண்டையை நனைக்கையில், வாய் கொப்பளிக்கையில், தொண்டை இதமாக எரிச்சலைக் கொடுத்து, பின் எரிச்சல் உயிரை அறுப்பதைப் போலிருந்தது.

நேற்றை போல இன்றையநாள் இருந்து விடக்கூடாதென குலதெய்வத்தை வேண்டிக் கொண்டார், மாணிக்கம். கடந்த இரவை நினைத்துப் பார்க்க பயமூட்டுவதாக இருந்தது. மாலை ஆறு மணிவாக்கில் தொடங்கிய வறட்டு இருமல், வெற்றுக் கிரைண்டர் ஓடுவதைப்போல ஓடி நெஞ்சையும், தொண்டையையும் அறைப் பதாக இருந்தது. இடைவிடாது தொண்டைக் குழியை உழுக்கிய ‘கொக், கக்’ இருமல், தாண்டை யோடு சேர்த்து நெஞ்சையும் தடவிக் கொடுத்ததில், எலும்பும் நரம்பும் சோர்ந்து விட்டிருந்தன.

“பானு”

அவரது மனைவி ஓடி வந்தாள். அவளுக்கு மெல்ல நடக்கத் தெரியாது. ஓட்டமே அவளது நடை. அன்றைக்கு அவளது நடை வழக்கத்திற்கு மாறாக முடுக்கியிருந்தது.

“சுடு தண்ணீ” வார்த்தைகளை தொண்டை யின் நாண்கள் அறுத்தன.

மஞ்சள்தூள், மிளகு, ஓமம் மூன்றும் கொதித்த தண்ணீரை ஆற்றிக்கொண்டு சிந்துவது கண்ணீரா, தண்ணீரா எனத் தெரியாதவாறு ஓடி வந்தாள். அதை வாங்கிய மாணிக்கம், மிடறு மிடறாகத் தொண்டைக்குள் இறக்கினார். இரண்டொரு நிமிடங்கள், அவ்வளவேதான். திரும்பவும் இருமல் வறண்டு மிரண்டு வந்தது. அடிவயிற்றிலிருந்து குறுக்குவாக்கில் நுரையீரலுக்கும் நெஞ்சுக்குமிடையே மின்னல் வெட்டுவதைப்போல ஒரு வெட்டு. உயிர் போய் உயிர் வந்தது.

இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக தொடர் இருமல். அவ்வளவு நேரம் இருமியும்





3ஆம் பரிசு

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி 2021



ஒரு துளி சளி வெளியே வருவதாக இல்லை. சளியே இல்லையா, சளியை வெளியேற்று மளவிற்கு நெஞ்சில் பலம் இல்லையா? தொண்டையைக் கர்..கர்...எனக் காறி எச்சிலை உமிழ்ந்தார். வெறும் எச்சில்தான். நுரையீரலிலிருந்து வெளிவரும் எச்சில் நுரையாக பொங்கிப்போயிருக்கும். இது தொண்டை எச்சில்! காறி உமிழ்கையில், தொண்டைக்குள் தேள் கொட்டுவதைப் போன்று 'சுருக்'கென ஒரு வலி எடுத்தது.

முருங்கைக்கீரை சூப், சுக்கு, மிளகு,திப்பிலி எரிக்கப்பட்ட கசாயம், மஞ்சள்தூள் வெந்நீர் என அருந்தியதில், வயிறு நிரம்பி, இருப்புக் கொள்ளாமல் பின்வாசல் வழியே ஒழுகத் தொடங்கியது. கழிப்பறைக்குள் ஓடினார். கோப்பையில் கைலியைத் தூக்கிக்கொண்டு உட்காருவதற்குள் உடைந்த பானை ஒழுகுவதைப் போல பீச்சியடித்தது.

கோடைமழை இடியைப் போல வயிற்றுக் குள் இரைச்சல்!

இரண்டு நாட்களாகவே காலை சிற்றுண்டி. மதியம் சாப்பாடு, இரவு ஆகாரம் என ஏதுமில்லை. சுடுதண்ணீர், கசாயம், வரக்காப்பிதான். அதற்கே, ஓர் அறிவிப்புமில்லாமல் தொடர்போக்கு. ஒரு வேளை சாப்பிட்டிருந்தால்? வெளிக்குப் போக உணவு தேவையில்லை. வயிறு என்கிற ஒன்று இருந்தால் போதும் போலும்! உடம்பு சற்றே நேரத்திற்குள் தடதடத்து விட்டது. காலும் கையும் துவண்டு, எலும்பும் நரம்பும் துருத்தத் தொடங்கின. கண்களுக்குள் புகை மூடுவதைப்போல அடர்இருட்டு. இமைகள் நெற்றிக்கு கனப்பதாகவும், மூடித்திறக்க சத்து இல்லாமல், தவிக்கவும் இருந்தன.



மாணிக்கம், கழிப்பறையிலிருந்து வெளியேறி யதும் அவரது மனைவி பானு கழிப்பறைக் குள்ளாக ஓடினாள். கோப்பையில் தண்ணீரூற்றி, அலசிக் கழுவியது வெளியே கேட்டது. அறை முழுவதும் மஞ்சள் தண்ணீரைத் தெளித்தாள். வீட்டில் குழந்தைகள் உண்டு. குழந்தைகளுக்கும் தொற்றிக்கொண்டால்? என்கிற பயம் அவளுக்கு.

"எப்படி இருக்கு?"

மாணிக்கத்தின் ஒடிந்த தலை சற்றே நிமிர்ந்தது. கேள்வியை அவள் உரக்கவே கேட்டி ருந்தாள். மாணிக்கத்தின் காது பஞ்சடைத்துப் போயிருந்ததில், அவருக்கு மந்தமாகவே கேட்கச் செய்தது. உடலுக்குள் காற்று அடை படுகையில், காதும் அடைபடவே செய்யும். செவித் துவாரத்திற்குள் விரலை நுழைத்து, குடைய செய்தார். கட்டிலிலிருந்த தலையணையில் மெல்ல உடம்பைச் சாய்க்கச் செய்தார். உலக்கையால் உரல் குத்துப்படுவதைப்போல பழையபடி, கொக், கக், தொடர் இருமல்.

அவரது அண்ணன் மகள், ஒரு வாரத்திற்கு முன்பு குடும்பச் சண்டையில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டிருந்தாள். அவள் குறித்த நினைவு அவருக்குள் வலை பின்னின. அவரையும் உடன் அழைப்பதைப்போன்ற பிரமையால் உடல் குலுங்கினார். இந்த இருமல் இப்படியே நீடிப்பதாக இருந்தால், அவள் முடிவைத்தான், தானும் எடுக்க நேரிடும், அவருக்கு அவர் சொல்லிக் கொண்டார். மனது நினைப்பது எப்படியோ இதயத்திற்குத் தெரிந்துவிடுகிறது. நெஞ்சுக்கு வாயும், இதயத்திற்கு காதும் இருக்கும்தான் போலும். அப்படியாக நினைத்ததும் அவரது இதயத் துடிப்பின் வேகம் இரட்டிப்பானது. வெளியே என்ன நடக்கிறது, என எட்டிப் பார்ப்பதற்கென வந்ததைப்போன்று வியர்வைத் துளிகள் உடம்பிலிருந்து வெளியேறி, நசநசப்பைக் கூட்டின. அண்ணன் மகள் தொங்கிப்போன கயிறு அவரது கண் முன்னே நிழலாடின.

இது என்ன வகையான கோழைத்தனம்? அவரது ஒரு பக்க நெஞ்சை இதயம் இடித்துரைக்கிறது. மாணிக்கத்தால் கட்டிலில் படுக்கவோ, உட்காரவோ முடியவில்லை. மெல்ல எழுந்திருக்கிறார். கண்களை மூடியபடி தலையில் கொட்டிக் கொண்டார்.

கண் விழித்துப் பார்க்கையில், அவர் முன்னால் மனைவி பானு நின்றாள். உடம்பு

சடசடத்து, வியர்த்து கொட்டிவிட்டது. மாணிக்கம் மெல்ல திரும்பி அடுத்த அறையைப் பார்த்தார். அறையில் அவரது மகனும் மகளும், கால்களை வயிற்றுக்குக் கொடுத்து சுருங்கிப் படுத்திருந் தார்கள். தாமதமான திருமணத்திற்குப் பின் பிறந்த குழந்தைகள். அவர்களைக் கண் கொண்டு பார்த்தார். கண்களுக்குப் பதில் கண்ணீரே பார்த்தன. அவரது கோழைத்தனமான முடிவு, அவரை மனங்கனக்கச் செய்தது.

“ஏன் கண் கலங்குறீங்க. கொஞ்சம் பொறுத்துக்கோங்க. நாளைக்குச் சரியாகிடும்” என்றாள் அவரது மனைவி பானு.

“சரியானா...” அதற்கும் மேல் அவரால் பேசமுடியவில்லை. இரண்டு கைகளையும் நெஞ்சுக்குக் கொடுத்து, காற்றுக்கு நாணல் வளைவதைப்போல வளைந்து, நிமிர்ந்து இருமினார். தொடர் இருமல். சிறுகுடல், வாய் வழியே வந்துவிடும் போலிருந்தது.

“அதுவாகத்தான் இருக்குமோ?”

அப்படியாக மனைவி கேட்கையில், அவரது அலைபேசிக்கு ஒரு குறுந்தகவல் வந்து விழுந்தது. அதைக் கேட்கையில் அவருக்குள், மின்னல் வெட்டு.

இரண்டு நாட்களுக்கு முன்பு, மாணிக்கம் அரசு மருத்துவமனையில், கொரோனா பரிசோத னைக்காக அவரது நாசியையும் தொண்டை யையும் கொடுத்திருந்தார். இன்றைக்குள் ரிசல்ட் வந்துவிடுவதாகச் சொல்லியிருந்தார்கள். அதுவாகத்தான் இருக்குமோ? எனக்கும் கொரோனாதானோ? அதை நினைக்கையில், அவரது காலும், கைகளும் உதறச் செய்தன. செல்போனை நோக்கிச் சென்று அதை எடுத்துப் பார்க்க பயமாக இருந்தது.

செல்போனை எடுத்து திறந்து பார்ப்ப தற்காக அதை நோக்கி நடந்தார். குதமும், தொடையும் நனைவதாக இருந்தன. கழிப்பறைக்குள்ளாக ஓடினார். “ தண்ணீய நல்லா ஊத்திட்டு வாங்க” மனைவி வெளியிலிருந்து உரக்கச் சத்தம் கொடுத்தாள். வந்திருக்கும் குறுந்தகவல் என்னவாக இருக்கும்? நெஞ்சு படக், படக்கென அடித்துக்கொண்டது.

கழிப்பறையிலிருந்து வெளியே வருகை யில், மனைவி கையில் செல்போன் இருந்தது. “எஸ்எம்எஸ் என்னனு பார்த்தீயா?”

“வோடாபோன். ரீச்சார்ச் செய்யணுமாம்”

அவருக்குச் சிரிப்பு வந்தது. அவரது உதடுகள் சுழிவதைப் பார்த்து, மனைவி சிரித்தாள். அப்படியொன்றும் மாணிக்கம் பெரிதாகச் சிரித்துவிடவில்லை. ஆனால் இருமல் அணையை உடைத்துக்கொண்டு வெள்ளம் வெளியேறுவதைப்போல உடைத்தெடுத்து வந்தது.

“கொஞ்சம் தண்ணீ”

சுடுதண்ணீர் வந்தது. “ மிளகு ஒன்னு தாறீயா, கடிச்சி, உதட்டுக்குள்ளே அதக்கிக்கிறேன்”

“மிளகு திண்ணுத்திண்ணுதான் வயிறு வெந்துப்போச்சே”

“ அப்ப ஏலக்கா கொடு”

“எத்தனதான் திம்பீங்க” என்றவள் ஒன்றை மட்டும் அவர் முன் நீட்டினாள். மிளகை விடவும், ஏலக்காய் ஓரளவு இருமலைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. அதையும் மென்றுகொண்டே இருக்க வேண்டும். மெல்வதை நிறுத்தினால், திரும்பவும் அதே இருமல்,..!

அரசு மருத்துவமனை கொடுத்திருந்த மாத்திரைகளை எட்டு மணிவாக்கில் விழுங்கி யிருந்தார். இன்னொரு முறை அதையே விழுங்க வேண்டும் போலிருந்தது. அப்படியாக விழுங்கலாமா, கொஞ்ச நேரம் தூங்குவதற்கு அதை இன்னொரு முறை விழுங்க வேண்டி யதைத் தவிர அவருக்கு வேறு வழி தெரிந்திருக்கவில்லை. மனைவி, சற்று நேரம் கண் அயர்ந்திருந்தாள். அந்நேரம் பார்த்து, முன்பு விழுங்கிய அதே மாத்திரைகளைத் திரும்பவும் விழுங்கினார். இதனால் உயிருக்கு எதுவும் பாதகம் வருமோ? வந்தாலும் நல்லதுதான். இந்த வறட்டு இருமலிருந்து பூரண விடுதலையாவது கிடைக்குமில்லையா!

மாத்திரைகள் விழுங்கியதன் பிறகும் வறட்டு இருமல் தொண்டைக்குள் குதிப்பதாக இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு அந்தக் குதிப்பு இருந்தது. பிறகு மாத்திரை எங்கேயிருந்து அவருக்குள் தூக்கத்தைக் கொண்டு வந்து சேர்த்தது.

காலை ஏழு மணி வாக்கில், மனைவி அவரது கன்னத்தில் கை வைத்துப் பார்த்தாள். அவருக்கு விழிப்பு திடுக்கென வந்தது. இவ்வளவும் நேற்று இரவு நடந்தது.

இன்றைய தினமும் அதே வறட்டு இருமல்தான். இருமலை வயிற்றால், நெஞ்சால்

ஓரளவு தாங்கிக்கொள்ள முடிந்தது. நெஞ்சை அடைப்பதைப்போல வந்திருந்த மூச்சுத் திணறலைத்தான் அவரால் பொறுக்கவோ, தாங்கவோ முடியவில்லை.

"பானு, நான் வேது பிடிக்கணும். உடனே அதுக்கு ஏற்பாடு செய்"

வீட்டில் நொச்சி இருந்தது. அதை நான்கைந்து இணுக்குகள் பறித்து, மஞ்சள் தூள், எலுமிச்சை கொட்டைகளை இட்டு, கொதிக்க வைத்தாள். நெருப்புக்குள்ளிட்டிருந்த செங்கல் துண்டை அதற்குள் இட்டு, போர்வையால் உடலைப் போர்த்தி, வேது பிடித்தார். உடம்பு சலசலவென வியர்க்கச் செய்தது.

"மூச்ச நல்லா இழுத்துவிடுங்க, நல்லா வேர்க்கட்டும். அவ்வளவும் நெஞ்சுச் சளி"

மூச்சை உள்வாங்குகையில் இருந்த சிரமம், அதை வெளியே விடுகையில் இல்லை. போர்வையை உடம்பிலிருந்து நீக்கியதும், மனைவி துண்டால், அத்தனை வேகமாகத் துடைத்துவிட்டாள்.

"இனி சரியாகிடும்"

"ஆனால்தான் தேவலையே" எப்படியோ அதை அவர் சொல்லி முடித்தார். வேகு ஒரு மணி நேரம் தாக்குப் பிடித்தது.

வானம் இருட்டுக்கொண்டு வந்தது. வீட்டுக்குள் இத்தனை நாள் புழுக்கம் தணிந்து, மெல்ல குளிரெடுத்தது. மாணிக்கம், வீட்டிற்குள் இருந்தபடி, இருட்டி வந்திருந்த வானத்தைப் பார்த்தவராக இருந்தார். என்னவோ சொல்ல வாயெடுத்தார். அவரால் சொல்ல முடிந்திருக்க வில்லை. பழையபடி அதே இருமல். நெஞ்சு அடைப்பு. மூச்சு நுரையீரலின் தூரைத் தொடாமல், நாசிக்குள்ளாக ஓடுவதைப் போலிருந்தது. அந்தக் குளிரிலும் உடம்பு வியர்க்கச் செய்தது. அவரால் மூச்சை உள்ளே இழுக்க முடியவில்லை. மணியைப் பார்த்தார். ஏழரை எனக் காட்டியது. நேரம் வேறு சரியில்லை. இன்னும் ஐந்து நிமிடம் கடக்கட்டுமென, காத்திருந்தார்.

"பானு, நான் ஆஸ்பத்திரிக்குப் போகணும்"

மனைவி, கழுத்தில் கை வைத்துப்பார்த்தாள். ஜுரம்தான் இல்லையே.

"மூச்சுவிட முடியலடி" அழுகை வார்த்தைக் குள் உடைந்து நாசியை முட்டி, கண்களை முட்டியது.

"வேகு பிடிச்சீங்களே"

"கொஞ்சம் பேசாம இருக்கிறீயா..." கோபம் வந்தது. கூடவே அழுகையும் வந்தது. அவள், அவளது அண்ணன்களுக்குப் போன் செய்தாள்.

"யாருக்குப் போன் பண்றே?"

"அண்ணனுக்கு"

"இதுவா நேரம். ஆட்டோவுக்குப் பண்ணு"

வாடிக்கையான ஆட்டோவுக்கு அழைப்பு விடுத்தாள். அழைப்பு போனது. எடுக்கணுமே? இன்னொரு ஆட்டோக்காரருக்கு அழைப்புப் போனது. "கடவுளே.."

நல்ல வேளை எடுத்துவிட்டார். மாணிக்கத் தால் பேச முடியவில்லை. மனைவியிடம் கொடுத்தார்.

"ஆட்டோ வேணும்"

"எங்கே போகணும்?"

"ஆஸ்பத்திரிக்கு"

"அட்ரஸ் சொல்லுங்க"

"பாரத் கேஸ்க்கும் பின்னாடி"

"யாரு மாணிக்கம் சாருங்களா?"

"இம்.."

"இதோ வாறேன்"

மாணிக்கம், சட்டையை உடுத்திக்கொண்டு கிளம்பினார். இந்நேரத்திற்கு எந்த ஆஸ்பத்திரி இருக்கும்? எந்த ஆஸ்பத்திரி திறந்து இருக்கோ, அங்கே போகணும். அவருக்குள்ளாக கேள்வியும் பதிலும்!

"நீங்க மட்டுமா போகப்போறீங்க, நானும் வாறேன்" என்றாள் மனைவி பானு.

"பிள்ளைங்க?"

அவளால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"பெரமையாவுக்குப் போன் பண்ணு"

மாணிக்கத்தின் நண்பர். அடுத்தத் தெருவில் குடியிருக்கிறார். அவசரத்திற்கு வந்தும் சேர்ந்தார். ஆட்டோ வாசலில் நின்றது.

"பிரைவேட் டாக்டர் யாரேனும் இருப் பாங்களா?"

"நாலு டாக்டர், பத்து நாளைக்கு பார்வை கிடையாது, என எழுதி ஒட்டிட்டாங்க. வேறு டாக்டர் யாரேனும் இருக்கிறாங்களானுப் பார்க்கலாம்" என்றவாறு டிரைவர் ஆட்டோவை எடுத்தார்.

நண்பர், முன் எச்சரிக்கையாகத் தள்ளி உட்கார்ந்துகொண்டார். முகக்கவசத்தை மேலும் கீழுமாக எடுத்துவிட்டுக்கொண்டார்.

அரசு மருத்துவமனையைக் கடந்துதான் ஆட்டோ சென்றது. மருத்துவமனையில், ஒரே ஒரு செவிலியர் உட்கார்ந்திருந்தார். அவர் தன் முழு உடம்பையும், கவசஉடையால் மறைத்திருந்தார். மருத்துவமனை ஆளரவற்று வெறிச்சோடி இருந்தது.

இரண்டு வாரமாகவே அரசு மருத்துவமனை பக்கம் யாரும் போவதாக இல்லை. யாரேனும் சென்றால், அவர்களுக்குக் கொரோனா இருப்பதாகச் சொல்லி, அவர்களை ஆம்பு லென்ஸில் ஏற்றிச் செல்லவும், அவர்களது பெயரைக் குறுந்தகவலில் அனுப்பவும், அவர் களது தெருவைத் தட்டி வைத்து மூடவுமாக இருந்ததால், அரசு மருத்துவமனை பொது மக்களுக்குப் பயத்தை மூட்டும் பட்டறையாகி விட்டிருந்தது.

மாணிக்கத்திற்கு அரசு மருத்துவமனைக்குப் போக வேண்டும் போலிருந்தது. அங்கு சென்றால், ஆக்ஸிஜன் வைப்பார்கள். ஓரளவு சுவாசிக்க முடியும், என்று அவர் நினைத்தார். ஆட்டோ, ஒவ்வொரு மருத்துவமனையாகச் சுற்றி வந்தது. பல தனியார் மருத்துவமனைகள் திறக்கப்படாமல் இருந்தன. அவருக்கு மூச்சுத் திணறல் முன்னே விடவும் அதிகமானது. இப்படியே நீடித்தால், உயிர் நெஞ்சுக்குள் சிக்கிண்டு நின்றுவிடும் போலிருந்தது.

அவரது அருகினில் உட்கார்ந்திருந்த நண்பர் பெரமையா, திரும்பி பார்த்தார். அவரது நெஞ்சுமேடு மேலே ஏறவும் இறங்கவுமாக இருப்பதைப் பார்த்து, நெஞ்சைத் தடவிவிட்டார். இதயம் துடிக்கும் அரவம் அவருக்குள் கேட்கச் செய்தது. உடம்பு தெப்பமாக வியர்த்தது.

ஆட்டோ, பல மருத்துவமனைகளைச் சுற்றி, சுகந்தினி மருத்துவமனையின் முன் நின்றது.

தனியார் மருத்துவமனை. ஆட்டோ விலிருந்தபடி ஆஸ்பத்திரியை ஏறிட்டுப் பார்த்தார். மெடிக்கல் திறந்திருந்தது. வெளியே மருத்துவர் நின்றுகொண்டிருந்தார். அருகில் அவரது உயரத்திற்கும் சற்றும் பொருத்தமில்லாத ஒரு செவிலியர். இருவரையும் ஒரு சேரப் பார்த்ததும், மாணிக்கத்திற்கு புது சுவாசம் வந்தது. எப்படியும் நான் பிழைத்துக்கொள்வேன், என்கிற நம்பிக்கை அவருக்குள் துளிர்விட்டது.

ஆட்டோ டிரைவர், மாணிக்கத்தின் பக்க மாகத் திரும்பினார். "நல்ல நேரம். டாக்டர் இருக்கார். வெரசா போங்க" எங்களை இறக்கி விட்டு, ஆட்டோவை வளைத்துத் திருப்பினார். மாணிக்கம், ஆட்டோவிலிருந்து இறங்கிய வேகத்திற்கு பெருமூச்சு வெடித்தது. மூச்சோடு மூச்சாக, குடலை உருவி வெளியே போகும் படியான இருமல் வந்தது. அவரால் ஒரே இடத்தில் நின்று இருமமுடியவில்லை. குதிக்கவும், நெஞ்சைப் பிடித்துக்கொண்டு குனியவும், வளையவுமாக இருமினார். இருமல் நிற்பதாக இல்லை. சட்டையை அவசரமாக துலாவி, சட்டைப்பைக்குள் கிடந்த ஒரு மிளகை எடுத்து வேகமாகக் கடித்து, எச்சிலைத் தொண்டைக்குள் இறக்கினார். மெல்ல மெல்ல இருமல் தணிவதாக இருந்தது. மூச்சு நெஞ்சை அடைப்பதைப் போலவும், நாசியை யாரோ பொத்துவதைப் போலவும் இருந்தது.

தான் எங்கே நிற்கிறேன், எனச் சுற்றும் முற்றும் திரும்பிப் பார்க்கச் செய்தார். அவர் ஆட்டோவுக்கும் அருகிலேயே நின்றிருப்பது தெரிந்தது. நண்பர் பெரமையா அவரைப் பிடித்துக்கொள்ள, மெல்ல காலடிகள் எடுத்து வைத்து மருத்துவமனைக்குள் நடந்தார். அவரால் அத்தனை வேகமாக நடக்க முடிய வில்லை. ஒரு கையை நெஞ்சில் வைத்தபடி, மருத்துவமனைக்குள் நுழைந்தார். மருத்துவர் அவரையே பார்த்தார்.

மாணிக்கம், மருத்துவரைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டார்.

" என்ன செய்யுது?"

" வறட்டு இருமலு, மூச்சுவிட முடியல" என்றார் மாணிக்கத்தின் நண்பர் பெரமையா.

மருத்துவர், மாணிக்கத்தை ஒரு கணம் குறுகுறுவென பார்த்தார். பிறகு அருகில் நின்றுகொண்டிருந்த செவிலியரின் காதிற்குள் எதையோ சொல்லிக் கிசுகிசுத்தார். செவிலியர், மருத்துவரின் சொல்லை வழிமொழிபவராக அந்த இடத்திலிருந்து அத்தனை வேகமாக நகர்ந்து, எதையோ தேடுவதைப் போல தேடி, மின்சுவிட்சை நிறுத்தினார். கதவு இழுத்து சாத்தப்படும் அரவம் கேட்டது.

மாணிக்கத்தைச் சுற்றிலும் இருள் மயம் சூழ்ந்தது. என்ன செய்வதென்று தெரியாது, திக்கற்று நின்றார். தூரத்தில், அரசு மருத்துவ மனையின் மங்கிய ஒளி தெரிந்தது.

❍❍❍

# மகளிர் தினமும் மனங்கொண்ட சிந்தனையும்!

பெண்கள் இன்று சகல வசதி வாய்ப்புகளோடும், எல்லாத் துறைகளிலும் வெற்றிநடை போடுகிறார்கள் என்பது மிகத் தவறான கருத்து. பெண்களின் வாய்ப்புகள் மேலோட்டமாகவே, தாராளமாகத் தெரிகிறது. ஒரு இலக்கை அடையப் பெண்ணின் வழி, ஆணினத்தை விடவும் மிகக் கடினமாகவே உள்ளது.பெண்ணாக இருப்பவளுக்கு இனம், மதம், ஆரோக்கியம், பொருளாதாரம், போன்றவை அவளது வழியை மேலும் கடினமாக்குகிறது. இன்று பெண்ணுக்கு எல்லா வாய்ப்பும், வசதியும் கிடைக்கிறதென்பது ஆணும், ஆணுக்குச் சார்பான அரசியலும் மக்களைத் தாலாட்டச் சொல்லும் கருத்தே.

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின், தலைவியாக இருந்து வழிநடத்தியவர், ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவரென, எல்லா இடத்திலும் பெண்களே என வாதிடுகிறார்கள், தம் மனதைத் திருப்திப்படுத்துவதற்காகவே, இந்தக்கூற்று. Christine Lagard, Frankfurtல் காய்கறிகளைக் கொள்வனவு செய்ய, விற்பனை செய்யும் பெண்ணிற்கு ஆணிற்குச் சமனானவருவாய் கிடைக்கிறதா? பெண்களின் வருமான வேறுபாடு 21% -31% வரைஉள்ளது. பிரதிபலிப்புப் பலமாக உள்ள இடங்களில் மட்டுமே, அனுகூலம் நடக்கிறது. மாற்றங்கள் வரவேண்டிய, இடங்களில் பெண்களின் வருமானம் சொற்பமாகவே உள்ளது. அதற்கு ஏற்ப பெண் தன்னைத் தன் தேவைகளை ஒடுக்கிக்கொண்டு தொடர் கிறாள்.

பெண் எத்தனை பெரிய பொறுப்பையோ, பதவியையோ, திறம்பட நிர்வகித்தபோதும். அவளது செயல் திறனைப் பாராட்டாது, ஆடை அணிகளை விமர்சிப்பதும், அவளது தனிப்பட்ட, செயலை விமர்சித்தும், அவளை மட்டந்தட்டுவதும், பத்திரிகையானாலும், தனிமனிதரானாலும், இதுவே வழக்கமாயுள்ளது, ஒரு தொழிலகத்தில் அவளின் ஆடையையோ, அவளையோ, விமர்சிப்பது அவளது சுயமரியாதையையும், பாதுகாப்பையும் தடுமாற வைக்கிறது. இன்னும் ஒரு தொழில்சார்ந்த, விவாதத்திலே பெண்கள், குரல் கொடுக்கும் போது, அதற்கு மேலாக குரல் எழுப்பி அவளை ஆண்கள் அடக்குவதோ, அல்லது அவள் அடக்கமற்றுப் பேசுவதாக விமர்சித்தோ, அடக்குகிறார்கள். மீறிப் பேசிவிட்டு, அவள் வெளியேவந்து தனியே நடமாடமுடியாத, காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்கள் நடத்தப்படுகிறது. அவள் தொழிலின் மேல்நிலைக்குச் செல்வதற்கு எத்தனை தடைகள், போராட்டங்களைத் தாண்டிச்சென்று அந்த இடத்தில் அமர்ந்திருந்தாலும், அவள் மீண்டும் பின்தள்ளப்படுகிறாள். அதனால் பெண்ணுக்கு தொழிலகத்திலும், பாதுகாப்பற்ற நிலை ஏற்படுகிறது, மீண்டும் தந்தையையோ, சகோதரனோ, கணவனோ, ஆண்களது பாதுகாப்பையே தேடவேண்டியுள்ளது.



கீத்தா பரமானந்தன்

மேலும் குழந்தையை, குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய பெரும் பங்கு பெண்ணிடம் உள்ளதால், பெரும்பான்மையான பெண்கள்

பகுதி நேரவேலையையே பார்க்கிறார்கள். இதனால் அவர்கள் முதுமைக் காலத்தில், ஓய்வூதியமும் இன்றி, உற்றார், உறவுகளைத் தங்கியே வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள்.ஜெர்மனியில் 65 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 25 % பெண்கள் உறவுகளில் தங்கியே வாழ்கிறார்கள்.

அவள் பெண்ணெனும் ரீதியில் மிகுந்த துன்பங்களை சந்தித்த வண்ணமே உள்ளாள். எதையும் சுயமாகத் தீர்மானிக்க முடியாதவாறே அவள் வாழ்வு சங்கிலிப் பிணைப்பாய் தொடர்கிறது. அது தனது திறமைக்கான வேலையிலிருந்து, கல்வி, திருமணமெனப் படர்கிறது. மனோபலம் நிறைந்த பெண்கள் தடைகளையும், சவால்களையும், சந்திக்க ஒரு போதும் தயங்கியதில்லை. இதனாலேயே நாட்டையும், வீட்டையும் ஒரேநேரத்தில் நல்ல படியாக நிர்வகிக்க அவளால் முடிகிறது. தைரியமாக முன்னே வரும் ஆபத்தை எதிர் நோக்கி தற்கொலைப் போராளியாகவும் செல்கிறாள். எல்லையையும் காக்கிறாள். ஆனால் வஞ்சக ஓநாய்களிடம் அகப்பட்டுச் சீரழிகிறாள்.பெண் தன்தேவைகளை நிறை வேற்ற வெளியே சென்று பத்திரமாகத் திரும்பு வாளா? என்பதற்கு இன்றுவரை எந்தவிதமான உத்தரவாதமு மில்லை.வன்கொடுமைக்கு ஆளாகும் பெண்ணைப் பார்த்து ஆறுதல ளிக்காது, சமூகம் அவள்மேல் தவறைத் திணிக்கும். எதுவுமே அறியாத பிஞ்சுப் பாலகரையும், கழுகுகளாய் குதறும் போது, அந்தக் குழந்தை என்ன தவறைச் செய்தது?

தாயாகவும் பயத்துடனே காத்திருக்க வேண்டிய பரிதாபமான நிலையே அவளுக்கு. 'மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்ய வேண்டும்' என்றான் பாரதி. என்ன மா பாவம் செய்து மங்கையாய்ப் பிறந்தோமோ என்று வேதனைப்படவே முடிகிறது. கள்ளிப் பால் கொடுத்துக் கொல்லும்முறை சிறிது மாறினாலும், கருவில் வளர்வது பெண்ணென அறிந்தால் அந்த உயிரை அழிக்கும் நிலை அதிகரித்ததாலேயே, வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கூறக்கூடாதென்னும் நடைமுறை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இத்தனைக் குள்ளாலும் தப்பி உயிரெடுத்து அக்குழந்தை பூமியில் தன் போக்கில் நடமாட முடிக்கிறதா? அது பிஞ்சாக இருந்தாலும், முதிர் பழமாக இருந்தாலும் பாதுகாப்பில்லா உலகமாகவே இருக்கிறது இன்றுவரை.

உயிர் தந்து உருத்தந்து உலவிடும், பூவுலகப் பிரம்மாவாம் பெண். அவளுக்கும் உணர்வுகள் உண்டென்பதையும், ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லை என்பதையும் பிள்ளைகள் வளருங் காலத்திலேயே அவர்களுக்கு ஊட்டி வளர்க்கவேண்டும். அப்போதுதான் பெண்களை பாலினம் கடந்து ஓர் உயிரினமாக ஆணினம் உணரும் நிலை ஏற்படும். தாயாக, சகோதரியாக, மனைவியாக பெண்ணுக்கு அநீதி இழைக்கும் ஆண்களுக்கு கடுமையான தண்டனைகளைத் தரவேண்டும்.பெண்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகப் போராடவேண்டும். ஆட்சி அதிகாரத்தில். தொழிலகத்தில், தெருவிலெனப் எங்கு பெண்கள் இருந்தாலும் அங்கு பெண் களுக்குள், இனம் மதம், நிறம், கடந்த ஒற்றுமை இருக்கவேண்டும்.அப்போதுதான் பெண் பொது எதிரிகளைச் சுலபமாக வெல்ல முடியும்.

அஸ்கார் விருது விழாவிலே, நடிகை Natali portman தன் ஆடையிலே, ஆஸ்கார் விருதுக்குத் தெரிவாகாதவர்கள் பெயர்களை எழுதிய ஆடையை அணிந்து சென்றாராம். இதனால் இது பலரது கவனத்தையும் கவர்ந்ததாம். இது இரு கருத்துக்களப் பிரதிபலிக்கிறது, அவள் நடிப்புக்கு ஆஸ்கார் வாங்கினாலும், அவள் ஆடையே பலரின் கண்ணுக்குத் தெரிந்ததும். அதை அந்த நடிகை பலரின்கவனத்திற்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தியதும்.'அனைத் துலகப் பெண்கள்தினம்' என ஒன்று இருப்பதை அறியாமலே இன்னும் எத்தனையோ பெண்கள் வாழ்ந்துகொண்டு இருப்பதும் உண்மையே. பெண்கள் தம்மைத் தாம் உணரும் நிலை முதலில் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஏற்படவேண்டும். நிர்ப்பந்தமும் பயமுமின்றிப் பெண் வெளியிலே நடமாட வேண்டும். அன்றுதான் உண்மையான மகளிர்தினம் பெண்ணுக்கு அமையும். அதுவரை இதுவும் ஒருகாதலர் தினம், பெற்றோர் தினம் போன்றே வெறும் கொண்டாட்ட தினமாகவேமுடியும்.

அறிஞர் தி.த.கனகசுந்தரம்பிள்ளை (1863 – 1922) மறைந்த நூற்றாண்டு

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் அறிஞர் தி.த.கனகசுந்தரம் பிள்ளையின் தடங்கள்

## 1.தமிழ் இலக்கிய வரலாற்று உருவாக்கத்தில்

தி.த.கனகசுந்தரம்பிள்ளை (தி.த.க) என்றவுடன் அவர் முக்கியமான பதிப்பாசிரியர், உரையாசிரியர் என்பனவே தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சி பற்றி ஆர்வமுள்ளவர்களது நினைவிற்கு வருவது வழக்கமாகும். அத் துறைகளும் நவீன ஆராய்ச்சி சார்ந்தனவாயினும் இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது தமிழிலக்கிய வரலாற்று உருவாக்கம் தொடர்பாக அன்னாரெழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளே முதன்மையிடம் பெறுவனவாக இருக்கின்றன என்று கூறத் தோன்றுகிறது !

தமிழ் இலக்கிய வரலாற்று உருவாக்கம் என்பது பல படிமுறைகள் கொண்டது. நூலாசிரியர் காலம், நூலாசிரியர் வரலாறு நூல்களின் வரலாறு, காலகட்ட ரீதியான வரலாறு என அவற்றை இனங்காண்பது இயல்பாகவுள்ளது. இத்தகைய ஆய்வுச் செல்நெறியின் ஆரம்ப நிலையில் தி.த.க.வின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப்படுகிறது !

பழந்தமிழ் நூல்களின் 'காலம்' என்ற விதத்தில் திருவள்ளுவமாலை, தொல்காப்பியம், வான்மீகி இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் காலம் பற்றிய தி.த.க.வின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் திருவள்ளுவமாலையின் முக்கியத்துவம் பலராலும் அறியப்படாதது. (இதுபற்றி அறிந்தவருள் தி.த.க.வுமொருவர்) "பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஒரே விமரிசன ரத்தினமாலைதான் திருவள்ளுவமாலை" என்பர் வி. சுப்ரமணிய அய்யர். இது கடைச்சங்க காலத்து நூல் என்பர் ஏ. வி.சுப்பிரமணிய ஐயர். கடைச்சங்க காலத்து நூல் அல்ல என்பர் சதாசிவபண்டாரத்தார். தி.த.க.வும் இக்கருத்துடையவரே. இவ்விதத்தில் அவரது பின்வரும் கூற்று முக்கியத்துவமுடையது:



"இந்தப் பாட்டு ('திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ' - ஆ-ர்) மதுரையில் தெய்வத் தன்மை பொருந்திய சங்கப் பலகை ஒன்றிருந்ததென்பதைக் குறித்தலினாலும் அந்தப் பலகையில் திருவள்ளுவரோடொக்க விருத்தற்கு உருத்திரன் மரே ஏற்றவரென்பதால் குறளரங்கேறிய காலத்தில் சங்கப் புலவர் நாற்பத்தெண்மரும் திருவள்ளுவரோடொக்கவிருக்கத் தகுதியற்றவராய் பொற்றாமரை வாவியுள் வீழ்ந்து முழுகினரென்னும் கதைக்குத் தோற்றுமிடமாயிருத்தலினாலும் இது குறள்தோன்றி வெகு காலத்திற்குப் பின் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தேற்றம். சங்கப் பலகையிலேற்றிய இந்தக் கதை கட்டுக்கதை. இது போன்றதொரு கதை சடகோபரியற்றிய திருவாய்மொழி பற்றியும் வழங்குகிறது"

சங்கப்பலகையிலேற்றிய கதை முதலான கதைகள் பலவும் இன்று கூட தமிழறிஞர்கள் பலராலும் ஐயமின்றி ஏற்கப்படும் நிலையில் அது கட்டுக்கதையென்று அன்றே அறிவியல் நோக்கில் தமது கருத்துக்களை முன்வைத்த தி.த.கவின் அறிவுத்திறன் பாராட்டத்தக்கதே!



பேராசிரியர்
செ. யோகராசா

இவ்வாறே 'இராமாயணம்' என்ற இன்னொரு கட்டுரையில் வான்மீகி இராமாயணத்தின் காலம் ஆராயப்படுகின்றது. 'மகாபாரதம்' என்ற கட்டுரையும் அத்தகையதே!

ஏடுகளிலிடம்பெற்றுள்ள இடைச் செருகல்கள் காலம் பற்றிய ஆய்விற்குத் தடையாகவிருப்பது பற்றி அறிந்த தி.த.க அவை பற்றிய ஆய்வுகளிலும் கவனஞ் செலுத்தியுள்ளார். இவ்விதத்தில் பெரிய புராண இடைச்செருகல்களுக்கு காரணமானவரென்று கருதப்படும் வெள்ளியம்பலத்தம்பிரான் தி.த.கவின் கண்டனத்திற்குள்ளாகியுள்ளார்: 'இவ் வெள்ளியம்பலத் தம்பிரான் போன்ற நாணிலிகளாகிய புலவர்களால் நம் சமஸ்கிருத, தமிழ் நூல்கள் சிறப்பும் மதிப்பும் கெட்டுக் கிடக்கின்றவற்றிற்களவில்லை''

சமகாலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் எழுதிய ஆய்வாளர்கள் சிலரும் தி.த.க.வின் கண்டனத்திற்குள்ளாகின்றனர். ''தமிழ் வரலாறு என்ற பெயரால் நூல்களைக் காலமுறைப்படி ஆராய்ந்து நல்ல இலக்கிய வரலாற்று நூல் எழுதியவர்'' என்று டாக்டர் மு. வ. வினால் போற்றப்படும் தஞ்சை சீனிவாசபிள்ளை எழுதிய தமிழ் வரலாற்று நூலொன்று தி.தக. வினால் கண்டனத்திற்குள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. ''குமரியாறு ஒன்றில்லை'' ''தமிழ்ச்சங்கம் தொன்மையானதன்று'' என்பன அவர்சுட்டும் தவறுகளுள் சிலவாகும். தி.த.க.வின் கருத்துக்கள் எவ்வளவு தூரம் சரியானவை என்பதல்ல கேள்வி. சான்றாதாரங்களுடன் தர்க்கரீதியான முறையிலே நிறுவியுள்ளார் என்பதே கவனத்திற்குரியது.

இலக்கிய நூல்களின் 'காலம்' புலவர் 'காலம்' பற்றி கவனம் செலுத்துவது அவசியமென்பதுபற்றி நூலாசிரியர்களுக்குக் கடிதம் எழுதும் வழக்கமும் தி.த.க. விடம் காணப்பட்டது. நூலாசிரியரொருவருக்கு அவ்வாறெழுதப்பட்ட கடிதமொன்றின் பகுதி பின்வருமாறு:

''புலவர் காலத்தைப் பற்றிய அறிவு நமக்குச் சரிவர இருக்குமாயின் பின்னர் எத்தனையோ விஷயங்கள் நன்றாய்ப் புலப்படும். ஆதலால் காலக்குறிப்பை சற்றே விசாரித்துக் குறிக்க! முத்துத்தம்பி பிள்ளையைப்போல் ஆதாரம் யாதுமின்றி காளமேகம் காலம் அறுநூறு வருஷத்துக்கு முற்பட்டதென்று எழுதற்க. தக்க ஆதாரம் கிடைக்கவில்லையாயின் காலம் செவ்வனே தெரியவில்லை என்று சொல்லி விடலாம்.''

## 2.1 பதிப்பு முயற்சிகளில்...

தி.த.க.வின் பதிப்பு முயற்சிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: (1) தொல். எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் (2) தொல்.சொல்லதிகாரம் - சேனாவரையம் (3)கம்பராமாயணம்- பாலகாண்டம்(4) தமிழ் நாவலர் சரிதை.

ஈழமண்டலத் தேவாரம், திருப்புகழ் ஆகிய நூல்களும் சைவ சித்தாந்த நூல்களாகிய சிவஞானமாபாடியம், திருமந்திரம் ஆகிய நூல்களும் தி.த.க.வினால் பதிப்பித்து வெளியிடப் பட்டதாக அறியமுடிகிறது.

மூலபாடத் திறனாய்வு அடிப்படையில் இடம்பெறும் பதிப்பு முயற்சியே செம்மையான பதிப்பு முயற்சி என்று ஆய்வாளர் கருதுகின்றனர். களஆய்விலே கிடைக்கும் பல பிரதிகளையும் தொகுத்து வகுத்து பாடபேதங்களை நுணுகி ஆராய்ந்து காரண அடிப்படையில் சரியான மூலபாடத்தைத் தெரிவு செய்யும் முறையே மூலபாடத் திறனாய்வு(Textual Criticism) என்பது. (கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1971 – 1973இல் பேராசிரியர் கைலாசபதி எமக்கு இக் கற்கைநெறியை அறிமுகப்படுத்தியமை இவ்வேளை நினைவிற்கு வருகிறது) இ∴து (1)ஏட்டுப் பிரதிகளை கால அடைவில் வைத்து நோக்குதல் (2) ஆராய்ந்து நம்பகத்தன்மை அடிப்படையில் சரியானதைத் தேர்ந்தெடுத்தல் (3) பிரதி பேதங்களைக் குறிப்பிடுதல் (4)பாடபேதங்களைக் குறிப்பிடுதல். தமிழ்ப் பதிப்புத் துறையில் ஈடுபட்ட முன்னோடிகளைவிட, முதன்முதலாக தி.த.க.வின் கம்பராமாயணப் பாலகாண்ட பதிப்பு முயற்சியிலேயே மூலபாடத் திறனாய்வுமுறை செம்மையாகக் கடைப் பிடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

''இப்போது இவ் விராமாயணம் பல வித வழுக்களும் பாடபேதங்களும் விரவி வழங்கி வருவதை நாம் அனுமானித்து இயன்ற வரையில் சுத்தமாக்க எண்ணிப் பழைய ஏடுகள்



பல வருவித்துப் பரிசோதித்தோம். பரிசோதித்தபோது முன்னர் அச்சிட்டுள்ள பாலகாண்டத்திலே பலவித வழுக்களும் பல பாடபேதங்கள் புதியனவாகப் புகுத்திய சில கவிகளுந் தோன்றின. 'மணி நுரைக் கொடி' என்பது 'மணியுடைக்கொடி' எனவும் 'மறிவிழியாயர் மாதர்' என்பது மறியுடையாயர் மாதர் எனவும் பிழைபட்டிருந்தன. இவ்வாறு பிழைபட்டிருந்த பாடங்களையும் பாடங்கள் பலவாக வேறுபட்ட விடத்துத்தக்கனவாகக் காணப்படாத பாடங்களையும் எழுத்துச் சொல் வழுக்களையும் நீக்கி இயன்றவரையில் சுத்தப் பதிப்பாக்கிப் பாலகாண்டத்தை முதலில் அச்சிட்டனம்''

மேற்குறிப்பிட்ட பாலகாண்டப் பதிப்புப் பற்றி பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

''..ஆறு காண்டங்களுள் சுன்னாகம் குமார சாமிப் பிள்ளையும் தி.த. கனகசுந்தரம்பிள்ளையும் பதிப்பித்த பாலகாண்டம் ஒன்றே இன்றுவரை சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது''

மேற்குறிப்பிட்ட பதிப்பு முயற்சியில் அ. குமார சாமிப் புலவரும் இணைந்திருப்பினும் தி. த. க.வின் பங்கே அதிகமிருந்திருக்க வாய்ப்புள்ளது. (காரணம், தமது ஆங்கிலப்புலமையினால் அ.குமாரசாமிப் புலவரைவிட தி.த.க.வே மூலபாடத் திறனாய்வு முறை பற்றி அதிகளவு அறிந்திருந்தார்)

எனினும், தொல். எழுத்ததிகாரம் - நச்சினார்க் கினியம் முகப்புரை ''மதுரையாசிரியர் பாரத்து வாசி நச்சினார்க்கினியருரையுடனும் திருகோண மலை கனகசுந்தரம்பிள்ளை பி.ஏ. அவர்கள் பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு செய்து வைத்திருந்த திருத்தங்களுடனும்'' என்று குறிப்பிட் டிருப்பது கவனத்துக்குரியது!

எனினும், மேற்குறிப்பிட்ட இருநூற் பதிப்பு களிலும் காணப்படும் குறையொன்றுள்ளது. பிரதி பேதங்கள், பாடபேதங்கள் பற்றிய விவரங்கள் தரப்படாமையே அதுவாகும். ஆயினும் அத்தகைய குறைபாடு தமிழ் நாவலர் கதைப் பதிப்பிலே தவிர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (விரிவஞ்சி விவரிக்கப் படவில்லை)

ஈழத்து முன்னோடி பதிப்பாளர்களாயினும் சரி, சமகால தமிழ்நாட்டுப் பதிப்பாளர்களாயினும் சரி தி.த.க. போன்று மூலபாடத் திறனாய்வு முறையை அனுசரித்து நூற்பதிப்பு முயற்சியிலீ டுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.2 பதிப்பு முயற்சியுடன் தொடர்புபட்ட கட்டுரைகள் எழுதுவதில்..

மேற்குறிப்பிட்ட விதத்தில் தி.த.க. எழுதிய கட்டுரைகளுளொன்றான 'யாப்பிலக்கணம்' என்ற கட்டுரையின் ஒரு பகுதி பின்வருவது:

''நூலாராய்ச்சிக்கு யாப்பிலக்கண அறிவு இன்றியமையாதது. பழந்தமிழ் நூல்கள் பலவும் இன்னும் அச்சில் வராது ஏட்டிலேயே இருக்கின்றன. ஏட்டிலெழுத்துப் புள்ளியிட் டெழுதப்படாதது. அவ்வெழுத்திலுள்ள பாக்களின் உண்மைப் பாடங்களைக் கண்டுகொள்வதற்கு யாப்பிலக்கண உணர்ச்சி ஒருதலையாக வேண்டும். அச்சில் வந்த நூல்களிலும் பலவற்றில் பாடல்கள் பிழைபடப் படித்து வழங்கப்பட்டு வருகின்றன. நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் அன்போடு படித்து ஆலயங்களிலும் வழங்கப்பட்டுவரும் தேவாரம் முதலிய திருப்பாடல்களுள்ளேயே இவ்வகைப் பிழைகள் காணப்படுமாயின் வழக்கு வீழ்ந்து கிடந்த எஞ்சிய பழந்தமிழ் நூல்களின் நிலைமையைச் சொல்லுவதேன்?''

## 2.3. பிறரது பதிப்பு முயற்சிகளுக்கு உதவுவதில்...

ஏடுகள் வைத்திருந்தோர் பலரும் கருமி களாகத் திகழ்ந்த ஆரோக்கியமற்ற சூழலில் தி.த.க. சமகாலத்தில் பதிப்பு முயற்சிகளிலீடுபட்டு வந்த பலருக்கும் இடர்களின் மத்தியில் அரிய ஏடுகள் பலவற்றைக் கொடுத்துப் பேருதவி புரிந்துள்ளார். பின்வரும் பட்டியலை அவதானிக்க:

*உ.வே.சாமிநாதையருக்கு: குறுந்தொகை, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலை ஏடுகள்.

*எஸ். வையாபுரிப்பிள்ளைக்கு: புறத்திரட்டு, நான்மணிக்கடிகை, கயாதரம்

* ரி.செல்வக்கேசவராய முதலியாருக்கு: ஆசாரக்கோவை.

* அ. நாராயணசாமி ஐயருக்கு: நற்றிணை

*இராகவையங்காருக்கு : அகநானூறு.

*ரா. கோவிந்தராசமுதலியாருக்கு: களவழி நாற்பது

*சி.வை.தாமோதரம்பிள்ளைக்கு: கலித் தொகை

ஏடுகள் கிடைக்குமிடங்கள் பற்றிக்கூறி ஊக்கப்படுத்துபவராகவும் தி.த.க திகழ்ந்தார்.

சி.வை.தா. இதுபற்றி ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகின்றார்: "திரிகோணமலை ஸ்ரீ த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் சென்னைப் பிராசிய கிரந்த மண்டபத்திற்றான் நெய்தற் கலி பார்த்தேனென்று உறுதியாகச் சொன்னமையால் மீளவும் அவ்விடஞ்சென்று முன் யான் நீக்கிவைத்த ஏடுகளே இப்பொழுது எனக்கு வேண்டிய நெய்தற்கலியுடயவாயிருத்தல் கண்டு அளவற்ற சந்தோஷமடைந்தேன். அதல்லாமற் பின்னும் ஒரு பிரதி நெய்தற் கலி 23ம் செய்யுள் வரைக்கும் அம்மண்டபத்தே அகப்பட்டது. உடனே பிள்ளையவர்களும் யானுமாக இருந்து எனது பிரதியோடு ஒத்துப் பார்வையிட்டு ஆங்காங்கு கண்ட பாடபேதங்களைக் குறித்துக் கொண்டோம்…"

## 2.4 பிறரது பதிப்பு முயற்சிகளை முழுமையாக்குவதில்...

நற்றிணைக்கு உரையெழுதுகின்ற முயற்சியி லீடுபட்ட பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ம.ச. சிறிது காலத்தினுள் மரணத்தைத் தழுவியதால் அதனைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியை மேற்கொண்டார் தி.த.க.

குரு சரணாலயர் டி.ஆர்.வேங்கடம்பன்னர் திருக்குறளுக்கு பதின்மர் எழுதிய புத்துரையை பதிப்பித்து வெளியிடும் முயற்சியும் தி.த.க வினால் மேற்கொள்ளப்பட்டது.!

## 3. உரையாசிரியராக...

அகப்பொருள் விளக்கம். கம்பராமாயணம் - பாலகாண்டம் ஆகிய நூல்களுக்கு அ.குமார சாமிப் புலவரோடு இணைந்து தி.த.க.வினால் உரைகள் எழுதப்பட்டுள்ளன.

இவர்களது உரைத்திறன்முறை எத்தகைய தென்பது பற்றி பின்வரும் பகுதியூடாக அறிய முடிகிறது:

'வைதவையின்' என்ற பாடலுக்கு எழுதப் பட்ட தெளிவுரை:

(அறவோர் சபித்த சாபமொழிபோன்ற அம்பினால் மராமரமேழுந் துளைபட எய்த இராமன் பொருட்டு தெய்வீகச் செயலால் சம்பவித்த பெருங்கதைக் காவியமாகச் செய்த வான்மீகி முனிவருடைய (வலிய) சொற்கள் வழங்கி நிலைபெற்ற இடத்திலே நொய்வதிலும் நொய்வதாகிய சொற்களால் ஒரு நூல் செய்யத் தொடங்கினேன். என்னறிவு இருந்த வாறென்ன?

**விளக்கவுரை:**

நொய்சொல் -உள்ளீடில்லாத மெல்லிய சொல். நூற்கல்- இயற்றல். வைவுகாப வார்த்தை -வைண முநிவர் சொல் வளைய வாணிகன் (அதிகரயன் -க ங உ) எனப் பின்னுங் கூறுவர். வான்மீகி முனிவர் தமசை யாற்றங்கரையிலே அன்றில் பறவை ஒன்றினைக் கொன்ற வேடனை நோக்கி ஒரு சுலோகமாய் பின்தராயவழி இராமசரிதையாய் அமைந்தமைபற்றி 'எய்திய மாக்கதை' என்றார்!

(மேற்குறித்த உரைத்திறன் பற்றி நன்கறிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் ஈழத்து உரைமரபு நூலினைப் பாரக்க)

## 4. தமிழ் அகராதி – உதவிப் பதிப்பாசிரியராக:

தமிழ்நாட்டில் வண J.S சாண்டலர் தலைமையில் தமிழகராதி (Tamil Lexicon) முயற்சியொன்று 1913இல் ஆரம்பமாகியது. நீண்ட காலம் நிகழ்ந்த இம்முயற்சியின்போது உதவிப் பதிப்பாசிரியராக தி.த.க நீண்ட காலம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. மும்மொழி களிலும் (தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம்) இவருக்கிருந்த அதிபுலமையே இதற்குக் காரணமெனலாம்.

## 5.கண்டன முயற்சியில் ஈடுபட்டவராக

சமகால அறிஞர்களுடனான தொடர்புகளைக் கடிதங்கள் மூலமாக வலுப்படுத்திக் கொண்ட தி.த.க அவர்களது இலக்கிய முயற்சிகளிலே தவறு கள் காணப்படுமிடத்து நல்லறிவுச்சுடர் கொளுத்தப் பின்னின்றாரல்லர். ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, சி.வை தாமோதரம்பிள்ளை, தி. செல்வ கேசவராய முதலியார், சீனிவாச பிள்ளை முதலான பலர் கண்டனத்திற்குரியானவர்களுள் சிலராவர். ஒரு தடவை அ.குமாரசாமிப் புலவருக்கு எழுதி யிருந்த கடிதத்தின் ஒரு பகுதி இவ்வாறு அமைந் துள்ளது: திருவவதாரப் படலம் 22ஆம் பாட்டில் நிசரதம் என்பதை வடமொழியாகக் கொண்டு நி+சரதம் எனப் பிரித்து சரதம் என்பதற்கு 'மெய்'

என்ற பொருள் கொண்டிருக்கிறீர்கள். சரதம் வடமொழியாகக் காணவில்லை வடமொழி அகராதிகளில் அச்சொல் காணப்படவில்லை. இதற்கு சமாதானம் என்ன..?

## 6. மொழிபெயர்ப் பாசிரியாக

தி.த.கவின் மும்மொழிப் புலமை காரணமாக அன்னார் முக்கியமான மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

சமகால சமஸ்கிருத அறிஞராகிய பண்டிதர் நடேசசாஸ்திரியார் வான்மீகி இராமாயணத்தைத் தமிழிற்கு மொழிமாற்றம் செய்து கொண்டிருந்தார். அவ்வேளை தி.த.க. தம்மால் முடிந்த வரை சாஸ்திரியாருக்குதவினார். கிஷ்கிந்தா காண்டத்தின் சிலபகுதிகளும் சுந்தரகாண்டம் முழுமையும் மொழிமாற்றுஞ் செய்யப்படாதிருந்த வேளையில் சாஸ்திரியார் காலமாகிவிட, தி.த.க. அதனை ஏற்று முடிக்கின்றார். தி.த.கவின் இம்மொழிபெயர்ப்பு தமிழறிஞர்கள் பலரால் போற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது!

தி.த.க.வின் ‘இல்லாண்மை’ என்ற நூல் நவீன கல்விமுறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடமொன்றினைக் கற்பிக்கும் நோக்குடன் பல ஆங்கில நூல்களைத் தழுவி எழுதப் பட்டுள்ளது. இல்லத்தினை அமைத்தல், அழகுபடுத்தல், குழந்தை வளர்ப்பு, வரவு செலவு, நோயானவருக்குதவுதல் முதலான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது!

## 7. நாவலர் வித்யாநுபாலன யந்திரசாலை முகாமையாளராக

தி.த.க. தமிழ்நாட்டிலிருந்த காலத்தில் சென்னையிலமைந்திருந்த ‘நாவலர் வித்யாநு பாலன யந்திரசாலை’யின் முகாமையாளராகப் பதவி வகித்து அங்கிருந்து பதிக்கப்பட்டு வெளியிடப்படும் நூல்களின் தரம் நாவலர் காலத்து நூல்களின் தரத்தை ஒத்திருப்பதை உறுதி செய்துகொண்டார். தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சுத்தமான பதிப்புக்குப் பேர் பெற்றிருந்த மேற்படி யந்திரசாலை தி.த.க.வின் நற்காலத்திலும் அம்மதிப்பினை பெற்றிருந்ததாக அறியமுடிகிறது.

## 8.கல்விப்பணிகளில்..

பச்சையப்பன் கல்லூரிக் கலைப் பட்டதாரியாகி அதிவிசேட தரச்சித்தி பெற்ற தி.த.க பட்டம் பெற்றபின் சென்னை மாகாண வித்தியா விருத்திச்சங்க மேலதிகாரியாக நியமனம் பெற்றிருந்தாலும் தமது பதிப்புத்துறை ஈடுபாட்டினைச் செயற்படுத்த அது தடையாயிருப்பது கண்டு அப்பதவியிலிருந்து நீங்கினார். சைதாப்பேட்டை ஆங்கில ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளரானார். அதன்பின் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் தொடர்ந்து பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்ப் பண்டிதராக பணியேற்றார். இவரிடம் கல்லூரிகளிலும் தனிப்பட்ட முறையிலும் கல்வி கற்றவர்களுள் பேராசிரியர் கந்தசாமி முதலியார், பண்டிதமணி திருநாவுக்கரசு முதலியார், பண்டிதர் சுப்ரமணியசிவா, வ .உ. சிதம்பரப்பிள்ளை, மேலைப்புலோலி கதிரவேற்பிள்ளை முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்!

மேலும், பல ஆண்டுகளாக சென்னைப் பல்கலைக்கழக பரீட்சகர்களுளொருவராகவும் நான்காண்டுகள் பரீட்சைச் சங்கத்தின் தலைவராகவும் தி.த.க.கடமையாற்றியிருக்கின்றார். முற்குறிப்பிட்டவாறு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழகராதிப் பதிப்புக் குழுவில் ஒருவராக விளங்கிய தி.த.க. மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதராகவும் பணிபுரிந்துள்ளார்!

## 9. பிறபணிகளில்...

ஈழத்து அறிஞர்களின் நூல்கள் -குறிப்பாக அ.குமாரசாமிப் புலவரது நூல்கள் தமிழ்நாட்டில் பாடப்புத்தகங்களாவதற்கும் பிற அறிஞர்கள் சிலரது நூல்கள் பிரசுரமாவதற்கும் வழிவகுத்தவர் தி.த.க.என்பது பலருமறியாததொன்று.!

## 10. கவிஞராக...

கவிதை ஆக்கும் திறன் இயல்பாகவே கைவரப்பெற்ற தி.த.க. அதனை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. சாதாரண மக்கள் பாடலை விரும்பமாட்டார்கள் என்பதனால் வசனமாக எழுதுவதையே அவர் விரும்பினார் என்றுமறியப்படுகின்றது. எனினும் அன்னாரது கவித்திறன் வெளிப்பட்ட சில சந்தர்ப்பங்களுமுள்ளன. அவர் கல்விகற்ற பச்சையப்பன் கல்லூரி அதிபர் டி.எம். குறுக்சாங்கு ஒரு தடவை அபாயகரமான நோய்க்கு ஆட்பட்டபோது மனம் பொறுக்கவியலாத தி.த.க. குயிற்பாட்டு ஒன்றை எழுதி அனுப்பியிருந்தார். நோயிலிருந்து மீண்ட அதிபர் அப்பாடலை தி.த.க.வின் முன் வாசித்துக் காட்ட முற்பட்டபோது பாடலின் உருக்கமான தன்மையினால் கண்ணீர் பெருகியமையால்

வாசிக்கமுடியாதிருந்தாராம். அக்குயற்பாட்டின் ஒரு பாடல் கீழே தரப்படுகின்றது:

**“சீர்மேவு சோலையின்கட் சேர்த்துறையும் பூங்குயிலே**
**பேர்மேவு பச்சையப்பப் பிரபுபெய ரானிலகும்**
**ஏர்மேவு கல்விபயி லெழிற்கழகத் தேமுதலாம்**
**நீர்மேவு புண்ணியனை நீநினைந்து கூவாயே!**
**நேமிபுகழ் குறுக்சாங்கை நேயமொடு கூவாயே”**

திருகோணமலை முத்துக்குமாரசாமி வெண்பா அவரியற்றிய மற்றுறொரு பாடல் நூலாகும். அதில் இருந்து ஒரு பாடல் பின்வாறு:

**“கங்கை யணியுங் கணபதியைக் கைதொழுது**
**மங்குல் படி கோணை மாமலையில் – தங்குமொரு**
**முத்துக் குமார முதல்வன் கழலிணக்கோர்**
**பத்துப் பகர்வல் வெண் பா”**

### 11. அறியப்படாதவராக...

மேற்குறிப்பிட்ட விதங்களில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் தடம் பதித்துள்ள தி.த.க.வின் முக்கியத்துவம் சரியாக அறியப்பட்டிருப்பதாக கூறமுடியாதுள்ளது. தமது தமிழிலக்கிய வரலாற்றில் டாக்டர் மு. வரதராசன் இவர் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இவ்வேளை நினைவிற்கு வருகிறது:

‘இலங்கை அளித்த வழக்கறிஞர்களுள் தி. கனகசுந்தரம்பிள்ளை (கி.பி 1862 - 1922) என்பவரும் குறிப்பிடத்தக்கவர், இலக்கியத்தொண்டு புரிந்தவர். வடமொழி வான்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தையும் சுந்தர காண்டத்தையும் தமிழில் மொழிபெயர்த்தார். கம்பராமாயணத்தில் பாலகாண்டத்திற்கு உரை எழுதியுள்ளார்’’

தி.த.க. எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் நூலுருப் பெறாமையே இவ்வாறான ஆரோக்கியமற்ற சூழலுக்குக் காரணமென்பதை குறிப்பாக திருகோணமலை அன்பர்களாவது உணர்வார்களாக!

(பி.கு: திருகோணமலை தி.த.க. பற்றி நினைவுப் பேருரையாற்ற 1993இல் வாய்ப்பேற்படுத்தித் தந்த பேராசிரியர் சி. மௌனகுருவும் தம்மிடமுள்ள தி.த.க.வின் கடிதங்கள் சிலவற்றை பார்வை யிடத்தந்துதவிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும், இல்லாண்மை பற்றி தகவல் தந்த புதிய தலைமுறை ஆய்வாளர் திரு. சத்தியதேவனும் நன்றிக்குரியர்).

❍❍❍

## தொட்டுச் சென்ற நினைவுகள்

ஆழியின் அடிவானத்தில்
உடைந்த நிலவு,
அலைகளின் அசைவில்
மிதந்துகொண்டிருக்கும் படகு
காற்றின் துன்புறுத்தலில்
நிதானம் இழந்து
நிலவின் அந்தரங்கத்தை
உடைக்க முயற்சிக்கிறது
சிறகடித்த ராக்குருவி
படகின் முனையில்
கரையினை நோக்கி
சிறகை ஒடுக்குகிறது,
துள்ளி எழுகின்ற
மீன்களின் நகர்வில்
கார்மேகக் கூந்தலின்
தொடுகை சிலிர்க்கிறது.

**கனகசபாபதி செல்வநேசன்**
**அல்வாய்**



# ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

எனது மேலதிகாரி கொழும்பில் இருந்து அனுப்பியிருந்த மின்னஞ்சலை திரும்ப திரும்ப வாசித்துப்பார்த்தேன். கொழும்பிலிருந்து வரும் அந்த பெண்ணை வரவேற்று தேவையான எல்லா வசதிகளையும் குறைவில்லாமல் செய்து கொடுக்கும்படி எழுதியிருந்தது. எவ்வளவு முயன்றும் என்ன காரியமாக வருகிறாள் என்ற விடயத்தை என்னால் ஊகிக்க முடியவில்லை. பொதுவாகவே எனது நிறுவனம் சம்பந்தப்பட்ட பணிகள் என்றால் நிச்சயம் எல்லா விடயங்களையும் துல்லியமாக எழுதிவிடுவது அவரின் வழக்கம். தொலைபேசி மூலம் விடயங்களை கேட்டறிவது அவருக்கு பிடிக்காத ஒன்று. அவருக்கு தமிழ் பேச முடியாதது ஒரு காரணம். எனக்கு சிங்களம் பேசப்பிடிக்காது என்பது இன்னொரு காரணம். ஆங்கிலத்தில் சரளமாக உரையாட அவருக்கு முடியாது என்பது மேலதிகமான ஒரு காரணம்.

நான் அந்தப் பெண்ணின் பெயரை அடிக்கடி சொல்லிக்கொண்டேன் ‘ஜெயந்தி’

இவ்வாறாக பல பெயர்கள் இருக்கின்றன. லீலாவதி, பூஜா, பிரியதர்சினி என்று பல. தமிழா, சிங்களமா என்று நேரில் பேசினாலன்றி ஊகிக்கமுடியாது.

‘ஜெயந்தி!’ எனக்கு இந்த பெயரை கண்டதும் அவளுடனான சந்திப்பு எப்போதும் நினைவிலிருக்கும்படியாக இருக்கும் என்று ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றியது. ஒன்றை மறந்துவிட்டேன் மறக்கமுடியாததாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் இனிமையாக இருக்கும் என்று நினைக்கவில்லை.


அப்போதெல்லாம் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கும் விமானப்படையின் விமானங்கள் இலங்கையில் அதிக சம்பளம் வாங்கும் பிரமுகர்களை யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் காவிக்கொண்டு பயணித்துக்கொண்டிருந்தன. மாலை நாலு மணிக்கே நான் தயாராகி காரை எடுத்துக்கொண்டு விமானநிலையத்துக்கு சென்றுவிட்டேன். மிகக்கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகள், அடையாள உறுதிப்படுத்தல்களைத் தாண்டி என்னுடன் வேறு சிலரும் முன்னரே வந்து காத்திருந்தனர். மிக உயரமான கறுப்பு நிற நாய்கள் எங்களையும், வாகனங்களையும் முகர்ந்து பார்த்துவிட்டு எங்களை முறைத்தபடி உட்கார்ந்திருந்தன.

ஐந்து மணியளவில் கண்ணாடி அணிந்த பொதுநிறமான ஒரு பெண் என்னிடம் வந்து “நீங்கள்தான் என்னைக் கூட்டிச்செல்ல வந்தவரா?” என்று கேட்டாள். முன்பின் அறியாத ஒருவரை முதன் முதலில் சந்திக்கும்போது தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற நினைவு அவளுக்கு தோன்றியதாக தெரியவில்லை.

“நீங்கள்?”

“ஜயந்தி!”

“ஓம்! நல்லது நாம் போகலாம்.”



அலைமகன்

எங்களது அலுவலகம் ஆனைக்கோட்டையில் அமைந்திருந்தது. ஆனைக் கோட்டையிலேயே ஒரு நல்ல தரமான விடுதியை ஏற்பாடு செய்திருந்தேன். விடுதிக்கு போகும்வரை அவள் எனது கண்களை நேராக பார்த்துக் கதைப் பதை தவிர்த்தாள். நிச்சயம் வயது முப்பத்திரெண்டுக்கு



மேல் இருக்க வாய்ப்பில்லை. நல்ல களையான, முகவெட்டு.

"எனக்கு அப்பா ஜெயந்தி என்றுதான் பெயர் வைத்தார். ஆனால் நான் ஜயந்தி என்றுதான் பாவிக்கின்றேன். ஏனென்றால் கொழும்பில் இதை கேட்டால் சிங்களம் என்றுதான் நினைப்பார்கள்."

நான் கேட்காமலேயே, காரில் வந்து கொண்டிருந்தேபோது, நடுவில் என்னைப் பார்த்து கூறினாள். அப்போதும் அவள் சிரிக்க வில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் விடுதிக்கு தொலைபேசியில் பேசி முற்பதிவு செய்திருந்தேன். விடுதிக்குப்போய் மேலாளரை சந்தித்த போது எனக்கு ஜயந்தியின் இரவுப் பொழுதுகள் குறித்து ஒருவித அவநம்பிக்கை ஏற்பட்டது. விடுதி மேலாளர் பணியென்பது ஒரு அரச உத்தியோகம் இல்லை என்று இதுவரை யாரும் அவருக்கு நினைவூட்டவில்லை. தடித்த பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடிக்குக் கீழாக விடுதிக்கு வருபவர்களை மதிப்பீடு செய்தார். ஒரே ஒரு வினாடிமட்டும் முகத்தை பார்த்துவிட்டு குனிந்து வேகமாக பதிவுப்புத்தகத்தில் விவரங்களை எழுதத்தொடங்கினார்.

விடுதியில் தங்க வருபவர்களுக்கு தன்னைவிட அறிவும் அனுபவமும் குறைவு என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். அவர்களுக்கு என்ன தேவைப்படும் என்பது தொடர்பில் அவருக்கு மிகத்தெளிவான முன்முடிவுகள் இருந்தன. விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட தேவைகள் இருக்கும் என்பதில் அவருக்கு ஒருபோதும் நம்பிக்கை கிடையாது.

"நான் ஒரு பட்டயக்கணக்காளர்"

எனக்கு அந்த தகவல் தேவைப்படவில்லை. ஆனால் இதுதொடர்பில் அவருக்கு கவலை ஏதும் இல்லை.

"நான் சவூதியில் பத்து வருடங்கள் பணியாற்றிவிட்டு பின்னர் யாழ்ப்பாணம் வந்தேன் கொழும்பில் எனக்கு இரண்டு வீடுகள் இருக்கின்றன."

உலகின் மோசமான விடுதி முகாமையாளர்கள் சவூதியில் பட்டயக்கணக்காளர்களாக பணிபுரிந்திருக்கக்கூடும்.

அவர் எழுதி முடித்தபோது நான் ஜயந்தியிடம் சொல்லிக்கொள்ளாமலே விடைபெற்றேன்.

விடிந்தும் விடியாததுமாக எனக்கு தொலைபேசி அழைப்பு அவளிடமிருந்து வந்தது.

நான் விடுதியை அடைந்ததும் அவள் சொன்னாள்.

"உடனடியாக வேறு விடுதிக்கு நான் போயாக வேண்டும். உம்மைப் பற்றி கொழும்பில் புகாரளிக்கப்போகிறேன். எனக்கு மிகவும் மன உளைச்சலாக இருக்கிறது."

நான் நேற்று பயந்தது போலவே நடந்து விட்டது. இரவில் வெகுநேரம் மின்வெட்டு இருந்தது. அந்த ஆணவம் பிடித்த, அதிக பிரசங்கித்தனமான முகாமையாளர் எந்த மாற்று ஏற்பாட்டையும் செய்யாமல் மெழுகுவர்த்தியை, அதுவும் அவள் வலிந்து கேட்டுக்கொண்டதன் பின்னரேயே அனுப்பியிருக்கிறான்.

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி நடக்கும் மின்வெட்டு குறித்த முகாமையாளரின் அலட்சியமான விளக்கங்களை அவள் காதுகொடுத்து கேட்க தயாராக இல்லை.

இவை எல்லாவற்றையும் விட மோசமான வேறொன்றும் நடந்திருக்கிறது. இரவில் மின்வெட்டு தொடர்பில் வாக்குவாதம் ஆரம்பித்த போது முகாமையாளர் நடுவில் ஒரு வார்த்தையை கூறிவிட்டார். அதாவது

"நீங்கள் யாழ்ப்பாணத்தவர்கள், எனவே இவற்றை பெரிதுபடுத்தக்கூடாது. பொறுத்துக் கொண்டு போவீர்கள் என்று எதிர்பார்த்தேன்."

ஆனால் ஜயந்தி இதைப் பொறுத்துக் கொள்வதாக இல்லை. ஜயந்திக்கு மின்வெட்டு கொடுத்த மனஉளைச்சலைவிட யாழ்பாணத்தவர்கள் என்ற முகாமையாளரின் பேச்சு அதிக கோபத்தை கிளப்பியிருந்தது அவள் பேச்சில் தெளிவாக தெரிந்தது.

"பனம்கொட்டை பொறுக்கிகள்" என்று கோபாவேசத்துடன் என்னிடம் முகாமையாளரைப் பற்றி சீறினாள்.

ஒருவழியாக இன்னொரு விடுதி ஒன்றை ஏற்பாடு செய்து முடித்தேன். அந்த விடுதி நல்லூர் கோவில் வீதியில் இருந்தது. மிக அழகிய முகப்புடன் கூடிய வீடு. உண்மையில்

அது விடுதி அல்ல. ஒரு சாதாரண வீடுதான். அதை முன்பு ஐநா அலுவலகத்தில் பணியாற்றிய மோர்கன் என்பவர் வாங்கியிருந்தார். அவர் மீண்டும் இங்கிலாந்துக்கு செல்லும்போது தனது நீண்டகால உதவியாளருக்கு இலவசமாக கொடுத்த வீடு அது. அவரின் பெயராலேயே இப்போதும் அழைக்கப்படுகிறது. அதிகமான செலவும் இல்லை. ஒரு உதவியாளர் மட்டுமே எப்போதும் இருப்பார். முக்கியமாக பட்டயக்கணக்கியலில் பட்டம் பெற்ற முகாமை யாளர்கள் எவரும் இல்லை.

பிரச்சினை இன்னும் முடிந்துவிடவில்லை. பயிற்சிப்பட்டறை நடைபெற்ற இடம் மிகவும் சுமாராக இருந்தது. மிகவும் பழசான ஒரு மின்விசிறி சத்தமிட்டபடியே இயங்கிக்கொண்டிருந்தது. அதனை ஜயந்தி அசையும் திசைக்கேற்ப பத்து நிமிடங்களுக்கொருமுறை நான் மாற்றி வைக்கவேண்டியிருந்தது.

"யாழ்ப்பாணத்தில் வெய்யில் மிக மோசமாக இருக்கிறது. இங்கே AC இல்லாமல் எப்பிடி சீவிக்கிறீர்கள்?"

"இங்கே ஒருவரும் AC பாவிக்கும் வழக்கம் இல்லை" என்று கூறினேன். சலிப்புடன் அவள் முகத்தை திருப்பிக்கொண்டாள்.

அடுத்த நாள் போயா விடுமுறை. ஆனைக் கோட்டையை சுற்றிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். நான் மெதுவாக காரோட்டிக் கொண்டிருந்தேன். எனது வழக்க மான விசாரிப்புகளான, அம்மா, அப்பா, காதலன், திருமணம் என்பதுபற்றியெல்லாம் நான் வாய் திறக்கவில்லை. அதன் விபரீதங்களை ஒருவாறு முன்கூட்டியே ஊகித்துவிட்டிருந்தேன். என்றாலும் நான் ஊகித்த ஒரே விடயம் ஜெயந்திக்கு இன்னும் திருமணமாகவில்லை.

ஆனைக்கோட்டையின் ஒவ்வொரு பகுதிக ளையும் சற்று வியப்புடன் கூடிய குதூகலத்துடன் பார்த்துக்கொண்டே வந்தாள். இடையிடையே தனது இளமைக்கால நினைவுகளையும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நான் படிக்கும்போது அடிபாடு மோசமாக இருந்தது. இருந்தாலும் நானும் பக்கத்துவீட்டு பிள்ளைகளும் சைக்கிளில் நீண்ட தூரம் சென்று பள்ளிக்கூடம் போய்வருவோம். அப்போதெல்லாம் இப்போதை விட எனக்கு தைரியம் அதிகம்."

"நீங்கள் இங்கேயா படித்தீர்கள்?"

"ஓம்! இதே ஆனைக்கோட்டையில்தான், O/L வரைக்கும்."

"எங்கேயாவது, பாட்டு CD கடைகளில் நிறுத்துங்க. எனக்கு சில பாட்டுக்கள் வேணும்."

ஆறுகால மடத்திலிருந்து ஒரு அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ஒரு வீடியோ கடையில் நிறுத்தினேன். உள்ளே சென்றதும் தனக்கு தேவையான பாட்டுக்களை அவள் பட்டியலிடத்தொடங்கினாள்.

மிக அதிகளவான பாட்டுக்கள் தொண்ணூறுகளின் இடையிலும் இறுதியிலும் வந்தவை. அவள் மிகவும் வேண்டி ரசித்த பாட்டு 'வானம் எதுவரைக்கும் எதுவரைக்கும் வாழ்வை ரசிக்கவேண்டும் அதுவரைக்கும்.' ஆனால் அதன் பிரதி கிடைக்க நீண்ட நேரமாகிவிட்டது. மிகப் பழைய பாட்டு.

"நீங்களும் ஏதாவது பாட்டுக்கள் உங்களுக்கு தெரிவு செய்யுங்களேன்."

நான் தெரிவுசெய்யத்தொடங்கினேன். பெரும் பாலும் இளையராஜா பாட்டுக்கள் ஒரு சில ரகுமான் பாட்டுக்கள். நான் இறுதியாக ஒரு அழகிய பாடலைத் தெரிவு செய்தேன்.

'ஏண்டி கள்ளச்சி என்னை தெரியலையா?'

"என்ன நீங்கள் இந்த பாட்டை தெரிவு செய்கிறீர்கள்? சந்தேகமாக இருக்கே?" முதன் முதலாக அவளின் முகத்தில் கேலியுடன் கூடிய மலர்ந்த சிரிப்பு. எனக்கு அவளின் காதலை, திருமணத்தை பற்றிக்கேட்கவேண்டும் என்று அந்தக்கணத்தில் தோன்றியது. மிகுந்த கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டேன்.

நீண்ட நேரம் அவளுடன் செலவழித்த பின்பு நான் ஒரு விடயத்தை கண்டறிந்தேன். ஜெயந்தி பேசுகின்ற தமிழ் சற்று கொழும்பும் கண்டியும் கலவையான பேச்சுவழக்கு. வேண்டுமென்றே பேசி திணித்து பழக்கப்படுத்திக்கொண்டது அது. தனது பேச்சில் யாழ்ப்பாணத்து வாடை இருக்கக்கூடாது என்ற அவளின் எண்ணத்தைப் புரிந்துகொள்ள எனக்கு நீண்ட நேரம் எடுக்க வில்லை.

## 02

மாலை நேரத்தில் கார் ஒரு பழைய பெரிய வீட்டின் முன்னால் நின்றது. நானும் ஜெயந்தியும் வீட்டின் உள்ளே போனோம். வீட்டின் உட்புறம் மிகவும் பழைய பொருட்கள், பழைய புகைப்படங்கள் மற்றும் பழைய கிழவி ஒருத்தியும் இருந்தனர். சுவர்களில் ஒட்டடைகள்

தாராளமாக தொங்கிக்கொண்டிருந்தன. மிகவும் வயதான ஒரு கிழவி ஒரு பெரிய மரக்கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். ஜெயந்தியை கண்டதும் அவளின் கண்கள் உற்சாகத்தில் மின்னின. அவளது கட்டிலுக்கு கீழே ஒரு பருத்த பூனை. வெள்ளையும் கறுப்பு புள்ளிகளுடனும் இருந்த அது எங்களை கண்டதும் கிழவியின் கால்களை உரசியபடியே அடுப்பங்கரைக்குள் ஓடியது. கிழவியின் அருகிலிருந்த சிறிய நாற்காலியில் கொஞ்சம் பல்வேறு நிறத்தில் பூட்டுக்குளிசைகள், பழைய வெள்ளிச்செம்பில் தண்ணீர், முடியும் தறுவாயிலிருந்த தலை யிடிக்கு பாவிக்கும் சித்தாலேப்பை கிரீம் எல்லாம் இருந்தன. கிழவியின் பெரும்பாலான நேரம் கட்டிலிலேயேதான் செலவழிகிறது போலும். கட்டிலுக்குக்கீழே மீதமிருந்த கோப்பித் தண்ணீரில் வரிசையாக எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன. கட்டிலின் தலைமாட்டில் ஒரு பழைய டார்ச் லைட் ஒன்றும் இருந்தது.

"இந்த பூனை இப்பிடித்தான் புது ஆக்களைக் கண்டால் பிடிக்காது. ஆனா பாவம் என்ன விட்டுட்டு எங்கயுமே போகாது." என்றாள் கிழவி.

ஜெயந்தியின் கைகளை பிடித்து நீண்ட நேரம் தடவிக்கொண்டிருந்தாள். ஜெயந்தியின் முகத்தில் பெரிதாக மாற்றங்கள் ஒன்றும் இல்லை. கிழவி "பிள்ளை, பிள்ளை" என்று முனகிக் கொண்டிருந்தாள். கிழவி ஜெயந்தியின் பேத்தியாக இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன்.

"ஆச்சி நீங்கள் இங்கே யாருடன் இருக் கிறீர்கள்?" இது நான்.

"நானும் இந்த பூனையும்தான் மோனை. கொஞ்சமாக சமைக்கிறதில இவனுக்கும் குடுப்பன் ஏதும் அவசரம் எண்டால் பக்கத்தில இருக்கிற கவிதா ஏதும் உதவிக்கு வருவாள் வேறென்ன வேணும்." அவரது பேச்சில் தான் பெரிதாக சிரமப்படவில்லை என்ற பாவனை இருந்தது.

நாம் இருவரும் நீண்ட நேரம் அங்கே இருந்து தேநீர் அருந்திவிட்டு செக்கல் நேரம் தொடங்கியதும் புறப்பட்டோம்.

மூன்றாம் நாள் காலை நானும் ஜெயந்தியும் காரில் பத்திரிகை அலுவலகத்துக்கு சென்றோம். எமது நிறுவனத்தின் வேலைத் திட்டத்துக்கு பொருட்களை வழங்குவதற்கு வேண்டிய ஒப்பந்தங்களை பெற விளம்பரம் செய்ய வேண்டியிருந்தது. படிவங்களை நிரப்பிவிட்டு ஜெயந்தியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கேட்டார் பத்திரிகை ஊழியர். ஜெயந்தி சங்கடத்தால் நெளிந்தாள். என்னை தனது ஓரக்கண்களால் கவனித்தாள். எனக்கு மிகுந்த சங்கடமாகிவிட்டிருந்தது. உண்மையில் நான் உள்ளே வந்திருக்கவேண்டாம். இப்போது வேறு வழியில்லை. நான் அவளைக் கவனிக்காதவன் போல நேரே பார்த்துக் கொண்டி ருந்தேன். ஆனால் அவள் எழுதப்போகும் அடையாள அட்டை எண்ணுக்காக ஆவலுடன் காத்திருந்தேன். எனக்குப் புரிந்துவிட்டது. அவளுக்கு வயது அதிகமாக இருக்க வேண்டும். அதை அவள் வெளிப்படுத்த விரும்ப வில்லை. ஆனால் இப்போது வேறு வழியில்லை. முடிவில் எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவளுக்கு நாற்பத்திரெண்டு வயது நிரம்பி விட்டது. உண்மையிலேயே எனக்கு மிகுந்த அதிர்ச்சி. நான் எதையுமே காட்டிக் கொள்ள வில்லை. பார்ப்பவர்கள் நிச்சயம் முப்பத்தி ரெண்டுக்கு அதிகமாக சொல்லவே மாட்டார்கள். அவள் அடையாள அட்டை இலக்கத்தை வெளிப்படுத்த ஏன் இவ்வளவு தயங்கினாள் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது.

இவ்வளவு வயதான ஒருத்தி மிகுந்த சிரத்தை எடுத்து தனது ஆரோக்கியத்தை பேணிக்கொண்டிருக்கிறாள். எனக்கு அதன் பின்னர் அவள் மீது ஒருவித ஈர்ப்பு வந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டேன். அடுத்தநாள் மாலையில் கொழும்புக்கு பயணிக்க வேண்டும்.

"நீங்கள் என்னுடன் கொழும்புக்கு வந்து என்னை காரில் கொண்டுபோய் விட முடியுமா? எனக்கு இந்த யாழ்ப்பாண பஸ்காரங்களை கண்டாலே துப்பரவாக பிடிக்கவில்லை." என்றாள். எனக்கு இங்கே சில வேலைகள் இருந்தாலும் அவளுக்கு கொழும்புவரை காரோட்டிக்கொண்டு போவது உண்மையில் மனதுக்கு சந்தோசமாக இருந்தது. அதைவிட என்னைப்பற்றி கொழும்பில் புகாரளிப்பதை பெரும்பாலும் தவிர்க்கலாம் என்று எண்ணினேன். இப்போதைய சூழ்நிலையில் நான் இந்த வேலையை விட்டுவிட்டால் என்னால் வேறு வேலை தேடுவது மிகக்கடினம்.

இரவு உணவு உண்பதற்கு கிளிநொச்சியில் ஒரு அசைவ உணவகத்தில் நிறுத்தினேன்.

இருவருக்குமாக கோழிக்கொத்து இரண்டை அவள் வரவழைத்தாள். என்னிடம் எந்த தெரிவையும் அவள் கேட்கவில்லை என்பதை நான் கவனித்தேன். கொத்துரொட்டி எனக்கு மிகவும் பிடிக்கும் என்பது வேறு விடயம்.

ஆனால் பிரச்சனை வேறு ரூபத்தில் வந்து சேர்ந்தது. ஏறத்தாழ கடை மூடும் நேரம் அது. தயாரித்த கொத்துரொட்டியில் கொஞ்சம் தூக்கலாகவே உப்பை கொட்டியிருந்தான் கடைக்காரன். எனக்கு திகிலாக இருந்தது. என்னனென்ன விபரீதங்கள் நடக்கபோகுதோ என்று மிரண்டபடி.

"கொஞ்சம் உப்பு கூடப்போல்" என்று மெதுவாக அவளிடம் சொன்னேன். கடையை தெரிவு செய்தது நான் என்பதால் புகாரளிப்பதற்கு இன்னுமொரு காரணம் அவளுக்கு கிடைத்துவிட்டது. அவள் சிறிது நேரம் கோப்பையையே பார்த்துக்கொண்டிருந்தாள். பின்னர் சற்று இள முறுவலுடன் "தங்களை என்றைக்கும் மறக்கக் கூடாது என்பதால் நிறைய கொட்டியிருக்கினம் போல" என்று கூறிவிட்டு வேகமாக உண்ணத் தொடங்கினாள்.

என்னால் நம்பவே முடியவில்லை. பொதுவாக எப்போதுமே எனக்கு அதிஷ்டம் துணைக்கு வருவதில்லை. இன்று இந்த அற்ப விடயத்தில் தகுந்த நேரத்துக்கு வந்து என்னைக் காப்பாற்றியது.

அவள் கொழும்புக்கு சென்றதும், இங்கே ஒருவாரமாக அவளைப்பற்றிய எண்ணங்களே என்னை ஆக்கிரமித்திருந்தன. துரதிஷ்ட வசமாக, அவள் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணம் பயணிக்க வேண்டியிருந்த பின்னைய காலங்களில் நிலைமைகள் சீராகி கொழும்பு யாழ்ப்பாணம் இடையே சிறந்த புகையிரதப்போக்குவரத்து உருவான காலப்பகுதியிலும் மிகுந்த பணச் செலவில் விமானப்பயணங்களை மேற்கொண்டாள். மிக உயர்தரமான நட்சத்திர விடுதிகளில் தங்கினாள். அந்த விடுதிகள் பட்டயக்கணக்கியலில் பட்டம் பெறாத, சவூதியில் பணி புரிந்திராத, தொழில்முறை சிங்கள ஹோட்டல் நிர்வாகி களாலும், சிங்கள சிற்றூழியர்களாலும் இயக்கப்படுபவை. அங்கு யாரும் அவளை யாழ்ப்பாணத்தாள் என்று அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் என்னோடு அரிதாக தனது தேவை நிமித்தம் தொடர்புகொள்ளும் நேரங்களில் என்னை 'பனம் கொட்டை' என்று வர்ணிக்க அவள் தயங்குவதில்லை.

அவளுக்கு நான் மிகவும் பயனுள்ள, அவளது அந்தரங்க விடயங்களை துருவித்துருவி கேட்காத, வானத்து நட்சத்திரங்களை கேட்டாலும் எல்லா அவமானங்களையும், பணக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு அவளிடம் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய, அவளுடன் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் உரையாடி பொழுது போக்கக்கூடிய, புத்திசாலியான ஒரு பனம் கொட்டை.

## 03

நான் பணியாற்றிய அந்த கொழும்பு நிறுவனத்திலிருந்து வெளியேறிய போதும்கூட ஜெயந்தி அங்கேதான் பணிபுரிந்து கொண்டிருந்தாள்.

புதிய பணிகள், புதிய நண்பர்கள், புதிய இடங்கள், என்று கடந்த எட்டு ஆண்டுகள் விரைவாக ஓடிவிட்டன. அண்மையில் ஜெயந்தி அந்த அலுவலகத்திலிருந்து வெளியேறி விட்டதாகவும் அதன் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் எனக்கு செய்தி கிடைத்தது. பத்தாயிரம் ரூபாவை சம்பளமாக பெற்றுக்கொண்டு லட்சம் ரூபாவுக்கு வேலை செய்யக்கூடிய புத்திசாலியான பனம் கொட்டைகள் நிறுவனத்தில் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த வருடங்களில் ஜெயந்தியை தொடர்பு கொள்ள நான் எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. *Facebook, Twitter* வழியாக மிக நீண்ட தேடல்களை நிகழ்த்தினேன். எதுவும் அவளைப்பற்றிய தகவல்களை தரவில்லை. பின்னர் அந்தப் பயனற்ற முயற்சிகளை கைவிட்டேன்.

தற்போது எனக்கு இறுதியாக அவள் ஆஸ்திரேலியாவில் இருப்பது மட்டுமே தெரிய வந்தது. அவளின் தாய் தகப்பனுடன் இருக்கிறாளாம். எனக்கு ஆனைக்கோட்டையில் பழைய வீட்டில் பார்த்த கிழவியின் முகம் நினைவுக்கு வந்தது. இப்போது அந்த கிழவியுடன் அந்த கருப்பு - வெள்ளை பூனை மட்டுமே உடனிருக்கும்.

## 04

கொரோனா காலத்தின் ஊரடங்கு வேளையில் எந்தவித பணிகளும் இல்லாமல் வீட்டில் முடங்கியிருந்தேன். முதல் வார ஊரடங்கின்போது

இரவு ஒரு மணியளவில் இணையத்தில் உலவிக்கொண்டிருந்தபோது எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. தற்செயலாகத்தான் ripbook.com பக்கம் போனேன். ஆனாலும் இந்த நெருக்கடி காலங்களில் நமது மனம் நம்மை அறியாமலேயே இத்தகைய தளங்களுக்குள் சென்றுவிடுகிறது.

'ஜெயந்தி சுப்ரமணியம்-வயது 50, ஆனைக் கோட்டை, சிட்னி' என்ற எழுத்துக்கள் ஓரத்தில் மின்னின. கூடவே அவளது அழகான புகைப்படம், அவளின் ரேட் மார்க் கண்ணாடி யுடன் வாய் நிறையப் புன்னகை. என்றுமே நான் அவளிடம் இந்த புன்னகையைக் கண்டதில்லை. தொடர்புகளுக்கு யாரோ ஒரு தூரத்து உறவி னரின் எண்ணைக் கொடுத்திருந்தார்கள். எனக்கு எவருடனும் கதைக்க வேண்டுமென்று தோன்றவில்லை. எவருடன் எதைக்கதைப்பது?

அன்றிரவு முழுவதும் எனக்கு தூக்கம் வரவில்லை. உண்மையில் அவளுடைய தொடர்புகளை நான் தானாக துண்டிக்கவில்லை. தேவை இல்லாமல் ஒருத்தியைப்பற்றிக் கவலைப்படுகின்றேனா என்றும் தோன்றியது. மனதின் விசித்திரங்கள் சொல்லி மாளாதவை. தனெக்கென தெளிவான பார்வையும், தனியான தெரிவுகளும் கொண்ட ஒருத்தியின் வாழ்வு இந்த திடீர் கொரோனாவால்தான் முடியவேண்டுமா? எனக்கு இரண்டு நாட்கள் வேறு வேலைகள் எதுவும் ஓடவில்லை.

போன வாரம்தான் மின்னஞ்சலில் இருக்கும் Spam மெயில்களை ஒவ்வொன்றாக பார்வையிட்டு அகற்றிக்கொண்டிருந்தேன். இதற்கெல்லாம் ஒரு அசாத்தியமான பொறுமை வேண்டும். அத்துடன் நேரமும் இருக்கவேண்டும். அவற்றில் ஒன்று எனக்கு மீண்டும் எதிர்பாராத அதிர்ச்சியை அளித்தது. கொரோனா Lock down தொடங்குவதற்கு இரண்டுநாட்களுக்கு முன்னர்தான் அது எழுதப்பட்டிருந்தது.

"என் இனிய பனம் கொட்டையே!" என்று தமிழில் தொடங்கிய அந்த மின்னஞ்சல் ஜெயந்தியிடமிருந்து வந்திருந்தது.

இந்த கடிதம் நான் எழுதும் கடைசி கடிதமாக இருக்கலாம். அத்துடன் இது நான் பள்ளி நாட்களுக்கு பிறகு எழுதும் தமிழ்க்கடிதமும் கூட. இதிலிருக்கும் பிழைகளை, குறைகளை நீ நன்கு பொறுத்துக்கொள்வாய் என்று எனக்குத்தெரியும். கடந்த ஒரு வருடங்களாக நிணநீர் முடிச்சுக்களில் வந்த புற்றுநோய் என்னை வாட்டி வருகிறது. நமது வாழ்க்கையில் எதற்கும் காரண காரியங்கள் தெரிவதில்லை. எனக்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் சிட்னியில் விற்றுவிட்டேன். முழுப்பணத்தையும் உன் பெயருக்கு எழுதி பின் தேதியிட்டு காசோலையை நமது கஸ்தூரியிடம் கொடுத்து விட்டுள்ளேன். இந்த பணம் முழுவதும் ஆனைக்கோட்டையில் இருக்கும் அந்த நலிந்த வயோதிபர் இல்லத்துக்கும், எனது பாடசாலைக்கு அருகில் உள்ள பழைய வாசகசாலைக்கும், நாம் முன்பொருமுறை அங்கே போய்ப்பார்த்த எனது அப்பமாவுக்கும் சேரவேண்டும். அது தொடர்பான ஆவணங்களையும் அனுப்பி வைத்திருக்கிறேன். ஆனைக்கோட்டைக்கும் எனக்கும் இனி இந்த ஜென்மத்தில் எந்த பந்தமும் சாத்தியமாகாது என்பதை நான் அறிவேன். இவற்றை சரியாக நிறைவேற்ற எனக்கு என் பனம் கொட்டையைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்.

My dear Sugu, பனம்கொட்டைகளில் நிறைய பழுதுபட்டவை இருக்கின்றன. ஆனால் நல்ல பனம்கொட்டைகள் மிகவும் தனித்துவமானவை. ஒரு தனித்துவமான பனம்கொட்டையாய் இருப்பதென்பது மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டது. ஏன் அது ஒரு அரசமரத்தைவிடவும் எப்போதும் தனித்துவமானதும் மேலானதும் என்பதை நீ உன் வாழ்நாள் முழுவதும் மறக்கக்கூடாது. ஆனால் பனம் கொட்டைகள் எப்போதும் அதற்குரிய மண்ணில் மட்டுமே சிறப்பாக வளர்கின்றன. நீ நிச்சயமாக உன் வாழ்நாளில் என்னை மறக்கமாட்டாய் என்று எனக்குத்தெரியும்.

துரதிஷ்டவசமாக அவள் இறந்துபோன பின்தான் இந்த கடிதம் எனக்குத் தெரிய வந்திருக்கிறது. வெகுகாலத்துக்குப்பிறகு இரவு வெகுநேரம் படுக்கையில் கண்ணீர் விட்டு அழுதேன். அத்துடன் ஒரு கேள்வி நீண்ட நேரமாக மனதைத் துளைத்துக்கொண்டிருந்தது.

"ஏன் அவள் திருமணமே செய்துகொள்ள வில்லை?"

இதற்கு இனி பதில் கிடைக்கப்போவதில்லை. இது ஒரு எளிய பனம் கொட்டையின் மிக அற்பமான ஒரு சந்தேகம்தான். பரவாயில்லை, பழுதற்ற பனம் கொட்டைகள் எப்போதும் ஆசீர்வதிக்கப்பட்டவை.

❍❍❍

# ஒட்டுநிரவல் இலக்கியம்

ஒட்டுநிரவல் (COLLAGE) கலையாக்கமும் இலக்கியப் புனைவுகளும் பரிசோதனைகளுடன் நிகழ்ந்துவந்த செயற்பாடுகளாக இருப்பினும், நவீனத்துவத்தின் வளர்ச்சியோடு அவற்றின் மேற்கிளம்பல் மேலும் சிதறல் நிலையில் பரவலடையத் தொடங்கியது.

ஒட்டு நிரவலில் வேறுவேறுபட்ட வடிவங்களையும், பொருள்களையும் ஒன்றிணைத்து ஒட்டி ஒரு புதிய வடிவை உருவாக்கும் செயல் முன்னெடுக்கப்படுகின்றது. புதியகாட்சி, புதிய அனுபவம் மாற்று அணுகுமுறை மேலெழுகின்றது.

நவீன இலக்கியவுலகில் டி. எஸ். எலியட் எழுதிய 'பாழ்நிலம்' ஒட்டுநிரவல் இலக்கிய ஆக்கத்துக்குரிய முதன்மையான எடுத்துக்காட்டாகவுள்ளது. செய்தித்துண்டங்கள், மழலையர் பாடல் அடிகள், இசைப்பாக்கள், காதில்விழுந்த செய்திகள், சமஸ்கிருத சுலோகங்கள் முதலியவற்றை ஒன்றிணைத்து ஒட்டுநிரவல் செய்து, அவர் 'பாழ்நிலம்' என்ற நெடுங்கவிதையை எழுதினார். அது 434 அடிகளைக் கொண்டது. நவீனத்துக்கு அணிசேர்த்த அந்த ஆக்கம் 1922ஆம் ஆண்டில் வெளிவந்தது.

ஒட்டுநிரவல் கலைநுட்பத்தைப் பயன்படுத்தி இசரா பவுண் எழுதிய 'திகழ் கன்ரோஸ்' என்ற நெடுங்கவிதையாக்கமும் அதே ஆண்டில் வெளிவந்தது. மனித உணர்வுகளின் வெடிப்புத் துண்டங்களும், சிதறல்களும் அந்த ஆக்கத்தின் கருப் பொருளை நிறைவித்தன. அவை நவீனத்துவத்தின் ஆக்க வெளிப்பாடுகளாகக் கிளம்பின.

ஒட்டுநிரவல் கலைநுட்பம் நவீனத்துவக் கலைஞர்களால் எடுத்தாளப் பட்டாலும், அதன் வரலாறு மிகத் தொன்மையானது. களிமண் தகடுகளிலே கழித்து வீசப்பட்ட துண்டங்களையும், மணிகளையும் விதைகளையும் ஒட்டிக் கலையுருக்களைச் செய்தல் தொல்குடியினரிடத்துக் காணப்பட்ட ஓர் அழகியற் செயற்பாடு.

மரங்களில் இருந்து பெறப்பட்ட ஒட்டுக் களியைப் பயன்படுத்திப் பலகைகளிலும் மரத்துாண்களிலும் ஒட்டுநிரவல் செய்து அழகுருவாக்குதல் பழந்தமிழகத்திலே காணப் பட்டது. மரக்கால், தலைக்கோல், பவளக்கால், முதலியவற்றை உருவாக்குவதற்கும் அந்த நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

தொன்மையான காவியங்களின் கட்டமைப்பை நுணுகி நோக்கினால், ஒட்டுநிரவல் அவற்றிலும் எடுத்தாளப்பட்டுள்ளமை வெளிப்படும். காவியங்களில், தொன்மங்கள், நாட்டார் வழக்குகள், மெய்யியற் கருத்தாடல்கள், நீதிநூல் மேற்கோள்கள், முதலியவற்றை அடியொற்றிய ஒட்டுநிரவல் நிகழ்ந்துள்ளமையைக் காணலாம்.

ஒட்டுநிரவல் செயற்பாட்டோடு ஒன்றித்துச் செல்லக்கூடிய பிறிதொரு கருத்து வடிவத்தை இருபதாம் நூற்றாண்டில் பின்நவீனத்துவ வாதிகள் முன்வைத்தனர். அவர்கள் முன்வைத்த 'நூலிய இடைத்தொடர்பு' (INTER TEXTUALITY) என்ற கருத்து வடிவம் ஒட்டுநிரவலில் இருந்து வேறுபட்டதாக இருப்பினும், இரண்டுக்குமிடையே தொடர்புகள் உள்ளன. ஒரு பனுவல் பிற பனுவலக்ளுடன் இடைத்தொடர்பு கொண்டே ஆக்கப்படுகின்றதென்றும் குறித்த ஒரு பனுவலை விளங்கிக் கொள்ள பிறபனுவல்களை நாடுதல் தேவையாக உள்ள தென்றும் உறுதிப்படுத்துதல் நூலிய இடைத் தொடர்பால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுநிரவல் நுட்பத்தை ஓவிய வெளிக்குக் கொண்டுவந்தவர்களுள் பிக்காசோவும், பராக்கும் முக்கியமானவர்கள், ஆக்கச் செயற்பாட்டின் கட்டவிழ்ப்போடு தடைகளை உடைத்து வெளிவந்த அவர்களின் கலைச் செயற்பாட்டுக்கு ஒட்டு நிரவல் கை கொடுத்தது.



பேராசிரியர்
சபா.ஜெயராசா

செய்தித்தாள் துண்டங்கள், உடைந்த இசைக் கருவிகளின் உதிரிப் பாகங்கள் புகையிலைப்

பெட்டிகள், உலோகத் துண்டுகள் வெட்டுத் துணிகள், முதலியவற்றை ஒட்டுநிரவல் ஓவிய ஆக்கத்துக்கு பிக்காசோ பயன்படுத்தினார். 1907ஆம் ஆண்டுக்கும் 1914ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தகைய செயற் பாடுகள் அவரிடத்தில் மேலெழுந்தன. 1915ஆம் ஆண்டில் அந்த முயற்சியை அவர் கைவிட்டார். சுயவெளிப்பாட்டின் செறிவு, ஓவிய மேற்பரப்புடன் கட்டுப்பட்டதன்று எனவும் அதன் ஆழங்களை நோக்கிப் புனைவை நகர்த்த வேண்டுமெனவும் துணிந்தார்.

பிக்காசோவின் ஒட்டுநிரவல் கலை முயற்சியின் முக்கியத்துவம் பராக்கின் மீதும் செல்வாக்கை ஏற்படுத்தியது.

ஓவிய விசையின் அடுத்த கட்டத்துக்கு நகர்வதற்கு இருவரும் மேற்கொண்ட ஒட்டு நிரவல் முயற்சிகள் பின்புல விசைகளாக அமைந்தன.

தமது அடுத்தகட்ட நகர்வை பிக்காசோ பின்வரும் முன்மொழிவால் வெளிப்படுத்தினார். “முகம் என்பது கண், வாய், மூக்கு, காது, நெற்றி முதலாம் பகுதிகளைக் கொண்டது. மனத்தின் ஆழ்ந்த உணர்வுகளை புலப்படுத்த எவ்வகையிலும் அந்த உறுப்புக்களைப் பரவவிடலாம் - அல்லது அசைத்துவிடலாம்”. பிக்காசோவின் ஓவியங்களை விளங்கிக் கொள்வதற்கு அவரின் மேற்கூறிய கருத்து துணை செய்யும்.

ஒட்டுநிரவல் ஓவியமரபு தொடர்ந்து வளர்ச்சி யடைந்து கொண்டிருப்பதற்கு அதன் உள்ளீடாக அமைந்த உளவியற் பலம் கைகொடுத்தது.

சிறுவருக்கான கல்வியில் ஒட்டுநிரவல் செயற்பாடு நலன்களை விளைவிப்பதாக உளவியலாளர் குறிப்பிடுகின்றனர். சிறுவரின் கைகளின் செயற்பாடுகளையும், கண்களின் செயற்பாடுகளையும் அழகியல் உணர்வுடன் ஒன்றிணைப்பதற்கு அது துணைசெய்கின்றது.

வீசியெறியப்பட்ட துண்டங்களையும், ‘பயனற்றது’ என்று தள்ளிவிடப்பட்டவற்றையும் ஒன்றிணைத்து அழகியல் வெளிக்குக் கொண்டு வருதல் சிறுவரின் படைப்பாக்கத்திறனில் புதிய வலுவேற்றத்தைக் கொடுக்க வல்லது. கழித்துவிடத்தக்க பொருள்கள் ஒதுக்கிவிடத் தக்கவை அல்லவை என்ற கருத்தோற்றத்தை நடைமுறைவாயிலாக ஒட்டுநிரவல் செயற்பாடு வழங்குகின்றது.

விதம்விதமான பொருள்களுடன் கலைப் பரிசோதனை செய்யும் ஆற்றலும் வளர்க்கப் படுகின்றது. பொருள்களை ஒழுங்கமைக்கும் கோலங்கள் அழகியல் அனுபவத்தைக் கொடுப்பதுடன் புதியவற்றை உருவாக்கு திறனுக்குரிய பயிற்சியாகவும் அமைகின்றது

அழகியல் நோக்கில் பொருள்களைத் தெரிந்தெடுக்கும் திறன், ஒழுங்குபடுத்தும் திறன், ஒட்டும் திறன், என்ற செயற்பாடுகளுக்குப் பயிற்சி கிடைக்கப் பெறுகின்றது. சிறுவர் கல்வியின் பாட ஏற்பாட்டில் ஒட்டுநிரவலுக்குச் சிறப்பிடம் வழங்கப்படுகின்றது.

‘சீர்மியம்’ என்ற மனவளம் செய்யும் செயற்பாட்டிலும் ஒட்டுநிரவல் பயன் படுத்தப்படுகின்றது. மனத்தை ஒருங்குவித்து ஒட்டுநிரவலில் ஈடுபடும்பொழுது ஒருவர் தனக்குத்தானே மனவளஞ் செய்துகொள்ளும் நிலைக்கு நகர்த்தப்படுகின்றார்.

கோலவுருவை ஆக்கும் அழகியற் செயற்பாடு, மன அழுத்தங்களில் இருந்து விடுபடச் செய்வதற்கும் துணை செய்கின்றது. எத்தகைய வண்ணங்களையும் வடிவங்களையும் ஒருவர் தெரிவு செய்கின்றார் என்பதும் எத்தகைய கோல உருவை ஏற்படுத்துகின்றார் என்பதும் மனவளம் செய்ய உதவுவதற்கு உதவும் சுட்டிகளாகும்.

அறிகை அமைப்பை நேர்நிலையில் மீள் ஒழுங்குபடுத்துதல், சிந்தனையைப் பயனுள்ள வகையில் மீள் ஒழுங்கு படுத்துதல், முதலிய வற்றுக்கும் ஒட்டுநிரவல் அனுபவம் துணை செய்ய வல்லது.

ஓவியத்தில் மட்டுமன்றி இசையிலும் ஒட்டுநிரவல் செய்யும் பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ‘இசை ஒட்டு நிரவல்’ ‘ஒலி ஒட்டுநிரவல்’ ஆகிய செயற்பாடுகள் பதினேழாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுவிட்டன.

மாதிரிகை (SAMPLING) எடுப்பு நிலையில் ஒலித்துண்டங்களும் இசைத் துண்டங்களும் தெரிவு செய்யப்பட்டு, இசை ஒட்டுநிரவல் மேற்கொள்ளப்பட்டது.

1673ஆம் ஆண்டில் பைபர் என்பவர் உருவாக்கிய ‘பட்டாலியா’ என்ற இசை வடிவத்தில் இசை ஒட்டுநிரவல் முதலிலே பயன்படுத்தப்பட்டது. இசை வல்லுனர், மொசாட் 1789ஆம் ஆண்டில் உருவாக்கிய ‘டொன் ஜியோ வன்னி’ என்ற இசையாக்கத்தில்

ஒட்டுநிரவல் நுட்பம் மேலும் செறிவுடன் பயன்படுத்தப்பட்டது.

மின்னியற் சாதனங்களின் கண்டுபிடிப்போடு இசையில் ஒட்டுநிரவல் மேலும் நுட்பமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. திரைப்பட ஆக்குனரும் ஊடகக் கலைஞருமாகிய வால்டர் ரட்மன் அந்த முயற்சியின் முன்னோடியாக அடையாளப் படுத்தப் பட்டுள்ளார். பாடல்களும் இசையும், ஒலிக்கோலங்களும் பதிவு செய்யப் பட்டு வைக்கத்தக்க தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, ஒட்டு நிரவல் செயற்பாட்டுக்குப் பெரிதும் துணை செய்தது. பதிவுகளில் இருந்து துண்டங்களைப் பொறுக்கியெடுத்து ஒட்டுநிரவல் செய்யும் முயற்சி பரவலடையத் தொடங்கியது.

தொன்மையான தமிழ்ச் சூழலில் காவியங்கள் ஒட்டுநிரவல் பண்பை வெளிப் படுத்தின. பரிசோதனை முயற்சிகள் தமிழில் பொதுவாக ஊக்குவிக்கப்படுதல் இல்லை. ஆயினும் அந்தத் தடைகளை மீறிப் பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வோரும் உளர். மேலைப்புலக் கலை அறிவுடையோர் மேலையுலகில் நிகழ்ந்த பரிசோதனைகளை விளங்கிக் கொண்டதுடன் தமிழ்ச்சூழலிலும் பரிசோதனைகளை நிகழ்த்தினர்.

மேலையுலகில் பின்நவீனத்துவத்தின் வளர்ச்சியோடு ஒட்டுநிரவல் செயற்பாடு மேலும் ஊக்கம் பெறலாயிற்று. பின் நவீனத்துவம் வலிறுத்திய பன்மைத்துவம், நூலிய இடைத்தொடர்பு, பன்மைவாசிப்பு, நூலாசிரியர் அல்லது ஆக்குனரின் மறைவு, ஓரங்கட்டப்பட்டவற்றையும், விளிம்புநிலை அலகுகளையும் முன்னிலைப்படுத்தல் முதலிய கருத்து வடிவங்கள் ஒட்டுநிரவல் செயற்பாடுகளுக்கு விசையூட்டின.

எண்ணிமத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி யோடு ஒட்டுநிரவல் செயற்பாடு மேலும் புதிய பரிமாணங்களைப் பெற்றது. பரிசோதனைகளும் ஆக்க நிலையில் மரபை மீறுதலும், புதிய வளர்ச்சிகளுக்கும், அழகியற் சுவைப்புக்கும் இட்டுச் சென்றுள்ளமையைக் காணலாம்.

ஒட்டுநிரவல் தொழிற்பாட்டை மார்க்சியம் முரண்பாடுகளின் தொகுப்பாகக் காண்கிறது. முரண்பாடுகளின் தொகுப்பான சமூகமே ஒட்டு நிரவலுக்கான பாடத்தை கற்றுக்கொடுக்கின்றது.

❍❍❍

# கண்டால் வரச்சொல்லுங்கள்

கண்களிலேநீர்
கரைந்தோடுவதை யாரறிவார்
முத்தெடுக்கும் தேசம்
முடிந்துபோனது சாபமாக
தேசம் விட்டு தேசம்
தேடி அலைந்தும்
காணாத எம் உறவை
கண்டால் வரச் சொல்லுங்கள்

சொத்திழந்து சுகமிழந்து
சொந்த நிலம் தனையிழந்து
ரத்தக் குளியலில் சித்திரம் வரைந்து
சிதைந்துபோன எம் இனத்தை
கண்டால் வரச் சொல்லுங்கள்

இரத்தத்தால் குத்துகிறோம்
அடையாளம் இல்லா எம் மார்புகளில்
அடையாளம் ஒன்றை
பதுங்குகுழிக்குள்
பல நாள் படுத்து
பட்டினியால் கதறி
காணாமல் போனோரை
கண்டால் வரச்சொல்லுங்கள்

வதைமுகாம்களில் அடைத்து
வதைக்கும் வக்கிரத்தை கண்டோம்
தீரவில்லை கோரப்பசி
தீனியாக்கப் பார்த்திருக்கிறார்கள்
திசையறியாப் பறவைகளை
கண்டால் வரச் சொல்லுங்கள்

அங்கங்களை இழந்து
சொந்தங்களை தொலைத்து
வீட்டை இழந்து
நாட்டை வெறுத்து
ஆர்ப்பரிக்கின்றோம் அகிம்சைக்காக
கண்டால் சொல்லுங்கள்
அந்த கடவுளையும் .......

**சிந்துஜா தவராசா**
**யாழ்ப்பாணம்**




# என் ஜீவப்ரியே ஷ்யாமளா

சியாமளா அம்மாளின் பாட்டைக் கேட்ட நாளில் இருந்து அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனதில் துளிர்விட்டிருந்தது. கணீரென்ற அந்தக் குரல் என்னை எங்கோ இழுத்துச் சென்றது. ஈழமண்ணில் பிறந்து, ஜேர்மனிக்குப் பெற்றோர் புலம் பெயர்ந்ததால் ஜெர்மனியில்தான் நான் வளர்ந்தேன். படிப்பிலே கவனம் செலுத்தினாலும், ஓய்வு நேரங்களில் பாட்டுக் கேட்பது, அதைப்போலப் பாடிப்பார்ப்பது, சினிமா படங்கள் பார்ப்பது என்று என் வாழ்க்கை சந்தோஷமாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

முன்புபோல் அல்லாமல், இப்போதெல்லாம் தொழில் நுட்பவளர்ச்சியால் எல்லாமே உடனுக்குடன் கிடைக்கக்கூடியதாக இருப்பது, எங்கள் தலைமுறைக்குக் கிடைத்த அதிஸ்டம் என்றுதான் சொல்லவேண்டும். வீடு தேடியே சீடி, டீவீடி என்று சொல்லப்படுகின்ற குறும்தட்டு, காண்தட்டு என்று எல்லாம் ஒழுங்காக வரும். விரும்பிய நேரம் போட்டுக் கேட்கலாம், பார்க்கலாம் என்று எத்தனையோ வசதிகள் இருந்தன. இதைவிட இதற்கென்றே சில இணையத் தளங்களும் இருந்தன.

அப்பாவிற்கு பழைய பாடல்கள் என்றால் நல்ல விருப்பம். நான் சொல்வது சிவாஜி, எம்ஜிஆர் காலத்துப்பாடல்கள் அல்ல, அதையும்விட பழையது. கிராமபோன் காலத்துப் பாடல்கள். அப்போ, அவர்களது இளமைக் காலத்தில் இப்படியான வசதிகள் எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

அப்பா தன்னை மறந்து அடிக்கடி தனக்குள் முணுமுணுக்கும் ஒரு பாடல் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதுண்டு. தெருக்கூத்தோ, அல்லது நாட்டுப் பாடலோ என்றுதான் நான் முதலில் நினைத்தேன். 'என் ஜீவப்ரியே ஷ்யாமளா' என்ற வார்த்தைகள், அது ஒரு சினிமா பாடல் என்று பின்புதான் எனக்குத் தெரிய வந்தது. அப்பா அடிக்கடி பாடியதாலோ என்னவே என்னுடைய மனசுக்குள்ளும் அந்தப் பாடல் வரிகள் சின்ன வயதிலேயே என்னையறியாமல் பதிந்து விட்டது.


அம்மாவுடைய பெயர் அது இல்லை என்று எனக்குத் தெரியும், அப்பா இந்தப் பாடலை எப்போதாவது முணுமுணுக்கும் போதெல்லாம், 'ம்.. தொடங்கி விட்டார்!' என்று அம்மா அலுத்துக் கொள்வதும் தெரியும்.

'இந்த ஷ்யாமளா யார்?' ஒருவேளை அப்பாவின் முன்னாள் காதலியாக இருந்திருப்பாளோ, அதுதான் அம்மா அசட்டை செய்கிறாளோ என்று கூட நினைத்தேன்.

அம்மாவிடம் இதைப்பற்றிக் கேட்டேன் 'அவர் ஒரு சினிமா பைத்தியம், அதுதான்' என்று அம்மா மொட்டையாகப் பதில் சொன்னாள்.

கொஞ்சம் வளர்ந்து உலகம் பிடிபடத் தொடங்கியபோது, ஒரு நாள் பொறுக்க முடியாமல் 'யாரப்பா இந்த சியாமளா' என்று அப்பாவிடமே கேட்டுவிட்டேன்.

'ஏன் இந்த சந்தேகம்?' என்பது போல அப்பா என்னைப் பார்த்தார்.



குரு அரவிந்தன்

'இல்லையப்பா இந்தப் பாட்டை அடிக்கடி பாடுறீங்களே அது தான் யார் இந்தஷியாமளா' என்றேன்.

அப்பா சிரித்துவிட்டுச் சொன்னார், 'இதுவா இது அந்தக் காலத்து பழைய சினிமாப் பாட்டு. என்னுடைய

அப்பா நல்லகுரலில் பாடுவார், அதைப்பற்றிக் கதை கதையாச் சொல்லுவார். அந்தக் காலத்து இளைஞர்களைக் கவர்ந்த பாட்டாம். அந்தக் காலத்தில் நடிகர்களே பாடியும் நடிக்க வேண்டு மாம். உன்னோட தாத்தா இந்தப்பாட்டை தோட்டத்தில தண்ணீர் இறைக்கும் போது, துலா மிதிக்கும் போது எல்லாம் உரக்கப் படிப்பார். நான் தண்ணீர் கட்டிக் கொண்டிருப்பேன், காற்றிலே மிதந்து வந்து செவிக்குள் புகுந்து கொள்ளும், அதனால் களைப்பே தெரியாது, அதனால்தான் என்னுடைய மனசிலும் இந்தப் பாட்டுப் பதிந்து விட்டது' என்றார்.

மூன்று தலை முறையாக அந்தப் பாடல் எங்கள் குடும்பத்தில் தங்கியிருந்திருக்கிறது என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அது மட்டுமல்லல பழைய பாடல்களில், அந்த இசையில் எங்களுக்குப் பரம் பரைத் தொடர்போல, ஆர்வமும் இருந்தி ருக்கிறது என்பதும் எனக்குப் புரிந்தது.

அதனால்தான் 'ஞானப்பழத்தை பிழிந்து' என்ற அந்தப் பாடலைக் கேட்டதில் இருந்து, அந்தக் கணீரென்ற குரலுக்கு உரியவரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, குறும் தட்டு விற்பனை நிலையத்தில் சென்று விசாரித்தேன். அவர் என்னை மேலும் கீழும் பார்த்தார்.

'படத்தில் தான் பார்க்கலாம்!' என்று சொல்லிவிட்டு, எங்கேயோ தேடி ஒரு பழைய குறும் தட்டைக் கொண்டுவந்து காட்டினார்.

'ஒருத்தரும் இப்ப வாங்கிறதில்லை. உங்களுடைய அதிஸ்டம் ஒன்று கிடைச்சுது' என்றார்.

அவர் தந்த குறுந்தட்டை வாங்கிப் பார்த்தேன். கவரிலே கே.பி. சுந்தராம்பாள் ஔவையாராக சிரித்துக் கொண்டு, குளோசப்பில் நின்றார். நான் தடுமாறிப் போனேன். இது அப்பா காலத்துப் பாட்டல்லவா?

'இல்லை.. வந்து.. நான் கேட்டது இதில்லை. கொஞ்ச நாளைக்குமுன் கனடாவில் ஒரு மேடை நிகழ்ச்சியில் 'ஞானப்பழத்தை பிளிந்து' என்ற பாட்டைப் பாடின சியாமளாவம்மாவின்ர பாட்டைத்தான்..!'

'இப்ப இப்படி எத்தனைபேர் பாடுகினம்' என்று முணுமுணுத்தவர், அவர் அதைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று கைவிரித்து விட்டார்.

ஏமாற்றத்தோடு வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.

ஒவ்வெரு முறையும் இப்படி யாராவது கைவிரிக்கும்போது அந்தக் குரலுக்குரிய அம்மாவைப் பார்க்கவேண்டும், இரண்டு வரி என்றாலும் பாடிக் காட்டச் சொல்லிக் கேட்க வேண்டும் என்ற ஆவலும் எனக்குள் கூடிக் கொண்ட சென்றது.

யாரைப்போல அந்த அம்மா இருப்பாள், சுசீலா மாதிரியா, ஜானகி மாதிரியா, அல்லது எல். ஆர் ஈஸ்வரி மாதிரியா என்றெல்லாம் கற்பனை பண்ணிப்பார்த்தேன். ஏன் முனியம்மா மாதிரிக்கூட இருக்கலாம்.! குரலுக்கும் ஆளுக்கும் தொடர்பே இல்லை என்பதை பலரைப் பார்த்த பிறகுதானே நானும் புரிந்து கொண்டேன்.

எப்படியோ அதைப் பாடியவரின் வாட்ஸ்அப் இலக்கம் கிடைத்ததால் வாட்ஸப்பில் அந்த அம்மாளுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. நான் ஒரு ரசிகன் என்று என்னைப்பற்றி அறிமுகம் செய்து கொண்டேன். கனடா வந்தால் சந்திக்கலாமா என்ற கேட்டபோது சம்மதம் தெரிவித்து முகவரியும் தந்திருந்தார்.



கனடா சென்ற போது, குறிப்பிட்ட தினத்திலன்று அவரது வீடு தேடிச் சென்று அழைப்பு மணியை அடித்துவிட்டு நின்றேன். வாசல் கதவு திறந்தது, எதிரே ஞானப்பழத்தோட மகளாகவோ அல்லது பேர்த்தியாகவோ இருக்கலாம் என்று மனசு கணக்குப் போட்டது, சின்ன வயசுதானிருக்கும், சிரித்த முகம், கொள்ளை அழகு!

'நீங்க ..?' என்றாள் அவள்.

நான் வந்த விடயத்தை மறந்து ஒரு கணம் தடுமாறிப் போனேன்.

'வந்து.. சியாமளாம்மா இருக்கிறாங்களா?' என்று இழுத்தேன்.

'இருக்கிறாங்க, உட்காருங்க வரச் சொல்றேன்' என்று சொல்லி, ஹாலில் இருந்த இருக்கையைக் காட்டினாள்.

சியாமளாம்மா எப்படி இருப்பாங்க என்ற பரபரப்போடு உட்கார்ந்திருந்தேன்.

'அம்மா..!' என்று குரல் கொடுத்தபடி அவள் உள்ளே சென்றாள்.

சற்று நேரத்தால் ஒரு அம்மாள் சேலைத் தலைப்பில் கையைத் துடைத்தபடி உள்ளே வந்தாள். நெஞ்சு படபடத்தது.

'வணக்கம் அம்மா' என்று கையிலே கொண்டு வந்த மலர்க்கொத்தைக் கொடுத்து வணங்கினேன்.

'வணக்கம். நீங்க..?'

'நான் ப்ரகாஷ்..! ஞாபகம் இருக்கா? என்றேன்.

'பிரகாஷ்..? தெரியலையே..! என்றாள் தயக்கத்தோடு.

'ஜெர்மனியில் இருந்து வந்திருக்கேன்' என்றேன்.

அவரோ குழப்பத்தில் ஆழ்ந்தவர் போலக் காணப்பட்டார்.

'சியாமளா..?'

'ஓ மகளிட்ட வந்தீங்களா? சியாமளா உனக்குத்தான் விசிட்டர்' என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள் அந்த அம்மாள்.

இப்போ, நான் முதல் சந்தித்த அதே பெண் மீண்டும் வந்தாள்.

'சியாமு.. உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாங்க.'என்று சொன்னபடி அந்த அம்மாள் உள்ளே சென்றாள்.

'என்னையா?'

'ஆமா..!'

'சியாமளா அம்மா என்று கேட்டீங்களே?'

நான் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தயங்கினேன்.

'நான் பிரகாஷ், ஞாபகம் இருக்கா? ஜெர்மனியில் இருந்து வந்திருக்கிறேன்.'

'ஓ.. நல்லாய் ஞாபகம் இருக்கே எப்படி இருக்கீங்க?'

'நல்லாயிருக்கேன், தப்பு என்னோடதுதான். உங்க பாட்டைக் கேட்டதாலே உங்களுக்கு நல்ல வயசாயிருக்குமோ என்று நினைச்சிட்டேன்.' என்றேன்.

சியாமளா ஒரு கணம் தலை குனிந்து அடக்க முடியாமல் சிரித்தாள்.

'மன்னிக்கணும், நானும் அப்படித்தான் நினைச்சிட்டேன். ஞானப்பழம், ஜீவப்பிரியே பாடல் ரசிகர் என்ற படியால் வயசானவர் என்று நினைச்சிட்டேன்.'

இரண்டு பேருக்கும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அவள் பகாவதரையும், நான் கே. பி. சுந்தராம்பாளையும் நினைத்துக் கொண்டிருந்ததில் எல்லாமே குழம்பிப் போச்சு!

'ஜீவப்பிரியே பாட்டு ஏன் உங்களுக்குப் பிடிச்சுது?' அவளே சரளமாகக் கதைக்கத் தொடங்கினாள்.

'அதுவா, எங்க தாத்தா தியாகராஜா பாகவதர் ரசிகராம், அதனாலே ஜீவப்பிரியே பாட்டை தாத்தா அடிக்கடி படிப்பாராம், அதனாலே அப்பா அந்தப் பாட்டை அவ்வப்போது படிக்க, நானும் அதைப் பாடமாக்கிக் கொண்டேன்'

'அப்போ உங்க அப்பா ஞானப்பழம் ரசிகரா?'

'ஆமா, அப்பா மட்டுமல்ல நானும்தான்' என்றேன்.

'நீங்களுமா, உங்களுக்கு அந்தப் பாட்டு பிடிக்குமா? அப்படின்னா, தாத்தாவோட ஜீன் உங்ககிட்ட இருக்கணுமே?'

'அவ்வளவுக்கு இல்லை, ஆனால் சுமாரா படிப்பேன்'

'அப்போ எனக்கு ஒருக்கா பாடிக் காண்பீங்களேன்' என்றாள்.

எனது தயக்கம் அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

'பயப்படாதீங்க, நான் மட்டும் தான் இங்கே இருக்கேன், ப்ளீஸ்.. இரண்டுவரியாவது..'

தொண்டையைச் சரிசெய்து கொண்டு பாடத் தொடங்கினேன், அவள் ரசித்துக் கொண்டிருந்தாள், என்னையா பாடலையா தெரியலை, அதுவே எனக்கு ஒருவித உட்சாகமூட்டியதால், நான் கண்களை மூடிக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டுப் பாடினேன்.

'என் ஜீவப்பிரியே ஷ்யாமளா, என் ஜீவப்பிரியே ஷ்யாமளா

என் ஜீவப்பிரியே சியாமளா.. சியாமளா தேவி!

பாதைமேல் விழியாப் பார்த்தே நொந்தேன்

பாங்குடன் தேன் மொழிபேசிட வாறாயோ சியாமளா..

என்றுனைக் காண்பேன் இன்பம் பெறுவேன்

ஏக்கமேதீர இரங்கிடுவாயே நீயே சியாமளா

ஆசை முகம் காட்டியே என் அல்லலைத் தவிராயோ

ஆடிவந்து எந்தன் அன்பினை மேவி ஆனந்தம் தாராயோ

என் ஜீவப்பிரியே ஷ்யாமளா, என் ஜீவப்பிரியே ஷ்யாமளா..!'

மிக அருகே கரவோசை கேட்டு கண்திறந்து பார்த்தேன். சியாமளாதான், 'ரொம்ப நல்லாப் பாடுறீங்க, அப்படியே பாகவதர் குரல் போலவே இருக்கு, நான் என்னை மறந்து சிலிர்த்துப் போயிட்டேன்' என்றவள், அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக் குனிந்து என் நெற்றியில் சட்டென்று ஒரு முத்தம் பதித்தவள், ஒன்றுமே நடக்காதது போலத் திரும்பிச் சென்று தன் ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

நான் ஒரு கணம் உறைந்து போயிட்டேன். எல்லாமே எதிர்பாராமல் இன்ப அதிர்ச்சி தருவதாக இருந்தது. அவளுடன் ஏதாவது கதைக்க வேண்டும்போல இருந்தது.

'நீங்க எப்படி பழைய பாடல்களைத் தெரிந்தெடுத்தீங்க?' என்று கேட்டேன்.

'ஒரு நாள் அந்தப் பாடலை, அதுதான் ஞானப்பழத்தைப் பாடிப் பார்த்தேன், எங்கம்மா அப்படியே கே.பி. சுந்தராம்பாள் மாதிரி இருக் கென்று சொன்னாங்க, அப்புறம் இரண்டு மூணு தடவை பயிற்சி எடுத்து மேடையிலே பாடினேன், அமோக வரவேற்புக் கிடைச்சுது' என்றாள்.

'ஆமா, அந்தக் குரல் பிரபலமாக வந்ததற்கு காரணம் என்னவென்று யோசிச்சுப் பார்த்தேன். ஒரு உண்மை புலனாயிற்று' என்று நிறுத்தினேன்.

'என்ன காரணம் சொல்லுங்களேன்' என்றாள் அவசரமாக.

'அதுவா, இப்போ பொறுமையாக இருந்து அதிகமாகத் தமிழ் பாட்டைக் கேட்பவங்க எல்லாம் 40 வயசைக் கடந்தவங்க, அதனாலே தான் அவங்களுக்கு உங்க பாட்டு பிடிச்சிருக்கு'

தாயார் அங்கேயே வைத்துவிட்டுச் சென்ற மலர்ச் செண்டை எடுத்து அவளிடம் நீட்டினேன். என்னைவிட வயதிலே குறைந்தவள் என்பதால் பாதத்தைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வந்த தெல்லாம் தடைப்பட்டுப் போச்சு!

செண்டை வாங்கி ஆசையாய் அரவனைத்துக் கொண்டு நன்றி சொன்னாள். அப்புறம் என்னுடைய செல்போனை வாங்கித் தனது தொடர்பு இலக் கத்தைப் பதிவு செய்தாள்.

'அடிக்கடி உங்களைச் சந்திக்கணும்போல இருக்கு, நேரமிருந்தால் வாங்களேன்' என்றாள். குரலுக்கும் உருவத்திற்கும் தொடர்பில்லை என்பதை மீண்டும் உறுதி செய்து கொண்டேன்.

கலையின் பெயரால், திரும்பி வரும்போது ஆசீர்வாதம் வாங்கும் சாக்கில் குனிந்து அவளது மிருதுவான பாதத்தைத் தொட்டிருக்கலாமோ என்று இந்தப் பொல்லாத மனசை ஏங்கவைத்து விட்டாள் என் ஜீவப்ரியை ச்யாமளா!

(முடிந்தால் "ஜீவப்பிரியை" பாடலை நீங்களும் ஒருமுறையாவது கேட்டுப் பாருங்கள்.)

❍❍❍

## ஹைக்கூ சில...

*இரவில் கடும் காவல்தாண்டி*
*என் காதுகளுக்குள் குசுகுசுப்பது*
*நுளம்பார்.*

*ஞானத்தின் இனச்சாரலினால் இன்று*
*நாடே நான்காகி நாறுகிறது*
*அடிப்படைவாதம்.*

*வரவு புத்தகத்தில் அன்று*
*வரவின்மை காணப்படவில்லை*
*சம்பளநாள்.*

*அந்தி வானில் தீக்குளிப்பு*
*மக்கள் மஞ்சள் காமாலையில்*
*சூரிய அத்தமனம்.*

**– மகாலிங்கம் மொழிவரதன்**

# மட்டக்களப்பு மாநில மண்வாசனைச் சொல் "கா"

*இலங்கைத் தமிழர்களின் மரபுவழித் தாயகமாகக் கருதப்படும் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல வழிகளிலும் தனித்து வமான சமூக-பொருளாதார-கலை-இலக்கிய-சமய-பண்பாட்டுக் கூறுகளை 'மட்டக்களப்பு மாநிலம்' கொண்டிருக்கிறது.

*அந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏனைய பிரதேசங்களை விட மட்டக்களப்பு மாநிலத்தில் மட்டுமே வழங்கு கின்ற மட்டக்களப்புப் பிரதேச வழக்காற்றுச் சொற்கள் பலவுள்ளன. அச் சொற்களையே மண்வாசனைச் சொற்கள் என அழைக்கின்றோம்.

*இங்கே மட்டக்களப்பு மாநிலம் என அழைக்கப் படுவது கிழக்கு மாகாணத்தில் வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும் மேற்கே ஊவாமலைக் குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும்.

* மட்டக்களப்பு மண் வாசனைச் சொற்கள் எனும்போது முதலில் வருவது மட்டக்களப்பு மாநிலத்துக்கு மட்டுமே உரித்தான **"கா"** எனும் அசைச்சொல்லாகும். இந்தக் 'கா' எனும் அசைச்சொல் தமிழுலகில் வழக்கொழிந்து போனதும் தொல்காப்பியர் காலத்துமான அசைநிலை இடைச் சொற் பிரயோகம் என்று அமர பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் தான் எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' (1964) எனும் நூலில் பெருமையோடு பதிவு செய்கிறார்.

**"யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வருஉம் ஆயேழ் சொல்லும் அசை நிலைக்கிளவி"**

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தினால் சுட்டப்படும் ஏழு அசைச் சொற்களில் 'கா'வும் ஒன்று மட்டுமல்லாமல், நன்னூ லாசிரியர் காலத்தில் 'கா' என்பது உயர்ந்தோர் வழக்காக அழைக்கப்பட்டதை நன்னூலில் காணலாமென்கிறார். இவ்வழக்கு பின்பு காலவோட்டத்தில் அருகி மறைந்து போயிற்று எனலாம்.

தற்காலத்தில் நெருக்கமான உரித்துக் காரரைப் பெரும்பாலும் பெண்கள் பெண்களை விளிக்கும் போது இந்தக் "கா" போட்டு அழைப் பார்கள். வாகா, போகா, இரிகா, சாப்பிடுகா என்று அன்போடும்- உரித்தோடும் கூறுவர். ஆனால் ஆண்பெண் பால் வேறுபாடுகளின்றியும் இக் "கா' பாவனையிலுண்டு. கணவன் மனைவியரும் தங்களுக்குள்ளே இக் "கா" போட்டும் விளிப்பர். "கா" என்ற இவ்அசைச்சொல் பேச்சு வழக்கில் மட்டுமல்ல கவிஞர்களின் எழுத்திலும் ஏறி இலக்கிய அந்தஸ்தையும் பெற்றதொன்றாகும். உதாரணத்திற்கு, அமரர் கவிஞர் நீலாவணனின் "வேளாண்மை" க் காவியத்தின் தொடக்கத்தில், வயலுக்குப் போக வெளிக்கிட்ட கந்தப்போடிக்கு மனைவி பொன்னம்மா உணவு பரிமாறிக் கொண்டிருக்கையில் கந்தப்போடி தனது மனைவியை விளித்து

***"சோக்கான கறிகா! தோலிச்***
***சுண்டலில்லை; முன்னால் நான்***
***கேட்காமல் அள்ளி வைப்பாய்***
***கிழவனாய்ப் போனேன் பாரு!...."***

இங்கே கணவன்-மனைவி அன்னியோன் னியத்திற்குக் "கா"அசைந்து கொடுக்கிறது.

அதே காவியத்தில், தன் வீட்டிற்கு வந்த தன் மச்சாள் கனகம்மாவை (கந்தப்போடியின் தங்கை)

***"வா மச்சாள் வாகா! உள்ளே"*** என வரவேற்கிறாள் பொன்னம்மா.

அதேபோல் நீலாவணனின் "வேளாண்மை"க் காவியத்தின் தொடர்ச்சியாகச் செங்கதிரோன் எழுதிய "விளைச்சல்" என்னும் குறுங் காவியத்தில் மட்டக்களப்பு மாநிலக் கிராம



***செங்கதிரோன்***

மொன்றில் கல்யாணம் கேட்டுப்போகும் காட்சி வருகிறது. பெண் வீட்டார் சீர்வரிசைப் பொருட் களுடன் மாப்பிள்ளை வீட்டை அடைகின்றனர். அங்கே,

***"வட்டாவைக் கனகம் நீட்ட***
***வாகா! வா மச்சாள் என்று***
***தட்டோடு பொன்னுவாங்க***
***தயாராகி நின்ற மற்றக்***
***கிட்டடிச் சொந்தக்காரர்***
***கிரமமாய் முன்னே வந்து***
***பெட்டிகள் பெற்றுப் போனார்...."***

என்று வருகிறது. இங்கே பொன்னு எனும் பொன்னம்மா தனது மச்சாள் கனகம் எனும் கனகம்மாவை **"வாகா! வா!"** என்று வாஞ்சையோடு வரவேற்கிறாள்.

மேலும், அமரர் பண்டிதர் வி.சீ. கந்தையா தனது மேற்படி நூலில் எலுவன், எல்லா, ஏலா என்ற பண்டைய விளிப்புப் பெயர்களின் திரிபான "இல" என்பதுடன் "கா" என்ற அசை சேர்ந்து "இலக்கா" எனும் விளிப்புப் பெயராகியும் மட்டக் களப்பு மாநிலக் கிராமங்களிடையே வழங்கி வருவதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாநிலக் கிராமங்களிலே பெண்கள் ஒருவரையொருவர் விளிக்கும்போது "இலக்கா"- "இலக்கோ" - "லக்கா" - "லக்கோ என அழைப்பதைக் காது குளிரக் கேட்கலாம்.

பெண்கள் பெண்களை விளிக்கும்போது மட்டுமல்ல ஆண்களை விளிக்கும்போது கூட இந்த "கா" அசைச்சொல் வருவதுண்டு. அதுபோல் ஆண்கள் பெண்களை விளிக்கும் போதும் இக் "கா" வருவதுண்டு. ஆண்கள் ஆண்களை விளிக்கும்போது பெரும்பாலும் வயதானவர்கள் நாவிலும் இக் "கா" வரும் வழக்குண்டு. மட்டக்களப்பு மாநில நாட்டுப் பாடல்களிலே இக் "கா" நர்த்தனமிடுவதைப் பார்க்கலாம்.

காதலி தன் காதலனைச் - மச்சானை- சந்திக்க வருமாறு இப்படி அழைக்கிறாள்.

***"சந்தன மரத்த மச்சான் சந்திக்க வேணுமெண்டா***
***பூவலடிக்கு மச்சான் பொழுது பட வந்துடுகா".***

(பூவல்=கிணறு)

தனது காதலனின்-மச்சானின் அழகில் மயங்கிய காதலி மச்சானைப் பார்த்து,

***"வட்ட முகமும் உண்ட வடிவிலுயர் மூக்கழகும்***
***கட்டு உடலும் மச்சான் என் கருத்தழியச் செய்யுதுகா."***

என்கிறாள்.

அதேபோல் காதலன் தன் காதலியிடம்,

***"குஞ்சு முகமும் உண்ட கூர் விழுந்த மூக்கழகும்***
***நெற்றி இளம்பிறையும் கண்ணே நித்திரையில்***
***தோணுதுகா."*** என்கிறான்.

களவொழுக்கச் சம்பவமொன்று இங்கே ஒருவரால் இன்னொருவருக்குச் சங்கேத மொழி யில் அல்லது குறியீட்டுப் பாணியில் செய்தி யாகச் சொல்லப்படுகிறது.

***"வில்லுக்கு வந்து கொம்பன் விடியளவும் புல்லருந்திக்***
***கல்லில் முதுகுரஞ்சிக் கொம்பன் காடேறிப் போகுதுகா."***

வயற்காட்டில் தங்கியிருக்கும் தன் கணவனுக்கு இங்கே ஊரில் - வீட்டில்- தன் மகள் சமைந்த செய்தியை ஆதம் காக்கா மூலம் (முஸ்லீம்கள் தமையனைக் "காக்கா" வென்று அழைப்பார்கள்) சொல்லியனுப்புகிறாள் ஒரு பெண்.

***"ஆதங்காக்கா! ஆதங்காக்கா!***
***அவரைக் கண்டாச் சொல்லிடுகா***
***பூவரசம் கன்னியொண்டு பூ மலர்ந்து போச்சிதெண்டு"***

குமரிப் பெண்ணொருத்தி குடத்தில் தண்ணீர் மொள்ளுவதைக் கண்ட ஒருவர் இன்னொரு வருக்கு அதை எடுத்துச் சொல்வதை

***"பூவலைக் கிண்டி புதுக்குடத்தக் கிட்ட வச்சு***
***ஆரம் விழுந்த கிளி அள்ளுதுகா நல்லதண்ணி"***

எனும் நாட்டுப்பாடல் நவில்கிறது.

முறை மச்சாளை விளித்து மச்சான் கூறும் கூற்று இது.

***"தாலிக்கொடியே!— எண்ட***
***தாய்மாமனீண்ட கண்டே***
***மாமிக்கொரு மகளே — மச்சி***
***மறுகுதல பண்ணாதகா"***

இங்கேயும் "கா" களிநடனம் புரிகிறது.

மட்டக்களப்பு மாநிலக் கிராமங்களில்,

"நெல்லுருக்குதாகா"..... என்று நெல்லு வாங்கும் பெண்கள் கூவிக் கேட்க, "இருக்குது வாகா......" என்று கொடுப்பார் கூவி அழைப்பர். நெல் இல்லையென்றால் "இல்ல கா...." என்று பதில் கொடுப்பர்.

***"புள்ளலெக்கா புள்ளலெக்கா —உன்ர***
***புருசனெங்க போனதுகா***
***கல்லூட்டுத் திண்ணையில***
***கதபழுகப் போனதுகா"***

என்று நாட்டுக் கவி வழக்கில் "கா" முன்னிலைக்கேற்ற அசையாகி இரு பெண்களின் கேள்வியும் பதிலுமாக அமைந்திருக்கும்.

இவ்வாறு பேச்சு வழக்கிலும் - ஏடறியா வாய்மொழி இலக்கியமான நாட்டுப் பாடல் களிலும் - எழுத்திலக்கியங்களிலும் "கா"

மட்டக்களப்பு மாநிலத்திலே மவுசுடன் விளங்குகிறது.

இங்கெல்லாம் அதாவது இதுவரை கூறப்பட்ட உதாரணங்களிலெல்லாம் அசைச் சொல்லாக அணி சேர்க்கும் "கா" இன்னொரு சந்தர்ப்பத்தில் பெயர்ச் சொல்லாகவும் வரும். அது என்னவென்று பார்ப்போம்.

"கா" பெயர்ச் சொல்லாக வரும் சந்தர்ப்பம் என்னவெனில்,

பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோ ரிடத்திற்குச் சுமந்து செல்வதற்கு, முறியாமல் நன்கு வளையக்கூடிய மரக்கம்பு ஒன்றைத் தோளின் குறுக்காக வைத்து அந்தக் கம்பின் இரு அந்தங்கங்களிலும் பொருட்களைக் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். பெரும்பாலும் ஆண்களே தமது தோளில் காவிச் செல்லும் இப் பொறியைக் "கா" என அழைப்பர். "கா" என்பது இப் பொறியோடு சேர்த்துக் கொண்டு செல்லப்படும் பொருட்களையும் உள்ளடக்கியதாயிற்று. கல்யாணம் கேட்டுப் போகும் போதும் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு இக் "கா" கொண்டு செல்வர். இக்காவில் தயிர், வாழைக்குலை போன்ற பொருட்களெல்லாம் உள்ளடங்கும்.

முன்பு கூறப்பெற்ற "விளைச்சல்" என்னும் குறுங்காவியத்திலே பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குக் "கா" கொண்டு செல்லும் காட்சி இவ்வாறு பதிவாகியிருக்கிறது.

***"கொழுக்கட்டைப் பெட்டி பின்னால்***
***குலையுடன் கோழிச்சூடன்***
***முழுக்கட்டை போல வெள்ளை***
***மொந்தனும் தயிரும் <u>கா</u>வில்***
***......................"***

இங்கே கோழிச்சூடன் என்பது பறங்கி வாழைப்பழமாகும். வெள்ளை மொந்தன் என்பது கறி வாழைக்காயின் இன்னொருவகை. அத்துடன் தயிரும் காவில் கொண்டு செல்லப்படுகின்றன.

இதைத்தான் மட்டக்களப்பு மாநிலத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில்,

***"ஆடவர் தோளிலும் <u>கா</u>***
***அரிவையர் நாவிலும் <u>கா</u>"***

என்று கூறுவர். ஆடவர் தோளிலே "கா" பெயர்ச் சொல்லாகவும் அரிவையர் நாவிலே "கா" அசைச் சொல்லாகவும் கம்பீரமாக வீற்றிருக்கிறது.

தோளிலே காவிச் செல்வதால்தான் "காவடி" எனப் பெயர் வந்தது எனக் கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டு முள்ளார். கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தைச் சேர்ந்தவரென்பதால் "கா" அவரைக் கவர்ந்திருக்கிறது. "கா" வை அருகிவிடாமல் அடுத்த சந்ததிக்கும் காவிச்செல்வோமாக.

❍❍❍

**மகளிர்தினக் கவிதை**

# முள்

உனது
நிர்வாணத் தோற்றங்களைப் புரிந்து கொள்ள
நீண்ட காலம் செல்லவில்லை

சிலுவை தாங்கிய இரும்புச் சங்கிலியை
கழுத்தில் இறுகக்கட்டி
அசிற்றில் குழைத்த பொட்டை
நெற்றியில் வைத்து
முட்களைக் கூந்தலில் சூடி
திருமணச்சிறையுள் அடைத்துவிட்டாய்.

வாசனை மலர்களைத் தூவி
உனக்காகக் காத்திருந்த இரவுகளில்
கண்ணீர்க் கற்களை வீசி
கற்பனைக் கூட்டைக் கலைத்தாய்


பூமித்தாய் மடியின் சுகம்தேடி
அயர்ந்து தூங்கும் வேளை
உணர்வுகள் மரணித்த பிணமாக
எனை எண்ணினாய்

போத்தல்களை விழுங்கிய பூரிப்பால்
என்மீது ஆடிய வெறி ஆட்டங்கள்

நீ மட்டும் சுகம் காண
நான் சுமை தாங்க
இனியும் முடியாது.

**தம்பிலுவில் "ஜெகா"**

## கௌரவ இலக்கிய கலாநிதி தகைசார் பேராசிரியர் சி. தில்லைநாதன்



இன, மத பேதங்களுக்கு அப்பால் மானுடத்தையும் சமூக நலனையும் நேசிக்கும் மாண்புறு பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் ஆற்றிய தேசியப் பணிகளுக்காகவும் கல்விப் பணிகளுக்காகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 08-02-2020 அன்று தனது பதினான்காவது பட்டமளிப்பு விழாவில் அவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

பேராசிரியர் தில்லைநாதன் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவர். இலங்கை அரசினால் கலாகீர்த்தி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இலங்கை பல்கலைக்கழக உறுப்பினராகவும், தலைவராகவும் தமிழ்க் கலைச் சொற்களுக்கான உச்சக்குழு உறுப்பினராகவும் தேசியக் கல்வி நிறுவக ஆட்சிச்சபை உறுப்பினராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இலங்கை பத்திரிகைச்சபையின் உறுப்பினராகவும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு உறுப்பினராகவும் பல்துறை சார்ந்து பணியாற்றியவர்.

கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் பெற்ற பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.

# புத்தகக் கடை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

பனை மரத்துக்கு நிகரானவை
எங்கள் புத்தகக் கடைகள்.
சில வேளைகளில்
அவை
பனை மரத்தைவிடவும் மேலானவை
மட்டுமன்றி,
தேசியங்களைச் சமரசம் செய்வதில்
வலிமையானவையும்,
அவற்றை உயரத் தொங்கவிடுவதில்
உயரமானவையுங்கூட...

தமிழ்த் தேசிய நாளிதழ் கட்டுகளின்மேல்,
சிங்கக் கொடிகளைக் குவித்து
விறுவிறு என்று விற்பதில்
தாராள மனமுள்ளவை.

“சுதந்திரத்தைப் புறக்கணிப்போம்”
என்ற கொட்டை எழுத்துப் பத்திரிகையோடு,
நீட்டும் கைகளுக்கு
சுதந்திரக் கொடியையும்
சேர்த்து வழங்கி
இரு தேசியத்துக்கும்
திருமணம் முடித்து அழகு பார்ப்பதில்
அலாதித் திருப்தி கொள்பவை.

வடிகட்டாமலே வழங்கும்
வல்லமை இருப்பதால்
விண்ணாதி விண்ணரான
புத்தகக் கடைகளுக்குப்
பன்னாடை இல்லாதிருப்பது
ஒன்றும் குறையல்ல.
பெரும் நிறைவே!
பொங்கல் பட்டங்களையும்
வெசாக் கூடுகளையும்
கொழுவி விட்டு,
சிவனையும் புத்தரையும்
கோத்துவிடுவதில்,
புத்தகக் கடைகள் போதிமரங்கள்.
பிரிய பிதாவே!
நாடு முழுவதையும்
புத்தகக்கடை ஆக்குவோனுக்கு,
நாட்டை விற்கச் சித்தமாயிருக்கிறேன்.

இந்தச் சிறு தீவு
புத்தகக் கடைகளின் தீவாக மலரட்டும்!
மலர்ந்தால்...
இரு தேசியங்களுக்குள்ளே
என்னதான் பிரச்சினை!
இரண்டுமே முத்தமிட்டுக்கொண்டிருக்கும்.

புத்தகக் கடை ஜனநாயக
சோசலிசக் குடியரசு மீது
அமர காவியம் பாடும்
காலம் ஒன்றிற்காகக் காத்திருக்கிறேன்.
எப்போதெனில்,
புத்தகக் கடைகளில் சாம்பார் விற்கும்போது!

— செல்லத்துரை சுதர்சன்



# வெறும் வெளி

அன்புவும் தமிழும் பெரிதான அன்யோன்யமான நண்பர்கள் என்று சொல்கின்ற அளவிற்கு இல்லை. ஆனாலும் சாதாரணமாக பேசிக்கொள்கிற பழக்கமானது நாளடைவில் அவர்கள் இருவரையும் ஒருங்கிணைந்தவர்கள் ஆக்கியிருந்தது. இருவரும் இளைஞர்கள், வேறு வேறு தனியார் கம்பனிகளில் வேலை பார்த்து கொண்டிருந்தார்கள்.


இருவருக்கும் வாழ்வைச் சுவைத்து வாழ வேண்டும் என்பதிலே நிறையவே ஆசை. அதற்குண்டான வழி பற்றி அவர்கள் பேசிக்கொள்வார்கள். இந்த உரையாடலில் ஆசையின் அசலான முகத்தை ஒருவர் மற்றவரைப் பார்த்து விளங்கிக் கொள்வார்கள்.

அன்புவிற்கு குதிரை றேஸ் கிளப்புக்கு சென்று அந்தச் சூது ஆடுகிற பழக்கம் இருந்தது. அந்தச் சூதாட்டத்திலே தினம் தனக்கு வருகிற தோல்வியை போகவிட்டுவிட்டு அடுத்தநாள் ஜெயிக்கும் ஆனந்தத்தோடு திரும்பவும் அந்த இடத்திற்கு போகின்றவன்தான் அவன்.

தமிழ் என்பவனைப்பற்றி சொல்லப்போனால் இந்த விதமான எந்த தீயபழக்கமும் அவனிடம் கிடையாது. இப்படியான அன்புவினது பழக்க வழக்கத்திற்கு தமிழ் சொல்லப்போனால் நேர் எதிர்மறையானவன். நேர் எதிர்த் துருவம் போன்றவன். ஒரு நாள் தமிழ் அன்புவிடம் பேசும் போது ‘‘இந்த முட்டாள் தனத்தை ஏன் நீர் திரும்பச் திரும்பச் செய்கிறீர்’’ என்று கேட்டான். அன்பு அவன் சொன்னதுக்கு சிரித்தான். பிறகு சொன்னான் ‘‘பணத்தின் மேலுள்ள ஆசையில் நான் என் மனத்தை வெகு தூரத்துக்கு அலையவிடுவதில்லை. பணம் என் மனத்தின் மேல் அதிகாரம் செய்வதையும் நான் விரும்புவதில்லை. இந்த விதத்தில் என் ஆசைகளை ஓடுகின்ற ரேஸ் குதிரைகளின் மேலே சுமத்தி விடுகின்றேன். நான் அமைதியாக இருக்க குதிரைகள்தான் என் ஆசைகளை சுமந்துக் கொண்டு ஓடும். அந்த குதிரையின் வெற்றி தோல்வியை பிறகு நான் ஏற்றுக் கொள்வேன்’’

என்று அன்பு சொன்ன வியாக்கியானம் தமிழின் சிந்தனைக்கு ஒட்டிப்போகிற மாதிரி இருக்கவில்லை. ‘‘நீர் இந்த பழக்கத்தால் பலவீனமாகிக் கொண்டு வருவதை மறைப்பதற்காக ஏதோ காரணம் கூறுகிறீர். எமது அன்றைய கால தமிழ் இலக்கியங்களில் பாதி இந்த சூதின் கொடுமையைப் பற்றித்தான் கதை கதையாக சொல்லி இருக்கிறது. சூதாட்டம் என்பது ஒரு வகையில் என்ன செய்கிறோம் என்று தெரியாத அளவிற்கு ஒரு கண நேரத்திலேயே எதை எதையோ கொடுமைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து விடும். இழப்புகளுக்குப்பிறகு துயரென்னும் நதிதான்’’

‘‘இல்லை தமிழ்! நீர் சொல்வது எல்லாமே முன்னைய பழைய காலத்துக் கதை. தருமர் பகடை ஆட்டத்தில் மனைவி திரௌபதியை பணயமாக வைத்து சூதாடியது போல இப்போதெல்லாம் பணத்திற்கு பதிலாக மனைவியை குதிரை றேசில் பணயமாக கட்டி ஆட முடியாது. இப்போது ஒரு கதை உமக்கு சொல்கிறேன். ஒரு முறை ராமகிருஷ்ணரிடம் ஒருவன் வந்தான். நிறைய தங்க காசுகளை அவரின் காலடியில் கொட்டி விட்டு நின்றான். ராமகிருஷ்ணர் மகிழ்ச்சியடையவில்லை. உடனே அவனைப் பார்த்து அவர் - “என்ன நீ மற்றவர் உன்னைப் பார்த்துப் புகழ வேண்டும் என்று கொட்டுகிறாயா.. மேடையில் நடிப்பதுபோல உன் செய்கை இருக்கிறதே.. நீ மூட்டைக்குள் திரும்ப இதை போடு.. கங்கைக்குப் போ.. அந்த கங்கைக்குள்ளே இதை கொட்டி விட்டு வா எனக்கு தந்ததை நான் கங்கைக்கு தந்து விட்டேன்” என்று அவர் சொன்னார். இந்த அவரது செய்கையிலிருந்து நான் உமக்கு என்னத்தை சொல்வதற்கு இருக்கிறேன் என்றால் ‘‘என்ன அதற்கும்



நீ.பி.அருளானந்தம்

இதற்கும் பொருந்த கூடியதாய் ஒரு முடிச்சுப் போடப் பாக்கிறீரோ நீர்?''

''கொஞ்சம் நீர் அமைதியாக இரும் தமிழ்.. புத்திசாலி போல இருந்து… என்னுடைய சொந்தக் கருத்தை நான் சொல்லுகின்றேன் கேளும்.. எனக்கு பசியில்லை பிணியில்லை அதனாலே நான் பணத்துக்கு மரியாதை அளிப்பதில்லை… என் செலவுக்கு போக மிஞ்சுகிற பணத்தை நான் குதிரை றேஸ்சில் செலவிடுகிறேன்.. இந்தப் பணம் எல்லாமே என் சொந்தப் பணம். என் பணத்தில் நான் என்ஜோய் பண்ணுகிறேன் அவ்வளவுதான்.!''

''அப்படி என்றால் இது உமக்கு ஒரு பொழுது போக்கு என்கிறீர்?''அன்பு சொன்னதற்கு தமிழ் ஒருநெருக்கமான கேள்வி கேட்டான். உடனே இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு அவனை இழுத்துக்கொண்டு வந்து காட்டுவதுபோல அன்பு பதில் விளக்கம் சொன்னான். ''மன்னர் காலத்திலிருந்து பொழுது போக்குக்காகத் தானே இந்த சூதாடியதாக இருக்கிறார்கள்.. நானும் அது போல இன்றைய காலத்திலுள்ள குதிரை றேசிலே பணத்தைக் கட்டுகிறேன். இந்த குதிரை றேசிலே ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சுவை எனக்கு இருக்கும். இந்தா, இந்தா பார், இன்று என் குதிரை மற்றக் குதிரைகளை விட முந்தப் போகிறது, என்று எனக்கு ஒரு சுறு சுறுப்பு இருக்கும்''

''அப்போ நீர் காசு கட்டிய அந்த குதிரை ஓட முடியாமல் தோற்றுப் போனால் பிறகு என்ன செய்வீர்?''

''அங்கே வென்ற குதிரையை தவறாகப் புரிந்து கொண்டு அதற்கு காசு கட்டாமல் நான் விட்டு விட்டேனே என்று உடனே நான் நினைப்பேன். பிறகு அந்தக் குதிரையை அடுத்து வரும் தினங்களில் ஓடவரும் போது மிகவும் மரியாதையாக அதை மனதில் வைத்துக்கொண்டு பணம் அதற்குக் கட்டுவேன்..''

''சரி அந்தக் குதிரையும் இப்போது தோற்றால்?''

''இதென்ன கதை? இன்பத்திலிருந்தும் வலியிலிருந்தும் விடு பட்டவன்தான் உண்மையிலேயே ஒரு சூதாட்ட நாயகன்! நானும் அப்படித்தான்!''

''அப்போ ஆசைகளையெல்லாம் ஆவியாகி விட்ட ஒரு நிலையில்தான்.. உமது பொழுது போக்கான இந்த குதிரை றேசையும் நீர் ஆடுகிறீர் என்றீர் அப்படித்தானே!'' ''உண்மை தான் தமிழ்!இதற்கு ஒரு காரணம் நான் உமக்கு சொல்லுகிறேன். சாந்தம் நிலவும் உலகத் துக்குள் சென்றுவிட வேண்டும் என்று சிலர் நினைத்துக்கொண்டு தியானப் பயிற்சிக்கு செல்கி றார்கள். அவர்கள் தங்கள் பொக்கிசங்களை அங்கெல்லாம் மனத்தால் கூட தொலைக்க மாட்டார்கள். ஆனால் நான் என்மட்டிலே உள்ள பணத்தை குதிரை றேசில் கொண்டு போய் தொலைக்கிறேன். ஆனாலும் கவனம் கூர்ந்த தீர்மானமாக என் மனதை நான் நிம்மதியாகத்தான் வைத்திருக்கிறேன். கொண்டாட்டமாக என் வாழ்க்கையையும் நான் வாழ்கிறேன்.''

''நீர் சொல்வதைப் பார்த்தால் எனக்கு என்னடா இப்படி ஒரு மனிதரான ஆள் இவர்? என்று சொல்லத்தான் ஒரு வேகம் வருகிறது. இந்த உலகத்துக்கு எதிரான பேச்சாக உமது கதைகள் எனக்கு தெரிகிறது.. உமது குதிரை றேஸ் சூதாட்ட உலகம் எப்படி இருக்கும் என்று நானும் அறிந்துகொள்ள ஒரு நாள் உம்மோடு அவ்விடம் வந்து எல்லாவற்றையும் ஒரு முறை பார்க்க வேண்டும். என்று எனக்கு இப்போது ஆவலாகத்தான் இருக்கிறது''




''ஆமாம் கட்டாயமாக நீர் ஒரு நாள் என்னுடன் அங்கு வந்து பாரும்… நான் உம்மை நாளைய தினமே கூட்டிக் கொண்டு போகிறேனே. அங்கே நீர் வந்து பார்த்தால்தான் ஒரு ஆயிரம் ரூபாய்த் தாள் வெறும் காகிதமே தவிர வேறில்லை என்பதை நேரில் நீர் கண்டு உணர்வீர்.. முதல் முதலாக இதையெல்லாம் நீர் தெரிந்து கொள்ள வரும்போது பணம் தன்னை தலையாக்கி வைத்திருக்கிற மதிப்பு அங்கே உடைந்து சிதறு

கிறதை நீர் உமது கண்களூடாக நேரில் காண்பீர்.''

''நீர் சொல்வதையெல்லாம் என் கண்ணாலே நேரில் கண்டு அறிய எனக்கு இப்போது ஆவலுண்டு... அந்த சூதாட்ட வட்டத்துக்குள் இருந்து அரை இரவுப் பொழுதைக் கழிப்பவர்களை ஒரு முறை நானும் அங்கு வந்து கண்டு கொள்கிறேனே''.

''கண்டிப்பாக! நாளைய நாள் அந்தக் காட்சிகளை காண நான் உமக்கு உதவுவேன்... அப்போ நாளையதினம் இந்த பொழுது படும் நேரத்திலே இந்த இடம் வந்து விடும் இந்த ஏற்பாடு உமக்கு சரிதானே?''

''ஆமாம் நாளைய நாளை தவற விட்டு திரும்பி ஒரு மறுப்பு செய்தி உமக்கு சொல்லாத அளவிலே கட்டாயமாக நான் வருவேன் அன்பு! வருவேன்!'' என்று சொல்லியவாறு புத்தியில் புத்தம் புது யோசனைகளையும் வைத்தப்படி தமிழ் அன்பு விடமிருந்து விடைப்பெற்றவாறே கிளம்பினான்.

அடுத்த நாள் பிரமாதமான ரி.சேட் அணிந்து கொண்டு அன்புவை கண்டு கொள்ள தமிழ் வந்திருந்தான். தமிழ் வந்ததும் அன்பு அவனிடம். ''அந்த ஹோட்டலில் போய் முதன் முதலில் பால் அப்பம் சாபிட்டு தேநீர் குடிப்போம்'' என்று கேட்டான். அவன் கேட்டதற்கு தமிழும் ''சரி'' என்று விருப்பம் தெரிவித்தான். இருவரும் அந்த ஹோட்டலுக்குப் போய் அப்பம் சாபிட்டு தேநீரும் குடித்தார்கள். அதற்கான பணத்தை அன்புதான் முந்திக்கொண்டு கொடுத்தான். இதன் பிறகு அன்பு அவனை குதிரை றேஸ் சூதாட்ட கிளப்புக்கு கூட்டிக் கொண்டு போனான். அங்கே அந்த இடத்தைச் சென்றடைய மாடிப்படி ஏறி செல்லும் போது பாறைகளுக்கு இடையே செல்லும் சிக்கல்கள் போல தமிழுக்கு இருந்தது. மேலே சென்றதும் அந்த அறையின் கதவை ஒருவன் திறந்து அவர்களை உள்ளே போகவிட்டான்.

உள்ளே போனதும் முதன் முதலாக தமிழ் அந்த நீள அறையை பார்த்தான். எத்தனை நவீன ரி.வி.க்கள் அங்கே சுவரில் பொருத்தப்பட்டிருக்கின்றன. என்பதையும் அவன் அவதானித்தான். அங்கே பாலைவனத்தில் உள்ள சோலையை பார்ப்பது போன்ற சந்தோஷத்தோடு எல்லோருமே அங்கேயுள்ள ரி.வி.க்களை பார்த்தபடி இருந்தார்கள்.

ரி.வி.நேரடி அலையில், சக்தி அனைத்தையும் கொண்டு குதிரைகள் றேஸ் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்தக் குதிரைகள் ஓடத்தொடங்கு முன்னே அதற்கு பணம் கட்டியவர்களெல்லாம் பிச்சைப் பாத்திரம் ஏந்திய பிச்சைக்காரர்கள் போல, தமிழுக்கு அவர்களைப் பார்க்கும் போது தெரிகிறாற் போல இருந்தது.

குதிரை ஓடி வென்றதிலே பணம் பெறுவதற்கு ஒருவர் கவுண்டர் அண்டைக்கு கதிரையிலிருந்து எழுந்து போகிறார். பணம் பெறச் சொல்லுகின்ற அவர் ஆறு கண்டங்களையும் ஆளும் அரசன் போன்றுதான் நெஞ்சையும் நிமிர்த்தியபடி நடந்தவாறு பணக்கொடுப்பனவு இடத்தை நோக்கி செல்கிறார். அன்புவை அங்கே வரக் கண்டதும் அவனை வரவேற்கும் அவனது சக சூதாட்ட ஆக்களிடமாக என்ன ஒரு கொண்டாட்டம். ஓர் ஆனந்தத்தோடு அவர்களெல்லாம் அன்புவை வறவேற்பதை பார்க்க தமிழுக்கு தன்னோடு இருந்த முன்னைய மனத்தோடான சூதாட்ட வெறுப்பு அடையாளத்தை எடுத்து வெளியே எறிந்து விட்டது போலத்தான் இருந்தது.

அங்கே நீண்ட மேசைகள் இருந்தன. அதற்கருகிலே நிரையாக கதிரைகளும் இருந்தன. தமிழை அங்கு ஒரு கதிரையில் இருக்க விட்டு அன்புவும் அவனருகில் இருந்தான். தமிழ் கதிரையில் இருந்தவாறு அங்குள்ளவர்களை நோட்டம் விட்டான். அங்கிருந்த சிலரின் மேசையிலே மது நிரப்பப்பட்ட கிளாஸ்களும் இருந்தன. அதிலே ஒரு ஸிப் அடித்து, பிற்பாடு வென்றுவிடத் தகுந்த குதிரைக்கு அவர்கள் பணம் எழுதிக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள எல்லோரிடமும் பணம் ஒளிந்திருக்கும் பேராசைதான் உண்டு, என்பதாக தமிழும் அவர்களின் முகங்களை பார்த்த அளவில் தன் மனதிலே கணித்துக் கொண்டான்.

அவனுக்கு திக்கு முக்காட்டமாக இருக்கிறது. அவ்வளவாக அதற்குள்ளே சிகரெட்டுப்புகை, தேங்கிப்போன குளம் மாதிரி தங்கிப் போய் ஒரே நாற்றம். நல்ல காற்றையே அனுபவிக்க முடியாததாய் இது என்ன கஷ்டம்? என்றதாய் அவனும் அவதிப்பட்டான். என்றாலும் ரி.வி. யில் குதிரைகள், நான் முந்தியதாய் நீ முந்தியதாய் என்று படு வேகமாக றேஸ் ஓடுவதை அவனுக்கும் அது ருசித்துப்

பார்க்கக் கூடியதாக இருந்தது. அந்த றேஸ் ஓட்டத்தைப்போல நாய்களின் ஓட்டமும் பணப் பந்தயம் கட்டும் சூது விளையாட்டாகத்தான் நடந்து கொண்டிருந்தது. குதிரை ஓட்டத்தை பார்த்துக் கொண்டிருக்கும் ருசியை சிறிது நேரத்துக்கு அந்த நாய்களின் ஓட்டமும் முறித்து விடுவது போலத்தான் தமிழுக்கு இருந்தது. “நாய்களின் ஓட்டத்தைப் பார்த்தீரா தமிழ்… குதிரைகளின் ஓட்டத்தை விட இந்த நாய்களை பாரும் என்ன அட்டகாசமான பாய்ச்சலில் ஓடுகிறது”

“ஆமாம் எனக்கும் இந்த நாய்களது றேஸ் ஓட்டத்தைப் பார்க்க மனம் உற்சாகமாகத்தான் இருக்கிறது…அது சரி இந்த நாய் றேஸ்களின் சூதுக்கும் நீர் பணம் கட்டுவீரோ?”“பின்னே என்ன, நான் அவைகளை வெறுப்பேனோ.. திடங்கொண்ட அந்த குதிரைகள் போல வயிறு ஒடுங்கிய மெலிந்த இந்த கறுத்த நாய்களும் ஓட்டச் சூதிலே வென்று பணத்தை வாரி வாரி வென்றவர்களுக்கெல்லாம் இறைத்து கொட்டியிருக்கிறது தமிழ்” என்று புயங்கள் பருக்கும் அளவிலே தோள்களை அசைத்தவாறு அன்பு சொன்னான். இதை சொல்லியதோடு, “தமிழ் நான் கவுண்டரில் பணம் கட்டி றேஸ் எழுத தயாராகி வந்து விடுகிறேன். நீர் இப்படியே அமர்ந்துக் கொள்ளும்… நான் இதோ உடன் வந்து விடுகிறேன்” என்று சொல்லி விட்டு கவுண்டர் அண்டைக்கு கதிரையாலிருந்து அவன் எழுந்து போனான். அவன் எழுந்து போனதும் தனிமையில் தமிழுக்கு ஒரு யோசனை போனது. ஒரு வீட்டையே கேவலமாய் வீழ்ந்திட செய்யும் இந்த சூதின் கொடுமையை அவன் தன் யோசனையிலே உள் வாங்கினான். “இந்த சூதுப் பிரிவுகளால் நட்டத்தைத் தவிர எவன் தான் ஏதும் நன்மைதனை பெற்றான்?” இந்த நினைவு அவனுக்கு இருக்கையில் அன்புவும் அவனுக்குப் பக்கத்தில் வந்து கதிரையில் இருந்து கொண்டான். அவனுடைய கையிலே இப்போது சிறு துண்டு கடதாசிகள் இருப்பதை தமிழ் கண்டான். ஆனாலும் அவன் கைகளிலிருந்ததை தமிழ் அக்கறையாக ஒன்றும் பார்க்கவில்லை.

“உமக்கு விஸ்கி” அன்பு அவனைக் கேட்டான்.

“நோ நோ”

“அப்போ கஜூநட்ஸ் என்றாலும் சாப்பிடும்” ஓடர் பண்ணினான். உடனே எல்லாமே மேசைக்கு வந்தது. விஸ்கி அன்பு ஒரு சிப் அடித்தான். “ம் கஜூ சாப்பிடும்” அவன் சொல்ல தமிழ் இரண்டு “கஜூ” எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். குதிரைகள் ஓடத் தொடங்கும் முன்னமே அன்பு தனக்கு வெல்லக் கூடிய குதிரைக்கு பணம் எழுதினான். றேஸ் ஆரம்பிக்கவும் கவுண்டரில் அதைக் கொண்டு போய்க் கொடுத்தான். ஓட்டத்தில் அவன் குதிரை முதலாவதாய் வந்தது. அந்தக் குதிரை வென்றதும் சந்தோஷத்திலே மேசையின் மேல் அன்பு தன் கையால் ஒரு பெரிய தட்டு தட்டினான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே எழுந்து அவன் கவுண்டர் அண்டைப் போனான். அவன் திரும்பி வரும் போது ஒரு கட்டு ரூபாய் நோட்டுக்கள் கையிலிருந்தது.

அங்குள்ள எல்லோருமே இப்போது அவனைத்தான் கவனித்தார்கள். அவன் கையி லிருந்த பணத்தை கவனித்தார்கள். எல்லோரின் பார்வைக்கும் அவன் ஒளியைப் போல காணப் பட்டான். தன் இருக்கையில் அன்பு வந்து இருந்தான். அவன் மூச்சு விடும் காற்று தமிழுக்கு இப்போதுதன் சுவாசத்தில் இருக்கும் தன்மையிலாக இருந்தது. “ஒரே ஒரு நிமிடத்துக் குள்ளால் ஒரு சிறு தொகை கட்டி பெறும் குவியல் பணமா?” தமிழுக்கு ஆச்சரியத்தில் முதலில் மூச்சுப்போனது. இரண்டாவது எண்ணமாக “அடுத்தும் றேஸ் எழுதி இப்படி சம்பாதித்துக் கொள்வானா?” என்றும் அவன் யோசித்தான்.

அன்புவிற்கு தன் கையில் இப்போது உள்ள பணம் தன்னுடையது அல்ல என்பதான மனப்போக்கு இருந்தது. அதனால் கையிலிருந்த பணத்தொகையில் ஒரு பங்கை நாய் றேசிக்கு இப்போது அவன் போட்டான். மற்றைய அரைவாசியை குதிரைக்கும் கட்டினான்.

அவன் கட்டிய குதிரை கால்கள் தரையில் பாவாதது போல பறந்த மாதிரி ஓடியது. அவன் றேஸ் கட்டிய கறுப்பு நாயும் ஒட்டுமொத்த வேகமெடுத்து ஓடோடு, ஓடு! என்ற கணக்கில் ஓடியது. முடிவு, இரண்டிலும் அன்பு வென்று கொண்டான். அவன் பிறகு தன் கையிலே வாங்கி வந்த கட்டுக் கட்டான பணத்தைப் பார்க்க கிளப்பில் இருந்த எல்லாருக்குமே தலை சுழன்றது. பாம்பின் நகர்வுபோல இவ்வளவு நேரமும் அவ்விடத்தில் வேகமாக செயல்பட்டவர்களெல்லாம் இப்போது வேகம் குன்றி சோம்பலாக இருந்தார்கள்.

அன்பு கிளாசிலிருந்த விஸ்கியை எடுத்து வாயில் பொருத்தி வைத்தப்படி ''ர்'' என்று வீரியமாக ஒரு இழுவை உள்ளே உறிஞ்சி எடுத்தான். ''ம் கஜ சாப்பிடும்'' என்று தமிழைப் பார்த்து பின்பு அவனுக்கும் சொன்னான். அதன் பிறகு பல் தெரியா புன்னகையோடு ரி.வி.யை பார்த்தான். ஒரு நிமிடம் பேசாமல் இருந்து விட்டு பிறகு முழுப்பணத்தையும் கொண்டு போய் கட்டி சீட்டு வாங்கி வந்தான்.

''இன்றைய நாளில் தொடரும் என்னுடைய சூதாட்ட வெற்றியானது நிச்சயம் என்னோ டேயாகத்தான் இன்னும் வந்து கொண்டிருக்கப் போகிறது. அதனால் இன்றைய லக்கு எனக்கு எப்படியும் பிடுங்கப்படாது'' என்று அன்பு முழுமையாக நம்பினான். அவன் பார்வையில் இப்போது அவனுக்கு காணப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திரமான குதிரையானது இந்த றேசிலே உலகையும் தாண்டியும் ஓடும் என்று அன்பு கணக்கு போட்டான்.

அந்த யோசனையோடு சரியான விழிப்புடன் அந்த குதிரையின்மேல் முழுத்தொகைப் பணத்தையும் எழுதி அதை கவுண்டரில் கொண்டுபோய் கொடுத்தான் அந்தக்கணமே குதிரை றேஸ் தொடங்கிவிட்டது. அவன் பணம் கட்டிய குதிரை தன் சக்தியெல்லாம் சேர்த்து வீணாக்கிய அளவுக்குத்தான் வேகமாக ஓடுகிறது. அதன் ஓட்டம் அருமை! வெகு அருமை! குதிரை ஓட்டுனரும் குதிரையின் மூர்க்கத்தனத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்து கொண்டிருந்தான். ஆனாலும் கடைசி செகண்ட் அந்த குதிரையின் தோல்வியை ஒப்புக் கொண்ட கணக்காக பிந்திப் போனதாகி விட்டது. ஆனாலும் அன்பு அந்தக் குதிரையின் தோல்வியை தழுவிப் பிற்பாடும் பரபரக்காமல் தான் இருந்தான். ''எல்லாப் பணமும் வீணாகிப் போச்சே'' என்றதாய் ஒருவார்த்தையேனும் தமிழோடு அவன் கதைக்க வேயில்லை. ''தோல்விக்கு தயாராகிக்கொள்ளக் கூடிய மனம் உடையவன்தான் சூதாட்ட விளையாட்டுக்கு போக வேண்டும்'' அவன் தமிழை பார்த்து இதை சொல்லிவிட்டு சிரித்தான்.

''தமிழ்! சூதாட்டத்திலே, மேதைத்தனமும் இல்லை, முட்டாள் தனமும் இல்லை. சரியாக சொன்னால் இன்னும் முயற்சி செய்து கொண்டிருப்பதுதான் இந்த சூதாட்ட விளையாட்டுக்கான பாதை... சரி இனி இந்த இடத்தை விட்டு நாங்கள் வெளியேறி விடுவோமே''

அன்பு இதைச் சொல்லி விட்டு கதிரையிலிருந்து எழுந்தான். அவன் எழ தமிழும் இருக்கையிலிருந்து எழுந்தான். இப்போது கிளப்பை விட்டு வெளியே வந்த அவர்கள் இருவரும் அந்த வீதி வழியாக நடந்து கொண்டிருந்தார்கள். இந்நேரம் அன்பு தமிழைப் பார்த்து ''ஒரு கதை நான் இப்போது உமக்கு சொல்லப்போகிறேன் தமிழ் அது என்னவென்றால் கடவுள் இருக்கிறாரல்லவா கடவுள்''

''ம்...ம்...''

''அந்தக் கடவுள் பாரும் தமிழ் வந்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவர்களைதான் நேசிக்கிறாராம்! அவருக்கு அப்படி ஏன் ஒரு குணம் இருக்கிறது என்றால் அவருக்கு.. துயரமான முகங்களை பார்க்கப் பிடிக்காதாம்'' என்று சொல்லி விட்டு தயார் நிலையில் இருந்த பெரிய சிரிப்பை அவன் சிரித்தான்.

அவன் சிரிப்பதை பார்த்து தமிழ் அவனுடன் அதை பகிர்ந்துக் கொண்ட அளவிலே தானும் சிரிக்கவில்லை. அவன் தன் யோசனையிலேயே யாத்திரையாகி இப்போது போகிற நிலையிலே இருந்தான். அவனுக்கு மனதிலே இப்போது ஓர் இமாலயச் சுமை பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. ''சீ... பெற்ற வெற்றியோடு கையிலுள்ள மொத்த பணத்துடன் அந்த நேரமே அந்த இடத்தை விட்டு அன்பு வெளியேறியிருந்தால், அந்தப் பணத்தை இவன் சிறப்பாக அனுபவித்திருக்கலாமே? அப்படி சரியான பாதையில் போகாமல் விட்டு விட்டு தேவையில்லாத இவரின் பேச்சுகள் என்ன ஒரு பேச்சு! வெறுமனே பேசுவதற்காக பேசும் பேச்சு''

இப்படி யோசித்தாலும் தமிழ் வாய்த்திறந்து அவனுடன் அதைப்பற்றியதாய் ஒன்றுமே மறுபடி பேசவே இல்லை.

❍❍❍

அன்புடையீர்!

ஞானம் பிரதம ஆசிரியரின் 80ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய மாபெரும் இலக்கியப்போட்டியின் பரிசளிப்பு விழா பின்போடப்பட்டுள்ளது. இவ்விழா 19.03.2022 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் நடைபெறும். **– நிர்வாக ஆசிரியர்**





# அன்புள்ள கில்லி திரைப்பட இயக்குனர்

# ஈழத்தைச் சேர்ந்த ஸ்ரீநாத் ராமலிங்கம்

**ஞானம் : சிறுவயதில் இருந்து சினிமாத்துறையில் ஈடுபாடுகொண்ட நீங்கள் அமெரிக்கா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் பணியாற்றியுள் ளீர்கள். இந்த அனுபவங்கள் பற்றிக் கூறுங்கள்.**

***ஸ்ரீநாத் :*** நான் இலங்கையில் O/L முடித்து A/L முதலாம் வருடம் படிக்கும்போது எனது வாழ்க்கையில் என்ன செய்யப்போகின்றோம் என்ற சிந்தனை எழும்பியவண்ணம் இருந்தது. எனக்குப் பிடித்த விடயத்தை வாழ்க்கையில் செய்யவேண்டும் என்கிற உள்ளுணர்வு என்னை சீண்டிக் கொண்டு இருந்தது. பாட சாலையில் நாடகங்கள் நடிக்கும்போதும், கலை நிகழ்ச்சிகள் செய்யும்போதும் எனக்கு இருந்த ஆர்வமும் ஈடுபாடும் பாடங்களைப் படிக்கும்போது எனக்கு ஏற்படவில்லை. குறிப் பிட்ட பாடங்களைத்தான் படிக்க வேண்டும், அவற்றைப் படித்துவிட்டு குறித்த தொழில் களைச் செய்யவேண்டும் என்கிற அழுத் தங்கள் படிக்கும்போது இலங்கையில் எல் லாக் குடும்ப அங்கத்தவர்களினாலும் முன் வைக்கப்படுவது எங்களுக்குத் தெரியும். ஆனால், என்னுடைய உள்ளான்மாவின் குரல் 'உனக்குப் பிடித்ததைச் செய், என்னை சினிமாத்துறைக்குச் செல்' என்று கூறிக் கொண்டே இருந்தது.

அந்த நேரம் அமெரிக்காவில் ஒரு film கற்பிக்கும் பல்கலைக்கழகம் ஒன்று O/L ரிசல்ட் போதும் என்று கூறினார்கள். அந்தப் பல்கலைக்கழகத்துக்கு apply பண்ணினேன். IELTS ஆங்கில பரீட்சை சுயமுயற்சியால் கற்றேன். அப்பா, A/L முடித்தபின் அமெரிக்கா செல்லலாம் என்றார். இப்போது இவற்றை செய்தால் A/L முடிவதற்கும் சரியாக வரும் என்று நான் அப்பாவிடம் கூறினேன். A/L முதலாவது பரீட்சை நடைபெறும்போது அமெரிக்கா விசா எனக்குக் கிடைத்தது.

சினிமா படிப்பதற்காகவே அமெரிக்காவில் சென்று கால் வைத்தேன். சினிமாவை ஒரு துறையாக மூன்று வருடங்கள் கற்றேன்.

**ஞானம் : வளர்ந்துவரும் இளம் திரைப்பட இயக்குனர் ஆகிய நீங்கள் ஈழத்தைச் சேர்ந்தவர் என்பது எமக்குப் பெருமை தருகின்றது. தங்களின் குடும் பப் பின்னணி பற்றிக் கூறுங்கள்**

***ஸ்ரீநாத் :*** ஞானம் சஞ்சிகை நேயர்களுக்கு வணக்கம். என்னுடைய குடும்பப் பின்னணி பற்றிக் கூறுமிடத்து, நாங்கள் இந்திய வம்சா வளி. அப்பா **ராமலிங்கம்**, அம்மா ***சிவசங்கரி***. எனக்கு இரண்டு மூத்த சகோதரிகள். அப்பா ஒரு நகை வியாபாரி. என்னுடைய குடும் பத்திலே கலை சார்ந்த பின்னணி இல்லை. ஆனால், குடும்பமாக இருந்து ஞாயிற்றுக் கிழமைகளில் புதுப் படங்களை VHS, VCD வாங்கிப் பார்க்கும் நினைவுகள் பசுமையாக என் மனதில் இன்றும் உள்ளன.

**கொழும்பு கொட்டாஞ்சேனை**யிலேதான் நான் பிறந்து வளர்ந்தேன். கொட்டாஞ்சேனைதான் என்னுடைய பூர்வீகம். நிறைய விடயங்களை நான் உணரக்கூடிய தளமாக கொட்டாஞ்சேனை எனக்கு அமைந்தது. அடுத்து முக்கியமானது எனது பாடசாலை. நான், கல்கிசையில் உள்ள **சென்ட் தோமஸ் கல்லூரி**யில் கல்வி கற்றேன்.

நான் பிறந்த கொட்டாஞ்சேனை, படித்த பாடசாலை, எனது குடும்பம் ஆகியன எனக்கு தந்த ஒவ்வொரு சின்னச் சின்ன அனுபவங் களும் என்னுடைய கலைப் பயணத்துக்கு விதைகளாக அமைந்தன.

## இணையவழி நேர்காணல் : ஞானம் பாலச்சந்திரன்

பட்டம் எடுத்தவுடன் ஹாலிவுட்டில் வேலை செய்யவேண்டும் என்ற ஆசை.

அமெரிக்காவில் உள்ள ஒரு பெரிய கம்பெனியில் ஒரு படத் தொகுப்பாளராக என்னுடைய பயணத்தை ஆரம்பித்தேன். இயக்குனராக வரவேண்டும் என்பதுதான் ஆசை. சின்ன சின்ன music album மற்றும் short film போன்றவற்றைத் தயாரித்து என்னை நான் வளர்த்துக்கொண்டேன். இப்படி இருக்கும் போது கலிபோர்னியாவில் art director ஆக பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. இவற்றில் நல்ல அனுபவங்கள் கிடைத்தன.

இப்படி இருக்கும்போது சிங்கப்பூரில் ஒரு பெரிய கம்பனியில் எனக்கு head of creative ஆக பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிட்டியது. அமெரிக்காவை விட்டுவிட்டு சிங்கப்பூருக்கு செல்வதில் ஆரம்பத்தில் தயக்கம் காணப் பட்டது. ஆனால், கலையின்மீது இருக்கும் பற்றில் சிங்கப்பூருக்குக் கிளம்பினேன்.

சிங்கப்பூரில் அனைத்தும் சிறப்பாக அமைந்தன. இரண்டு தொலைக்காட்சி சீரியல் தயாரிக்க வாய்ப்பு கிட்டியது. நல்ல நாடு. அழகான நாடு. பண ரீதியிலும் திருப்திகரமாக இருந்தது.

ஆனால், சிங்கப்பூரில் எனக்கு ஆத்ம திருப்தி கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். ஒன்றரை ஆண்டுகளில் நான் இந்தியாவுக்குச் செல்ல ஆயத்தமானேன். சிங்கப்பூரில் என்னுடைய கம்பெனி அதிகாரி நான் சிறப்பாக பணியாற்றுவதாகவும், சிங்கப்பூரிலேயே தொடர்ந்தும் இருக்கும் படியும், இந்தியாவுக்கு செல்ல வேண்டாம் என்றும் கூறினார். 'என்னுடைய உள்ளுணர்வு இந்தியாவுக்குச் செல்லும்படி கூறுகிறது. இதை நான் தடை செய்யக்கூடாது. நான் இந்தியாவுக்குச் செல்லவேண்டும்' என்று கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, நான் இந்தியாவுக்கு கிளம்பினேன்.



**ஸ்ரீநாத் பாடசாலையில் பரிசு பெறல்**

இந்தியாவுக்கு 2012இல் வந்தேன். பத்து வருடங்கள் ஆகிவிட்டன. சினிமாத்துறையில் சிறிய முயற்சிகள் செய்திருந்த நான் கிணறு - குளம் பார்த்துள்ளேன்... ஆனால், இந்தியா பெரியதொரு கடல்...! நாங்கள் அந்தக் கடலில் பாய்மரக் கப்பல் போன்று. வரும் அலைகளுக்கு ஏற்ப முயற்சியை விட்டுக் கொடுக்காமல் பயணிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் நிறைய வாய்ப்புகள் தேடினேன். எல்லாருக்கும்போன்று ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டன. **உனக்கென்ன வேணும் சொல்லு** என்கிற பேய்களை பற்றிய படம் என்னுடைய முதல் படம் ஆகும். இதன்பிறகு இரண்டரை வருடங்கள் வேறு வாய்ப்புகள் வரவில்லை. அதனால் வளர்ப்புப் பிராணியை வைத்து ***அன்புள்ள கில்லி*** என்னும் கதையை எழுதி தயாரானேன். தற்பொழுது அன்புள்ள கில்லி படமானது எனக்கு திருப்தியாக அமைந்துள்ளது.

எனக்கு இதுவரை கிடைத்த அனுபவங்கள் அனைத்தும் ஏற்றம் இறக்கமாக அமைந்துள்ளன. எனக்கு கிடைத்த கஷ்ட காலங்களுக்கும் நல்ல காலங்களுக்கும் நான் நன்றி சொல்கின்றேன். இவைதான் என்னை மனிதனாக செப்பனிட்டுள்ளன.

**ஞானம் : தற்பொழுது வெளியாகியுள்ள அன்புள்ள கில்லி என்னும் படத்தில் நடித்துள்ள தங்களின் வளர்ப்புப் பிராணியை (நாய்) இந்தப் படத்துக் காகவே வளர்த்தீர்களா?.**

***ஸ்ரீநாத் :*** அன்புள்ள கில்லியில் நடித்த ***அமிகோ*** என்னும் பெயருடைய என்னுடைய வளர்ப்பு நாய், என்னுடைய மகன் என்றுதான் கூறுவேன். 2014ஆம் ஆண்டு முதலாம் படத்தை முடிக்கும் தறுவாயில் ஒரு பிரதோஷ விரத நாளன்று 35 நாட்களே நிரம்பிய அமிகோவை இணையத்திலே பார்த்து வாங்கினேன். இதற்கு முன்னர் எனக்கு நாய் வளர்த்த அனுபவம் இல்லை.

2014இல் செல்லப்பிராணி எனது வாழ்க்கைக்குள் வந்தது. ஆரம்பத்தில் அந்த உறவு புதுசு. முதலில் மொட்டை மாடியில் வளர்ந்தான். பின்னர் என்னுடைய படுக்கை அறையில் தரையில் படுத்துக் கொள்வான். பின்னர் நாங்கள் இருவரும் ஒரே மெத்தையில் படுத்துக்கொள்வோம். என்னுடைய வாழ்க்கையில் எல்லா விடயங்களிலும் அவனுடைய எண்ணங்கள் புகுந்து கொண்டன. எனக்கு



தெரியாமலே எனக்கு அவன்மேல் பிணைப்பு ஏற்பட்டது.

இந்தக் காலகட்டத்திலேதான் இரண்டாம் படத்துக்கு கதைகள் நான் கூறும்போது வாய்ப்புக்கள் அமையவில்லை. சோர்வு ஏற் பட்டது. இந்தியாவை விட்டு போய்விடலாம் என்று எண்ணினேன். கனடா அல்லது அமெரிக் காவுக்குச் செல்லலாம் என்று எண்ணினேன்.

ஒருநாள் இந்தியா நாட்டைவிட்டு போய் விடலாம் என்ற முடிவையும் எடுத்துவிட்டேன். அப்போது இவன் வந்து என்னுடைய மடி யிலே அமர்ந்தான். அந்தநேரம் இரண்டு எண் ணங்கள் எனக்குத் தோன்றின. முதலாவது, அமிகோவை ஆசையாக வளர்த்தேன். வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றவுடன் அவனை வேறு ஒருவரிடம் கொடுத்துவிட்டு இந்தியாவைவிட்டுக் கிளம்புவதா? எந்த வொரு எதிர்பார்ப்புகள் அற்று என்மீது அன்பு செலுத்தும் உயிரை, எனக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்பதற்காக தூக்கி வீசி விட்டுப் போவதா? என்கிற கேள்வி என்னை ஆழமாக உறுத்தியது. இரண்டாவது, நான் இந்தியாவைவிட்டு போகவில்லை என்று முடி வெடுத்தால், நான் அமிகோவுடன் இணைந்து தான் அடுத்த முயற்சி செய்யவேண்டும். அமிகோவுக்கே ஒரு கதையை உருவாக்கி, அவனை நாயகனாக்கி படம் செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் கருக்கொண்டது.

2016இல் கதை எழுத ஆரம்பித்தேன். கொடைக்கானலுக்குச் சென்று இரண்டு மாத காலம் காட்டுப் பகுதியில் வாழ்ந்தோம். அப்போது அமிகோவினால் எவற்றை செய்ய முடியும்? எவற்றை செய்ய முடியாது என்பதை உணர ஆரம்பித்தேன்.

அமிகோவுக்கு இரண்டு வயதாக இருக் கும்போது பயிற்சி ஆரம்பமானது. தொடர்ந்து மூன்று வருடகாலம் மிகக் கடுமையான பயிற்சி வழங்கினேன். ஐந்தரை வயது இருக்கும் போது படத்திலே நடிக்க வைத்தேன். இப் போது அவனுக்கு எட்டு வயது. நான் என்ன கேட்டாலும் என்னைக் கைவிடாமல், அமிகோ கைகொடுத்துள்ளான்.

அன்புள்ள கில்லி வெற்றிப் படம் அல்லது தோல்விப் படம் என்கிற நிலைகளுக்கு அப்பால் எனக்கும் அமிகோவுக்கும் இடையிலான உறவு, வித்தியாசமான அனுபவமாக மாறியது. என்னுடைய இறுதிக்காலத்திலே நான் என் வாழ்க்கையிலே என்ன செய்துள்ளேன்? என்று திரும்பிப் பார்க்கும்போது. பிள்ளை போன்று செல்லப் பிராணியை வளர்த்து, பயிற்சி கொடுத்து, நடிக்க வைத்து, அதற்கு குரல் வடிவம் கொடுத்து, கலைப் படைப்பாக - முழுநீள சினிமாப் படமாக உருவாக்கியுள்ளமை எனக்கு ஆத்ம திருப்தியைத் தரும் என்கிற முழு நம்பிக்கையும் சந்தோஷமும் ஏற்பட்டுள்ளது.

**ஞானம் : கில்லியின் (நாயின்) மனதிலே தோன்றும் எண்ணங்களுக்கு குரல் வடிவம் கொடுத்து, அது பேசுவது போன்று வாய் அசைவும் கொடுக்கப் பட்டிருந்தது. அதுபற்றி....**

***ஸ்ரீநாத் :*** நாங்கள் ஒரு வீட்டுக்கு போகும்போது அங்குள்ள நாய் குரைக்கும். அதைப் பார்த்து நாய் குரைக்குது என்று விட்டுவிடுவோம். ஆனால், அது உண்மையில் பேசுது. இரண்டு நாய்கள் தமக்கிடையே குரைக்கிற மொழியின் வாயிலாக அவை பேசிக்கொள்கின்றன. ஏனென்றால் அவை பணம், சொத்து, புகழ் பற்றிய விடயங்களைப் பேசாது. அதுகள், தன்னுடைய வளர்ப்பு தந்தை எப்படி? வளர்ப்பு தாய் எப்படி? சாப்பாடு எப்படி? சந்தோஷம் எப்படி? என்று எந்த எதிர்பார்ப்பும் அற்ற அன்பு சார்ந்து அதுகளின் எண்ணங்களும் உரையாடலும் இருக்கும். இந்த மாதிரி நாய்கள் பேசினால் எப்படி இருந்திருக்கும் என்கிற எண்ணம் எனக்கு நிறைய காலமாக இருந்தது. இந்த அடிப்படையிலேதான் அன்புள்ள கில்லியில் நாய்க்கு குரல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

படமாக்கும்போது நாய்களின் வாய் அசைவை கொண்டுவருவது முக்கியமான முயற்சியாக அமைந்தது. கில்லி - நாய்க்கு **பிரபல நகைச்சுவை நடிகர் சூரி குரல் கொடுத்து இருந்தார்**. அவர் மெருகூட்டி இருந்தார். இது ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

**ஞானம் : மனிதர்களை வைத்து படம் இயக்குவதற் கும், பிராணிகளை வைத்து படம் இயக்குவதற்கும் இயக்குனர் என்ற நிலையிலே எப்படியான அனுபவங்கள் தங்களுக்கு?**

**ஸ்ரீநாத் :** தற்காலத்திலே இப்படியான பிராணிகளின் நடிப்பை அனேகமாக கொம்பியூற்றர் கிராபிக்ஸ் மூலமாக செய்துவிடுவார்கள். ஆனால், உண்மையாக பிராணியுடனோ நாயுடனோ வேலை செய்யும்போது கிடைக்கும் உணர்வும் - அனுபவமும் அழகானது. அவற்றின் மீது எமக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படும். அவற்றுக்கு காலம் ஒதுக்கி உணவு கொடுத்து வேலை வாங்குவது என்பது குழந்தையிடம் வேலை வாங்குவது போன்றது. அது ஒரு சவாலான விடயம்.




மனிதர்களிடம் எமது தேவையை தெரிவிப்பது இலகுவானது. கோபமாக நடிக்க வேண்டிய இடத்திலே கோபமாக நடியுங்கள் என்றால் அவர்களுக்கு விளங்கிவிடும். ஆனால் பிராணிகளிடம் தேவையை வேறு பற்றனில் (Pattern) தெரிவிக்கவேண்டும். நாய் கோபமாக நடிக்கவேண்டும் என்றால் இன்னொரு நாயையோ அல்லது இன்னொரு செல்லப்பிராணியையோ நான் கட்டிப்பிடித்தால் அமிகோவுக்கு கோபம் வரும். என்னுடைய வளர்ப்பு தந்தை இன்னொருவரை கட்டிப் பிடித்துக்கொள்கின்றார் என்று அதற்கு கோபம் வரும். அதை நாங்கள் கமெராவில் படம் பிடித்துக் கொள்வோம். பிறகு படம் பிடித்ததைப் பயன்படுத்திக் கொள்வோம். இவ்வாறு செய்வதற்கும் கதைக்கும் - ஸ்கிரீன் பிளேக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது.

இந்த சாமர்த்தியம் தேவை. எனக்கும் அமிகோவுக்கும் இருந்த தெளிவான தொடர்பு இந்த விடயத்தை எளிதாக்கியது. எனக்கு என்ன வேண்டும் என்பது அவனுக்கு புரிந்தது. அவனால் என்ன செய்ய முடியும் என்பது எனக்கு தெரிந்து இருந்தது.



கில்லிக்கு (நாய்) குரல் கொடுத்த நடிகர் சூரி

**ஞானம் : அன்புள்ள கில்லி படம் எடுக்க பல வருடங்கள் எடுத்தமைக்குக் காரணம் என்ன?.**

**ஸ்ரீநாத் :** அன்புள்ள கில்லியின் கதைக் கரு 2016ஆம் ஆண்டு உருவாகியது. 2018ஆம் ஆண்டிலே தமிழ் சினிமாவின் ஒரு பெரிய கம்பனியுடன் இணைந்து வேலைகள் ஆரம்பமாகின. 8-9 மாதங்கள் வேலைகள் நடைபெற்றன. ஆனால் அந்த காலத்தில் அந்தக் கம்பனியில் வெளியாகிய இன்னொரு படத்தின் காரணமாக அன்புள்ள கில்லி வேலைகளை தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 2019ஆம் ஆண்டு இன்னொரு கம்பனியுடன் வேலைகளை முதலிலிருந்து மீண்டும் தொடங்கினேன். ஆனால் 2019 ஏப்ரலிலே என்னுடைய அம்மாவின் மூளையில் ஏற்பட்ட ஒரு சுகவீனம் (brain aneurysm) காரணமாக ஒரு மாத காலம் இலங்கை வந்து தங்கினேன். அம்மா கோமா நிலையில் இருந்தார்கள்.

என்னுடைய இந்த நிலையை தயாரிப்பாளர்கள் புரிந்து கொண்டார்கள். படப்பிடிப்பு இடை நிறுத்தப்பட்டது. அப்பாவும் சகோதரிகளும் என்னை தேற்றி சென்னைக்கு மீண்டும் அனுப்பினார்கள். மீண்டும் படப்பிடிப்பு தொடர்ந்தது. சூட்டிங் முடிந்த நிலையிலே அம்மா இலங்கையிலே இறந்த செய்தி கிடைத்தது. மீண்டும் இலங்கை வந்து ஒரு மாத காலம் தங்கி இறுதிக்கிரியைகள் எல்லாம் செய்தேன். இராமேஸ்வரம் சென்று அஸ்தியைக் கரைத்தேன்.

அதன்பின்னர் வேலைகள் (post production) மீண்டும் தொடர்ந்தன. அப்போது 2020களின் ஆரம்பத்திலே கொரோனாவின் தாக்கம் அதிகமாகி வேலைகளை பின்தங்க வைத்தன. உண்மையில் ஒன்றரை - இரண்டு



வருடங்களுக்குள் முடியவேண்டிய படம் இவ்வளவு காலம் எடுத்துள்ளது.

காலத்தை மீறக்கூடிய சக்தி எமக்கு இல்லை என்பதை நான் உணர்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான் படம் வெளிவர வேண்டும் என்பது இயற்கையால் எழுதப்பட்ட விதியின் அமைப்பு என்று நினைக்கிறேன்.

**ஞானம் : ஈழத்துச் சினிமாத்துறை பற்றிய தங்களின் கருத்து என்ன?**

**ஸ்ரீநாத் :** மக்களின் இரசனை என்ன என்பதை நாங்கள் உணர்ந்து செயற்படவேண்டும். எனக்கு ஒரு விடயம் பிடிக்கும் என்பதால் அதை படமாக்கினால், அது எல்லாருக்கும் பிடிக்கும் என்று இல்லை. இது வணிக நோக்கிலே தயாரிப்பாளருக்கு நஷ்டத்தைத் தரும். ஈழத்திலே அனேகமாக கவலையான - அழுத்தம் தருகின்ற விடயங்களையே நாங்கள் தொடர்ந்தும் சினிமாவிலே சொல்ல முயற்சி செய்கின்றோம். எல்லாவித அனுபவங்களையும் அனுபவித்த அனுபவம் எம்மிடம் உள்ளது. எல்லாவித உணர்ச்சிகளையும் நாங்கள் படமாக்க முயலவேண்டும்.

எல்லோரின் படைப்புகளும் மதிக்கத்தக்க படைப்புகள்தான். எல்லாருக்கும் படைப்பாளிகளாக ஆக வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆசை வேறு - அதற்கான உழைப்பு வேறு. அந்த உழைப்பைக் கொண்டு படைப்புகள் உருவாக்கி ஈழத்துச் சினிமாத் துறையை இன்னொரு தளத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்.

அடுத்தது, தற்போதுள்ள வேகமான உலகத்திலே எங்களின் படைப்புகள் வேகமாகவும், வித்தியாசமாகவும், புதுசாகவும், தொழிநுட்ப ரீதியில் நல்ல நிலையிலும் இருக்க வேண்டும். இந்த நிலையை ஈழத்து சினிமாத் துறையிலே உயர்த்தவேண்டும்.

இருநூறு - முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த உலகம் வேறு இன்றைய உலகம் வேறு காலகட்டத்துக்கு ஏற்ப கலைப் படைப்புகளின் அழகும் வடிவமும் மாற வேண்டும்.

இலங்கையில் உள்ள திரையரங்குகளில் ஓடக்கூடிய படங்கள் வெளிவரவேண்டும். இல்லாதவிடத்து நமக்கு என்று ஒரு OTT மார்க்கட் உருவாக்க வேண்டும். தரமான படங்களை மாத்திரமே OTT இல் வெளியிட வேண்டும் இப்படியான பல விடயங்களை ஈழத்து சினிமாத்துறை கவனத்தில் எடுக்கவேண்டும்.

வணிக ரீதியிலே வெற்றிபெறாவிடில் சினிமாத் துறை வளருவதில் சிரமங்கள் உள்ளன. இதுதான் உண்மை.

இது என்னுடைய அனுபவ பின்புலத்திலே என்னுடைய தனிப்பட்ட கருத்து.

**ஞானம் : ஈழத்தை மையமாக வைத்து படம் எடுக்கும் எண்ணம் தங்களுக்கு உண்டா?**

**ஸ்ரீநாத் :** கண்டிப்பாக செய்ய வேண்டும். பிறந்து வளர்ந்த மண்ணின் அழகையும் மக்களின் ஆழத்தையும் சொல்வதற்கு எல்லாருக்கும் விரும்பம் உண்டு.

இலங்கையில் இப்போது உண்மையாக ஒரு விடயத்தை சொல்ல முடியுமா என்பது எனக்கு சந்தேகமாக உள்ளது. சில வரைமுறைகள் இருப்பதாக உணர்கின்றேன். இதைச் சொல்லக்கூடாது.. இதைச் சொன்னால் பிரச்சினைகள் வரும் என்னும் நிலைப்பாடுகள் உள்ளன. அரசியல் மற்றும் இனப்பிரச்சினைகள் காரணமாக இந்த நிலைப்பாடுகள் உள்ளன.

இந்தியாவிலும் இத்தகைய வரைமுறைகள் உள்ளன. ஆனால், பொலிஸ் அராஜகம் பற்றியோ, அரசாங்கம் பற்றியோ, ஒரு கற்பழிப்பு சம்பவமோ தைரியமாக படமாக்கப்பட்டு வெளியே வருகின்றன. மக்களின் வரவேற்பு செல்வாக்கு இங்கு மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது. அதேநேரம் ஈழத்தைச் சேர்ந்து ஒரு அழுத்தமான செய்திகொண்ட படம் வந்தால், இந்தியாவில் திரையிடுவதில் தடைகள் உள்ளன.

இந்த நிலைமைகளில் ஈழத்தை மையமாகக் கொண்ட ஒரு படைப்பு இப்போது எடுத்தால் எப்படிச் சரியாக வரும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஈழத்தை மையமாகக் கொண்டு உண்மை

யான படைப்பாக அமையவேண்டும் முழுமையாக வெற்றிபெறவேண்டும்.. எங்கள் ஈழமக்களையும் நாட்டையும் கௌரவிக்கும் வண்ணம் அமையவேண்டும் அதற்கான காலம் கனியும்போது நான் கண்டிப்பாக நல்லதொரு படைப்பைச் செய்யவேண்டும் என்ற ஆசையுண்டு.

**ஞானம் : தங்களின் அடுத்தக்கட்ட முயற்சிபற்றிக் கூறுங்கள்?**

**ஸ்ரீநாத் :** முகம் தெரிந்த சற்று பிரபல்யமான நடிகர்களுடன் இணைந்து படம் ஒன்றை இயக்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முயற்சி செய்கின்றேன். இன்னம் 3-4 மாதங்களில் அடுத்த படம் பற்றிய அறிவிப்புகள் வெளியிட முடியும் என எண்ணுகின்றேன். காதல் - அக்ஷன் கலந்த கொமர்ஷல் படம் (வணிக ரீதியாக வெற்றிபெறக்கூடிய) ஒன்றை உருவாக்கவேண்டும் என்பது எனது ஆசை.

**ஞானம் : நிறைவாக ஞானம் சஞ்சிகை வாசகர்களுக்கும் ஈழத்தவர்களுக்கும் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**ஸ்ரீநாத் :** கலை இலக்கியம் ஆன்மிகம் ஆகியன எங்களின் பூர்வீகம் - அடித்தளம் - வேர்கள். எத்தகைய காற்று அடித்தாலும் மழை பெய்தாலும் மண்ணுக்குள் அசையாது இருக்கும் வேர்கள். மற்றைய போலித் தனமான செய்திகள் எல்லாம் மேலேயுள்ள இலைகள் - கிளைகள் போன்றவை. உதிர்ந்து போகக் கூடியன.

ஈழத்திலிருந்து எங்களின் கலை இலக்கிய விடயங்களை தொடர்ந்து 22 வருடங்களாக ஞானம் சஞ்சிகை வழங்கிவருவது என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்படியான விடயத்தை செய்யக்கூடிய வேட்கை எல்லாருக்கும் இல்லை. பணம் மாத்திரமே வேண்டும் என்று ஓடும் உலகத்தில் இத்தகைய நல்ல கலை இலக்கிய விடயங்களைத் தாங்கி வருவது மிகச் சிறந்தது.

வாசக நேயர்களை இத்தகைய சஞ்சிகைகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

சந்தர்ப்பத்துக்கு மிக்க நன்றி!

❍ ❍ ❍

மொழிபெயர்ப்புக் கவிதை

# எழுத வேண்டாம்

நீ எனக்கு
எழுதவேண்டாம்
பெய்யும் மழையினுள்ளே
இருப்பதெல்லாம்
தனிமையில் நீ உலரும்
வார்த்தைகள்தாம்
இந்த சூனியத்தில் இருப்பது
உனது ஊமையாய்ப் போன அதரங்கள்
அசைந்தாடும் சல்மலர் கொத்தில்
தெரிவதெல்லாம்
பிரியாத உனது நெஞ்சம்தான்
நீ எனக்கு எழுத வேண்டாம்
முத்தங்களால் அலங்கரித்து
பிள்ளைகளை
நான் பாடசாலை அழைத்துப்
போகிறேன்
நீ எனக்கு எழுத வேண்டாம்
எனது இதயத் துடிப்பினால்
இரத்த நாளங்கள் பின்னி
பாழடைந்த மேடையூடே
என் மூச்சு சந்தித்தது
நீ இல்லாதபோது இந்நாட்களில்
என் துணிவு கட்டிஎழுப்பிய
தூண்டுதல் உயிரூட்டியது
அதனால்
நீ எனக்கு எழுத வேண்டாம்

**மூலம் :**
**பராக்கிரம கொடிதுவக்குவின்**
**Red roses Blue roses**

Manpred Jergsan **(மன்பிரட் ஜேர்க்ஸன்)**

**தமிழில்:**
**மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்**

# ஞானம் சஞ்சிகைக் காலம் (9)



- தி. ஞானசேகரன்

## அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா சிறப்பிதழ்

ஞானம் சஞ்சிகையின் 2004 பெப்ரவரி (45 ஆவது) இதழ் அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா சிறப்பிதழாக மலர்ந்தது. அந்த எழுத்தாளர் விழா பற்றியும் சிறப்பிதழ் பற்றியும் வாசகர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் அந்த இதழின் ஆசிரியர் தலையங்கமும் இதழின் உள்ளடக்கம் பற்றிய விபரமும் இங்கு தரப்படுகிறது

அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா ( ஆசிரியர் தலையங்கம்)

இனப்பிரச்சினையினால் ஏற்பட்ட வன்முறைகளின் பாதிப்பினால் இலங்கையைவிட்டுப் புலம் பெயர்ந்து ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களில் வாழ்பவர்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என வழங்கப் படுகின்றன. இதனால் இவ்விலக்கியங்கள் ஈழத்து இலக்கியத்தின் ஒரு பகுதியாகவும் கொள்ளப்படுகின்றன.

ஆரம்பத்தில் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் கருப்பொருளாக, பிரிந்துவந்த மண்ணின் ஏக்கம், பிரிந்து வந்த உறவுகள் பற்றிய ஏக்கம், பிரிந்து வந்த சுற்றாடல் சமூகம் பற்றிய ஏக்கம், அவற்றால் ஏற்பட்ட இழப்புகள் ஆகியவை இடம்பெற்றன. அவற்றின் சித்திரிப்பை இவ்விலக்கியங்களில் தத்ரூபமாகக் காணமுடிந்தது. சொந்த மண்ணில் இருக்கும்போது தெரியாத பலவிடயங்கள் தூர இருந்து பார்க்கும்போது படைப் பாளிகளின் கண்களில் துலாம் பரமாகத் தெரிந்தன. இவை புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் முதற் கட்ட எழுத்தாக அமைந்தன.




இரண்டாவது கட்டத்தில் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் 'புகலிட இலக்கியமா'கப் பரிணாமம் பெற்றது. வேறுபட்ட ஒரு கலாசாரச் சூழலில் தம்மைப் பொருத்திக்கொள்ளப் போராடும்போது எப்படியெல்லாம் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை இந்த இரண்டாவது கட்ட இலக்கியங்கள் பேசுகின்றன. இந்தப் 'புகலிட இலக்கியம்' என்ற சொற்பிரயோகம் புலம் பெயர்ந்தவர்களாலேயே ஏற்படுத்தப்பட்டது.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்று கூறும்போது, அதில் மக்கள் முன்னிலைப்படுகின்றனர். 'புகலிட இலக்கியம்' என்று கூறும்போது அங்கு வாழ்விடம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த நிலை - மக்கள் பிற மண்ணில் வேரூன்றுகிறபோது அவர்களுக்கு வாழ்விடம் முக்கியத்துவம் பெறுவது - அவர்களை அறியாமலே அத்தகைய மனநிலை ஏற்படுவது இயல்பானதாகி விடுகிறது.

புகலிடத்தில் குடியுரிமை பெற்றவர்கள் எவ்வளவுதான் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அந்நாட்டு வாழ்க்கை முறையில் வாழ்ந்தாலும் அந்நாட்டு வெள்ளைக்காரப் பிரஜைக்கு ஈடாக முடியாது. இவர்களது நிறம் பரம்பரை பரம்பரையாக இவர்களில் ஒட்டிக்கொண்டே இருக்கும். இவர்கள் வேற்று மனிதர்கள் என்பதைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கும். இவர்களது சந்ததியினர் நாங்கள் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்களது தாய்மொழி யாது? என்று கேட்கின்ற காலம் ஒன்று வரும்.

இவற்றின் காரணமாக இவர்கள் பற்றிய இலக்கியங்கள் தொடர்ந்தும் ஈழத்துப் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் பகுதியாகவே இருக்கும்.

இத்தகைய பின்னணியில், பண்பாட்டு ரீதியிலும் வேறு காரணங்களினாலும் தமிழ் மொழியின் தேவையை, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த நம்மவர்கள், அவர்கள்

வாழும் நாடுகளில் பல்வேறு முறைகளில் தமிழ்ச் செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு தழிழைக்கட்டிக்காக்கும் பணிகளிலும் முயன்று வருகின்றனர். இம்முயற்சிகளில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் பங்கு மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது.

புகலிட இலக்கியவாதிகளால் ஏராளமான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதப்படுகின்றன. புகலிட நாவல்களாக ஏறத்தாழ பதினைந்து நாவல்கள் வெளிவந்துள்ளன. புலம்பெயர் நாடுகளிலிருந்து கையெழுத்துப் பத்திரிகைகள் முதல் அச்சுப்பத்திரிகைகள் வரை நூறு இதழ்கள் வெளிவந்துள்ளதாக ஒரு கணிப்புக் கூறுகிறது. (இவற்றுள் பல இப்போது நின்றுவிட்டன.) இவை, புகலிட இலக்கியம் ஓர் ஆரோக்கியமான நிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. இந்த இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய புலத்தை, புதிய சிந்தனைகளை, புதிய பொருட்பரப்பினை, புதிய வெளிப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தி நிற்கின்றன.

இத்தகைய முயற்சிகளின் பிறிதொரு அங்கமாக புலம்பெயர் நாடுகளில் அவ்வப்போது எழுத்தாளர் விழாக்கள், ஒன்று கூடல்கள், புத்தகக் கண்காட்சிகள் முதலியனவும் நடை பெற்று வருகின்றன. அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் தமிழ் எழுத்தாளர் விழாக்கள் பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதில் இலக்கிய ஆய்வரங்கம். புத்தகக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி. கவியரங்கம், இசையரங்கம், கலை அரங்கம் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு வருடமும் நூறு எழுத்தாளர்கள்வரை இந்த விழாக்களில் பங்கு கொள்கின்றார்கள் என அறிகின்றோம்.

இந்த வருடமும் 25-01-2004இல், கன்பரா மாநிலத்தில் இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த விழாக்களைச் சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்திவரும் விழா அமைப்பாளர் திரு. லெ. முருகபூபதி பாராட்டுக்குரியவர்.

இவ்விழா சிறப்புற வாழ்த்தி, இந்த இதழை 'அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா'ச் சிறப்பிதழாக விழாவிலே வெளியிடுவதில் ஞானம் பெருமையடைகிறது.

இந்த இதழில் பின்வரும் ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன:

(1) அவுஸ்திரேலிய நான்காவது எழுத்தாளர் விழா நடைபெறும் கன்பரா ஓர் அறிமுகம் (கட்டுரை -நல்லைக்குமரன்(2) மண்புழு (சிறுகதை -தி. ஞானசேகரன்) (3) அவுஸ் திரேலிய எழுத்தாளர் விழா- ஒரு கண்ணோட்டம் (நேர்காணல் -லெ. முருகபூபதியுடன்)(4) ஒலிபரப்புத் துறையில் கின்னஸ் சாதனை படைத்த இன்பத்தமிழ் வானொலி (நேர்காணல் -பாலசிங்கம் பிரபாகரனுடன்)(5) காங்கேயம் (சிறுகதை - செங்கை ஆழியான்)(6) இழுபறி (கவிதை- கவிஞர் புரட்சிபாலன்(7)பாதையும் பாதமும் கவிதை - குறிஞ்சி இளந்தென்றல்(8) நேர்காணல்- பேராசிரியர் சிவத்தம்பியுடன்) (9)பவள விழாக்காணும் கவிஞர் அம்பி ( கட்டுரை - அருண்விஜயராணி (10) அம்மனின் சீற்றம்(கவிதை - முல்லைமணி (11)தமிழின் அடையாளம் பேணும் முயற்சிகள் ( கட்டுரை - ரஸஞானி) (12) பா(ழ்...?)ல்.......! (கவிதை- ஜமுனா)(13)புலம் பெயர்ந்த நாடுகளில் புலம்பெயரும் சமூகங்கள் (கட்டுரை - பாமதி பிரதீப்) (14) சமுதாய அரங்க நடவடிக்கையாக முடக்கம் நாடகம் (கட்டுரை -தே. தேவானந்) (15)புலம் பெயர் கவிதைகளில் அகதி உணர்வு நிலை ( கட்டுரை - செ. சுதர்சன்) (16) ஓடிய நாட்களும் ஓடும் நானும் ( கவிதை- வே. தினகரன்) (16) ஈழத்துப் புகலிட இலக்கிய வளர்ச்சி ( கட்டுரை- கலாநிதி செ. யோகராசா) (17) வெறுவாக்கிலங் கெட்ட சீவியம் (கவிதை- கவிஞர் செ. குணரத்தினம்) (18) சிட்னியில் தமிழ்நாடகங்களும் இலக்கியப்பவரின் பங்களிப்பும் (கட்டுரை - செ. பாஸ்கரன்) (19) காலையென்னும் கோழிக்குஞ்சு ( கவிதை - சோலைக்கிளி)(20) தமிழ் தெரியாத தமிழ்ச் சமூகம்( கட்டுரை- எம். தேவகௌரி)

* * * *

## சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பிதழ்

ஞானம் சஞ்சிகையின் 2011 ஜனவரி (128ஆவது) இதழ் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடுச் சிறப்பி தழாக வெளியிடப்பட்டது. அந்த மாநாடு பற்றி யும் சிறப்பிதழ் பற்றியும் வாசகர்கள் அறிந்து கொள்வதற்கு, அந்த இதழின் ஆசிரியர் தலையங்கமும் இதழின் உள்ளடக்கம் பற்றிய விபரமும் இங்கு தரப்படுகிறது.

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011இல் 'ஞானம்' இலக்கிய இயக்கத்தின் பங்கு (ஆசிரியர் தலையங்கம்)

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒன்றினை நடத்தவேண்டும் என்ற எண்ணக்கரு 2006 ஆண்டளவில் தோன்றியது. புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளரான லெ. முருகபூபதி கடந்த பத்து வருடங்களாக எழுத்தாளர் விழாக்களை அந்தநாட்டில் நடத்தி வருபவர். அவர் இலங்கைக்கு வந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் மல்லிகைப் பந்தலில் அவருக்கு ஒரு தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. அப்போது மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் அவஸ்திரேலியாவில் வருடாவருடம் எழுத்தாளர் விழாக்களை நடத்திவரும் நீங்கள் ஏன் சர்வதேச ரீதியில் ஓர் எழுத்தாளர் விழாவை இலங்கையில் நடத்தக்கூடாது? என்ற கேள்வியை முன்வைத்தார். அந்த எண்ணக் கருவே சர்வதேச எழுத்தாளர் மாநாடு நடை பெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

இந்தச் சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்துவதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் 2010 ஜனவரி மூன்றாம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. அதில் நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் 80ற்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், நாடகவியலாளர்கள், கலைஞர்கள் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை தெரிவித்தனர். சர்வதேச எழுத்தாளர் விழாவை நடத்துவதற்கான ஓர் நிர்வாகக் குழுவும் அன்று தெரிவு செய்யப்பட்டது. இந்தக் குழுவில் உலகளாவிய ரீதியில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்தத் தெரிவில் தி.ஞானசேகரனுக்கு இலங்கை இணைப்பாளர் என்ற பதவி ஏகமனதாக வழங்கப்பட்டது. உண்மையில் இது ஞானசேகரன் என்ற தனிமனிதனுக்கு வழங்கப்பட்ட பதவியல்ல. ஞானம் சஞ்சிகை ஆசிரியருக்கு வழங்கப்பட்ட பதவி.

ஞானம் சஞ்சிகை தொடங்கி பத்துவருடம் நிறைவுற்ற நிலையில் 'ஞானம்' ஓர் இலக்கிய இயக்கமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. சர்வதேசரீதியில் அறிமுகம் பெற்றிருக்கிறது. ஞானத்தின் பின்னால் அதன் எழுத்தாளர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், ஆர்வலர்கள் என ஓர் அணி இருக்கிறது. இவர்களின் ஒன்றிணைந்த பலம் ஞானம் ஆசிரியராகிய என்னை உற்சாகத்துடன் இயங்க வைத்தது.




சர்வதேச ரீதியில் மாநாடு ஒன்றை நடத்துவதானால் அதற்கு ஒரு காரியாலயம் வேண்டும். அங்கு பணியாற்ற ஒரு லிகிதர் வேண்டும், தொடர்பாளர் வேண்டும். இது பற்றிய எந்தவொரு ஒழுங்கும் செய்யப்படாத நிலையில்தான் நான் இயங்கவேண்டியிருந்தது. 'ஞானம்' காரியாலயம் சர்வதேச எழுத்தாளர் மாநாட்டுக் காரியாலயமாக இயங்கத் தொடங்கியது. உலகெங்கிலும் உள்ள கலை இலக்கியவாதிகள் எந்நேரமும் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஞானத்தின் தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல், தொடர்புகள் பாவிக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவில் இருக்கும் பிரதம அமைப்பாளருடன் எந்த நேரமும் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் ஞானம் காரியாலயத்திலிருந்து தனியானதொரு நேரடித் தொலைபேசி வசதியும் ஒழுங்கு செய்யப்பட்டது. மாநாட்டினை நடத்துவதற்கென ஒரு செயற்குழு கொழும்பில் அமைக்கப்பட்டது. மாநாட்டிற்கான செயற்குழுக் கூட்டங்கள் ஞானம் காரியாலயத்தில் ஒவ்வொருவாரமும் இடம்பெற்றன.

மாநாடு நடத்துவதற்கான இடமாக கொழும்புத் தமிழ்ச்சங்கம் தெரிவு செய்யப்பட்டது. கொழுப்புத் தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்கள் பலர் மாநாட்டுச் செயற்குழுவிலும் முக்கிய அங்கத்துவம் வகித்து மாநாட்டை சிறப்புற நடத்த ஏற்பாடு செய்தனர்.

வெளிநாட்டு பேராளர்களுக்கான தங்குமிட வசதி, மாநாட்டு ஆய்வரங்குகள், கலை நிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்கு செய்யப்பட்ட நிலையில் சில விஷமப் பிரசாரங்கள் தமிழகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டன.

'இந்த மாநாட்டின் பின்னணியில் இலங்கை அரசு இருந்து இயங்குகின்றது. அரசு கொடுத்த பணத்திலேயே இந்த மாநாடு நடக்கப்போகிறது' என இவர்கள் பொய்ப்பிரசாரம் செய்தனர். இந்தமாநாட்டை பகிஷ்கரிக்கும்படி எழுத்தாளர்களிடையே பரந்த ரீதியில் கையெழுத்து வேட்டை நடத்தினர்.

திரு.லெ.முருகபூபதி வெளிநாட்டு ஊடகங்களில் இப் பொய்ப் பிரசாரத்தை முறியடிப்பதில் திறமையாகச் செயற்பட்டார்.

இணைப்பாளர் என்ற முறையில் நானும் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்க முயற்சிகளை மேற்கொண்டேன். ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்ட இணையத்தளங்களில் எனது நேர்காணல்கள் 'களத்திலிருந்து பேசுகிறோம்' என்ற தலைப்பில், பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கப் பயன் படுத்தப்பட்டன.

கோவை ஞானி முதுபெரும் எழுத்தாளர். 'தமிழ்நேயம்' என்ற அமைப்புத் தலைவராக விளங்குவார். இந்த அமைப்பில் நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். நான் தொலைபேசியில் கோவை ஞானியுடன் தொடர்பு கொண்டேன். அரைமணிநேரம் அவருடன் பேசி அவருக்கிருந்த ஐயங்களைத் தீர்த்து வைத்தேன், அவர் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு, நடக்கவிருக்கும் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தனது ஆதரவைத் தருவதாக வாக்களித்ததோடு தம் வாழ்த்தையும் தெரிவித்தார். தனது தமிழ்நேயம் அமைப்பி னர்கள் யாவருக்கும் சுற்றுநிருபம் அனுப்பி இந்த மாநாட்டுக்கு ஆதரவு அளிக்கும்படி வேண்டி னார். இந்தச் செயற்பாட்டால் தமிழக எழுத்தாளர் களின் எதிர்ப்பு அலைகள் ஓய்ந்துபோயின.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்தச் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளைக் களத்திலிருந்து மேற் கொள்ள எனக்கு உறுதுணையாக நின்ற சகல ருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க இந்த ஆசிரியர் பக்கத்தை உரிமையுடன் பயன்படுத்துகிறேன். இந்த உரிமையை எக்களித்த ஞானம் இலக்கிய இயக்கத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துத் தமிழன்னையின் பாதங்களில் இந்தச் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பு மலரினைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்தச் சிறப்பிதழில் பின்வரும் படைப்புகள் இடம் பெற்றிருந்தன: (1) புரியாத பார்வைகள் (சிறுகதை - எம். கே. முருகானந்தன்) (2) திறனாய்வில் மார்க்சியத்தின் தளமும் விரிவும் (கட்டுரை - பேராசிரியர் சபா. ஜெயராசா(3) ஓவியம் சிரித்தது (கவிதை - கல்கிதாசன்)(4) பலஸ்தீனத்தாய் (கவிதை - எம். எச்.முகம்மது நளீர்) (5) காட்டிலிருந்து வந்தவன்( சிறுகதை - சுதாராஜ்)(6) ஊர் அவலம் அல்லது பணயம் (கவிதை - கல்வயல் வே. குமாரசாமி) (7) அரசியலும் தமிழ்க் கவிதையும் (கட்டுரை - மு. பொ) (8) மீண்டும் பனை முளைக்கும்? (சிறுகதை - மு. சிவலிங்கம்) (9) வடமிழுக்கும் வண்ணத்தமிழ் - கலாபூஷணம் கவிஞர் பதியதளாவ பாறூக் (10) கள மாற்றங்கள் (சிறுகதை - கே. ஆர். டேவிட்) (11) நஸ்ருல் என்றொரு எரிநட்சத்திரம் (கட்டுரை - தீரன். ஆர். எம். நௌஸாத்) (11)கொடுத்ததில் இதைவிடக் கூடியதில்லையே (கவிதை - கிண்ணியா ஏ. எம். எம். அலி(12)கூறு நண்பனே கூறு(கவிதை - யாழ். அஸீம்)(13) துறக்கம், இடைக்கம், இறக்கம் ....(சிறுகதை - அல் அஸூமத்) (14)மலையக பழமொழிகள், சிறுபாடல்கள், சொற்றொடர்கள் பற்றிய ஒரு குறிப்பு (கட்டுரை - மொழிவரதன்) (15) பிள்ளை மடுவத்தை நோக்கி...(சிறுகதை- பிரமிளா பிரதீபன் (16) யார் காப்பார் (கவிதை- கலாபூஷணம் மூதூர் கலைமேகம்) (17) கடைசிப்பயணம் (சிறுகதை - புன்னியாமீன்) (18) வத்துக்குளம் (சிறுகதை - அகளங்கன்) (19) வாய்பேசா ஊமைகளாய் வாழவிட்டார்(கவிதை- புசல்லாவை குறிஞ்சிநாடன்)(20) நாணயம் (சிறுகதை - வி. ஜீவகுமாரன்)(21)மெல்லத் தமிழினி ...(கவிதை - ஜின்னாஹ் ஷரிபுத்தீன்(22) உயிர்ப்பிற்கான துடிப்பும் கல்லறை நோக்கிய யாத்திரையும்(கட்டுரை - கே. விஜயன்)(23) திசைதோறும் துலங்கிய நட்சத்திரம்(கட்டுரை - அஷ்ர.ஃப் சிஹாப்தீன்) (24)வரலாற்றை மாற்றிய காதல் (சிறுகதை - கேணிப்பித்தன் ச.அருளானந்தம் (25)பழைய பேய்களும் புதிய பிசாசுகளும்(கவிதை - ச. முருகானந்தன்)(26) அரச மரமும் விழுதுகள் விடும்! (கவிதை - கொற்றை பி. கிருஷ்ணானந்தன் (27)சற்றே தள்ளியிரும் பிள்ளாய்( கவிதை - கொற்றை பி. கிருஷ்ணானந்தன் (28) தமிழ் இணையம் - இன்றல்ல அன்றே(கட்டுரை - மானா மக்கீன்) (29) இகழ்ச்சிக்குரியோன் இவன்! (கவிதை - நியாஸ் ஏ ஸமத்) (30)ஈழத்து தமிழ் இலக்கியம் (கட்டுரை-கா.தவபாலன்) (31)சுடாதேங்கோ! (சிறுகதை- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்)(32)எங்கள் அன்புத் தம்பி (கவிதை - சமரபாகு சீனா. உதயகுமார்) (33) என்னவள் நீதானே!(சிறுகதை - திருமலை வீ. என். சந்திரகாந்தி (34)பொட்டியெல்லாம் வந்திற்ராம்( சிறுகதை - எஸ். முத்துமீரான்) (35)ரோஸ்மேரி எஸ்டேட் அப்பர் டிவிசன் (சிறுகதை -- மலரன்பன்) (36)செவ்விதாக்கமும் தமிழ் இலக்கியமும்(கட்டுரை - தெளிவத்தை ஜோசப்)(37) விளம்பரம் (குறுங்கதை - வேல் அமுதன்)

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்



## பாடிப் பறந்த இசைக்குயில்

அண்மையில் வந்த ஒரு பெரும் சோகச் செய்தி, இசை ரசிகர்களை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. இந்தியாவின் புகழ் பெற்ற பாடகி லதா மங்கேஷ்கரின் மறைவு, இசையுலகில் ஒரு பேரிழப்பாகும். ஹேமா என்ற இயற்பெயரைக் கொண்ட அவர், தமது தந்தையின் நாடகம் ஒன்றில் லதா என்ற பாத்திரத்தில் நடித்துப் புகழ் பெற்றமையால், காலப்போக்கில் லதா மங்கேஷ்கர் ஆகிவிட்டார். 1942 முதல் இசைத்துறையில் ஓர் இசைக்குயிலாக அவர் பவனிவந்துள்ளார். லதா மங்கேஷ்கரைத் தெரியாதவர்கள் இல்லை என்னும் அளவுக்கு, தமது இனிய குரலால் அவர் உலகப் புகழைச் சம்பாதித்துக்கொண்டார். அவரது சகோதரிகளுள் ஒருவரான ஆஷ்லா போஷ்லேயும், தமது அக்கா லதா மங்கேஷ்கரைப் போல் ஒரு புகழ் பெற்ற பாடகியாகவே விளங்குகிறார். லதா திருமணம் செய்யாமலே இருந்து, இசையை மட்டும் காதலித்தார்.

எனது பத்து வயது முதலாக லதா மங்கேஷ்கரின் பாடல்களை நான் கேட்டு வந்திருக்கிறேன். நான் முதன்முதலாகக் கேட்ட லதா மங்கேஷ்கரின் பாடல், ஹிந்தித் திரைப்படம் ஒன்றிலிருந்து தமிழுக்கு "டப்" பண்ணப்பட்ட வானரதம் என்ற படத்தில் இடம்பெற்ற "எந்தன் கண்ணாளன் கரை நோக்கிப் போகிறான் நதியே நீ மெல்லப் போ, மெல்ல மெல்ல மெல்ல மெல்ல மெல்ல மெல்ல நதியே..." என்ற பாடலாகும். இந்தப் பாடல் உட்படச் சில பாடல்களை லதா மங்கேஷ்கர் தமிழிலும் பாடியுள்ளார். அவரது சகோதரி ஆஷா போஷலேயும் தமிழில் சில பாடல்களைப் பாடியுள்ளார்.

லதா மங்கேஷ்கர் இந்திய சினிமாவின் மிக உயர் விருதான தாதா சாஹேப் பால்கே விருது உட்படப் பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர். இந்தியாவின் மிகச் சிறந்த நடிகரான சிவாஜிகணேசனுடன், மிகச் சிறந்த பாடகியான லதா மங்கேஷ்கர் ஓர் உடன்பிறவாச் சகோதரி போலவே பழகிவந்தார். தமிழ்நாட்டுக்கு லதா மங்கேஷ்கர் வருகை தரும்போதெல்லாம் சிவாஜிகணேசன் வீட்டுக்குத் தவறாமல் சென்று வருவது வழக்கம். ஒருமுறை லதா சிவாஜி வீட்டுக்குச் சென்றபோது, சாப்பாட்டு நேரம் மேசையில் குயில் கறியும் இருந்தது. சிவாஜிக்குக் குயில் கறி மிகவும் பிடித்தமானது. அதைப் பார்த்த இசைக்குயிலான லதா மங்கேஷ்கர், இனிமேல் குயில் கறி சாப்பிடவேண்டாம் என்று சிவாஜியிடம் அன்பாக வேண்டிக்கொண்டார். சிவாஜியும், தம் உடன்பிறவாச் சகோதரிக்காகக் குயில் கறி சாப்பிடுவதை விட்டுவிட்டார்.

சிவாஜிகணேசன் இந்தியாவின் சிறந்த நடிகராக இருந்தபோதிலும், உயர் விருதான தாதா சாஹேப் பால்ஹே விருது, மிகக் காலம் தாழ்த்தியே அவருக்குக் கிடைத்தது. எத்தனையோ பேருக்கு அவ்விருதைக் கொடுத்துக் களைத்தபின் தான் சிவாஜிகணேசனுக்கு அவ்விருது வழங்கப்பட்டது.. அவ் உயரிய விருது அவருக்குக் கிடைப்பதற்கு அரும்பாடு பட்டவர்கள், மூவர். ஒருவர் இயக்குநர் பாலச்சந்தர். மற்றவர் பழம்பெரும் நடிகர் ஏ. நாகேஸ்வரராவ். மூன்றாமவர் லதா மங்கேஷ்கர். இம்மூவரின் முழு முயற்சியினால், ஓர் அரும்பெரும் கலைஞருக்கு அவ்விருது கிடைத்தது.

லதா மங்கேஷ்கரின் பூத உடல் இன்று இல்லாவிடினும், அவரது இசை உடல் இவ்வுலகில் என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கும். பாடிப் பறந்துசென்ற அந்த இசைக்குயிலின் இனிய ஓசை, என்றும் மனித மனங்களையும், செவிகளையும் நிரப்பிக்கொண்டே இருக்கும்.

## தமிழ்த்துறையின் நாடக ஆய்வரங்கு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, தனது 5 ஆவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாட்டைக் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இணையவழி ஊடாக நடத்தியது. ஈழத்தில் தமிழ் நாடக இலக்கியம் என்ற தலைப்பில் இவ் ஆய்வு மாநாடு நடைபெற்றது. பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தனின் தலைமையின் கீழ் நடைபெற்ற இம்மாநாட்டில், பிரதம விருந்தினராக, அப்பல் கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமாவன்சவும், சிறப்பு விருந்தினராகக் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி ஈ.எம்.பி.சி.எஸ். ஏக்கநாயக்கவும் கலந்து சிறப்பித்தனர். தமிழ்த் துறை விரிவுரையாளர் ஆன் யாழினி வரவேற் புரையை நிகழ்த்தினார். ஈழத்தில் தமிழ் நாடக இலக்கியம் ஆய்வுக்கோவை என்ற நூலின் முதல் பிரதியும் அன்றைய நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. இவ் ஆய்வரங்கின் ஆதார சுருதி உரையைப் பேராசிரியர் மௌனகுரு வழங்கினார்.

இவ் ஆய்வு மாநாட்டில் ஆறு அரங்குகள் இடம்பெற்றிருந்தன. சுவாமி விபுலானந்த அடிகள் அரங்கு, வண. கிங்க்ஸ்பரி தேசிகர் அரங்கு, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அரங்கு, பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கு, பேராசிரியர் கா. சிவத்தம்பி அரங்கு, வித்துவான் க. சொக்கலிங்கம் அரங்கு என அவற்றுக்குப் பெயரிடப்பட்டிருந்தன. ஒவ்வொரு அரங்குக்கும் முறையே "வெளி" ரங்கராஜன், அம்ஷன்குமார், ப்ரசன்னா ராமசாமி, பிரளயன், முனைவர் கி. பார்த்திபராஜா, முனைவர் ஆர். ராஜு ஆகியோர் தலைமை தாங்கினர். ஒவ்வொரு அரங்குக்கும் மதிப்பீட்டாளர்களாக முறையே பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், பேராசிரியர் துரை. மனோகரன், பேராசிரியர் வ. மகேஸ்வரன், கலாநிதி சோதிமலர் ரவீந்திரன், கலாநிதி சி. ஜெயசங்கர், பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோர் பணியாற்றித் தமது கருத்துரைகளை வழங்கினர்.

ஆய்வரங்கில் 29 பேர் ஆய்வுக் கட்டுரை களைச் சமர்ப்பித்திருந்தனர். ஒவ்வொரு கட்டுரையும் ஈழத்துத் தமிழ் நாடகம் தொடர்பான ஆய்வுரீதியிலான பயனுள்ள தகவல்களையும், மதிப்பீடுகளையும் வழங்கியது. ஆய்வரங்கு நிகழ்ச்சிகளைக் கலாநிதி செ. சுதர்சன் தொகுத்து வழங்கியதோடு, நன்றியுரையையும் நவின்றார். இந்நாடக ஆய்வரங்கு சிறப்பாக அமைய ஆவன செய்த பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தனையும், தமிழ்த்துறை விரிவுரை யாளர்களான கலாநிதி செ. சுதர்சன், ஆன் யாழினி சதீஸ்வரன், வி. விமலாதித்தன் உட்பட, தமிழ்த்துறை சார்ந்த அனைவரையும் பாராட்டி, நன்றி தெரிவிப்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

## நாவலர் நூற்றாண்டிலாவது...

"வசன நடை கைவந்த வல்லாள"ரான ஆறுமுக நாவலர் சமயத்தோடு தமிழுக்கும் செய்த சேவைகள் அளப்பரியன என்பது யாவரும் அறிந்ததே. அவற்றுள் ஒன்று, உரைநடையில் குறியீடுகளை ஒழுங்காகப் பயன்படுத்தும் நடைமுறையை அறிமுகப்படுத்தியமையாகும். அவரது அத்தகைய சிறந்த வழிகாட்டல், தமிழுக்கு மேலும் செழுமை சேர்த்தது.

ஆயினும், இலங்கையைச் சேர்ந்த சில புலம் பெயர் பெண் சிறுகதை எழுத்தாளர்கள் (எல்லோரும் அல்லர்) குறியீடுகளைப் பயன் படுத்துவதில் மிகவும் அசட்டையாகச் செயல் படுவதை அவதானிக்க முடிகிறது. அவர்களது சிறுகதைகள் நன்றாகவே இருக்கின்றன. ஆனால், குறியீடுகளைப் பயன்படுத்துவதில் கோட்டை விட்டுவிடுகிறார்கள். முற்றுப்புள்ளியை ஒழுங்காகப் போடத் தெரிந்திருக்கிறார்கள். வினாக் குறியும் போடத் தெரிந்திருக்கிறது. ஆனால், முக்கியமாகப் பாத்திரங்கள் பேசும்போது இரட்டை மேற்கோள் குறிகள் பயன்படுத்துவது அவசியம் என்பதை அவர்கள் ஏனோ கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். கதை நன்றாக இருந்தால் போதும்தானே என்ற அலட்சிய மனோபாவம் தான் அதற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

சாதாரண மக்கள் தவறு விட்டால், மன்னிக் கலாம். ஆனால், ஆனானப்பட்ட எழுத்தாளர்களே குறியீடுகளைப் பயன்படுத்தத் தெரியாமல் அசட்டையாக இருப்பது மன்னிக்கக்கூடிய செயலா? இந்த நாவலர் நூற்றாண்டிலாவது குறியீட்டுத் தவறு விடும் எழுத்தாளர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல். தமிழ் அவர்களை மன்னிக்காது.

○○○

**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்





## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடாத்திய இரா.உதயணன் இலக்கிய விருது விழா – 2019.

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து ஒழுங்கு செய்த எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது விழா 2019 மற்றும் பிரபல ஊடகவியலாளர் கலாபூஷணம் கே. பொன்னுத்துரையின் அகவை 70ஆவது நூல் வெளியீட்டு விழாவும் 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர் சாகித்தியரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா கலந்து கொண்டார். பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கலாகீர்த்தி உடுவை தில்லை நடராஜா, வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன், ஐ. இராசரத்தினம் மற்றும் அதிதிகள் உரை நிகழ்த்துவதையும், நூலின் முதற் பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதையும், விருது பெற்றோரையும் படத்தில் காணலாம்.

●●●



எம்.வை.எம் நஸீர் எழுதிய "கல் -எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்" நூல் வெளியீட்டு விழா 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல் எலிய தௌபீக்ஸன்ஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் எம்.வை.எம் நஸீரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் அருகில் விசேட அதிதிய கலந்து கொண்ட எம்.எம் முஹம்மத் (நளீமி) தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர், நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சிறப்பித்த ஏ.எச்.எம் கலீல்,எம்.ஏ.ஏ நூறுல்லாஹ் (நளீமி) ஆகியோரையும் காணலாம்.




●●●

எங்கள் இசை நாடக மரபின் உயர் தனி ஆளுமை நடிகமணி கலாநிதி வி.வி.வைரமுத்து அவர்களின் மேலான நினைவுகளை காக்கும் வகையில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மருங்கில் மக்கள் கலைஞர் அமைப்பினால் நிறுவப்பட்ட சிலைத் திறப்பு விழா சென்ற புதனன்று இடம்பெற்றது. அமைப்பின் தலைவர் கிருஷ்ணபிள்ளை மனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் வைபவத்தின் முதன்மை விருந்தினராகக் கலந்து உருவச்சிலையை திறந்துவைத்தார். சிறப்பு விருந்தினர்களாக வலிவடக்கு பிரதேச செயலர் திரு ச.சிவஸ்ரீ, நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு.கு.விபுலன், கனிஷ்ட வித்தியாலய அதிபர் திருமதி வசந்தராணி சுதர்சன்,வலி-வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இவ்வைபவத்தில் சிற்பக் கலைஞர் க. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் நடிகமணியின் அடிச்சுவட்டில் இசை நாடகக்கலையில் மிளிர்ந்த நடிகமணியின் மூத்தபுதல்வி திருமதி வசந்தா உட்பட மூத்த, இளம் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இசை, நடன, இசை நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றன.





●●●

## வலம்புரி கவிதா வட்டம் மறைந்த வகவம் ஸ்தாபக பொதுசெயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டி–2020 பரிசளிப்பு விழா

வலம்புரி கவிதா வட்டத்தின் வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் மறைந்த கவிஞர் கவின் கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதை போட்டி 2020, மற்றும் பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (13) காலை. கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்றபோது "கவின் கமல்" நினைவு மலரை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நிலையத்தின் தலைவர் டாக்டர்.தாஸிம் அகமதிடமிருந்து பெறுவதையும் நிலையத்தின் ஏனைய உறுப்பினர்களான டாக்டர்.எம்.எச். நூர்தீன்,மேமன் கவி, கலைக் கமல், ஆகியோர்களுடன் சிறப்பதிதியாக கலந்து சிறப்பித்த பிரபல வர்த்தகர், எஸ்.ரவீந்திரன் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.



○○○

# வாசகர் பேசுகிறார்

நான் கௌசி. நீங்கள் நடத்திய இலக்கியப் போட்டியில் என்னுடைய கட்டுரைத் தொகுப்புக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டிருப்பதை முகநூல் மூலம் அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. தங்களுக்கும் நடுவர் குழுவினர்க்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்புடன் **கௌசி (ஜேர்மனி)**

●●●

ஞானம் இதழ் நடத்திய இலக்கியப் போட்டியில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தைச் சேர்ந்த திரு எஸ். பத்மநாதன், திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு குரு அரவிந்தன் ஆகிய மூவருக்குப் பரிசுகள் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். முதற்தடவையாகக் கனடா எழுத்தாளர் இணைய அங்கத்தவர்கள் மூவர் ஒரே போட்டியில் பரிசு பெற்றதையிட்டுப் பெருமைப்படுகின்றோம். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுக்கும் மதிப்பளித்தமைக்காகக் கனடா எழுத்தாளர் இணையத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன் **குரு அரவிந்தன்–தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.**

●●●

இம்மாத ஞானம் சஞ்சிகை கிடைக்கப் பெற்றேன், மிக்க மகிழ்ச்சியும் நன்றிகளும். ஆசிரியர் பக்கம் மக்கள் நலம்காக்க 'கோவிட் -19 இன் ஒமிக்ரோன் திரிபு ஐந்தாவது அலையின் ஆரம்பம்' ஆசிரியரின் நல்லெண்ணத்தைக் காட்டுவதாய் உள்ளது. எனது அன்புக்குரிய ஏ.பீர் முகம்மது அவர்கள் பற்றிய அட்டைப்பட அதிதி கட்டுரை அவரைப்பற்றி மேலதிக சிறப்புக்களைத் தந்தது. திரு. செங்கதிரோன் அவர்கட்கும் நன்றி. ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு. ஞானசேகரன் ஐயாவின் 80ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய இலக்கியப் போட்டி முடிவுகள் பற்றிய விபரங்கள் மிகவும் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தன. ஐயாவுக்கும் குடும்பத்தினருக்கும் மிக்க நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பரிசு பெறும் அத்தனை படைப்பாளிகளுக்கும் வாழ்த்துக்களுடனான பாராட்டுக்கள். மற்றும் ஞானம் சஞ்சிகைக்காலம், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் யாவும் படிக்க இதமாக, தரமாக இருந்தன. வாழ்க, வளர்க ஞானம் என மனநிறைவுடன் வாழ்த்துகிறேன். **–நிலா தமிழின் தாசன், நிலாவெளி**

●●●

ஞானம் 260ம் இதழில் எனக்கு அட்டைப்பட கௌரவம் வழங்கிக் கௌரவித்துள்ளீர்கள்.

அவ்வகையில் தங்களுக்கும் என்னைப் பற்றிய அறிமுகத்தை வழங்கிய நண்பர் "தமிழ்மணி" அகளங்கன் அவர்களுக்கும் எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தொலைபேசியூடாகத் தெரிவித்திருந்தேன். அவ்விதழ் பற்றி 30-01-2022 அன்று நடைபெற்ற இணையவெளிக் கருத்தாடல் நிகழ்விலே கலந்துகொண்டவர்கள் பலரும் தாங்கள் எனக்களித்த அக் கௌரவம் தொடர்பாகக் குறிப்பிட்டதோடு என்னையும் பாராட்டியிருந்தனர். அடுத்த ஞானம் இதழிலே (இதழ்261இல்) "வாசகர் பேசுகிறார்" பகுதியில் எனது மதிப்புக்குரிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்களும், கலைமாமணி கா. தவபாலன் அவர்களும் என்னை வாழ்த்தியிருந்தார்கள். இவர்களனைவரும் என்மீது புலப்படுத்தியுள்ள இப்பேரன்புக்கு எனது நன்றியையும் மனநிறைவையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஞானத்தின் கலைஇலக்கியப் பயணம் சிறப்புடன் தொடர வாழ்த்தும்,

**– நா. சுப்பிரமணியன் (ஒஷாவா, கனடா)**

●●●

பெப்ரவரி ஞானம் 261ஆவது இதழ் கிடைத்தது. சில ஆழமான விடயங்கள் இதழை காத்திரமான இதழாக்கி உள்ளது கண்டு மகிழ்ந்தேன். கலாபூஷணம் பீர்முகம்மது அவர்கள் பற்றிய கட்டுரை செங்கதிரோனின் கட்டுரை யார் இந்த ஏ. பீர்முகம்மது என்பதை காட்டி நிற்கிறது. பேராயர் எஸ்.ஜெபநேசனின் நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள் கட்டுரை அவரது நேர்மையான பார்வையைச் சொல்கிறது. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களின் கலாசார எழுத்தறிவு ஒரு புது விடயமாகப் படுகிறது. தமிழன் வாழ்வியலுடன் கலந்த மார்க்கம் (கோத்திரன்) சைவம், இந்து போன்ற சொற்றொடர்களின் வரலாற்றுப் பின்னணியை தகுந்த ஆதாரங்களுடன் விளக்க முயல்கிறது. உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள். **– மொழிவரதன்**

○○○